உ

கடவுள் துணை.

# அழகியமணவாளதாசரென்கிற திவ்வியகவி, பிள்ளைப்பெருமாளையங்கார் இயற்றிய,

# திருவேங்கடத்தந்தாதி

மூலமும்,

(20456)

பின்னத்தூர்,

அ. நாராயணசாமிஐயன்

எழுதிய,

உரையும்.

இவை,

தஞ்சாவூர்:
ஜீ. எஸ். மணியா அண்ட் கம்பேனியாரவர்களது
கலியாணசுந்தரம் முத்திராசாலையில்
பதிப்பிக்கப்பெற்றன.

1906.

V. B. SUBRAHMANIYASARMA
TAMIL-PANDIT.

உ

கடவுள்துணை.

அமிழ்தினுமினிய தமிழியலறிந்த அறிவினர்களே! இத்திருவேங்கடத்தந்தாதியிலுள்ள துறைப்பொருளுக்கு ஒழுங்கான இலக்கணங் கூறாமல் சிலர் மாறுபாடாகத் துறைக்குறிப்புக்களெழுதிவிடுகின்றார்கள்; அதற்குக்காரணம் இக்காலத்தில் பொருளிலக்கணஆராய்ச்சி பெரிதும் குறைவுபட்டிருப்பதேயாம்; ஆதலால் அவற்றின் இலக்கணப் பகுதிகளைச் சிறிதுவிளக்கி எழுதவேண்டியது அவசியமாக நேர்ந்திருக்கிறது; இதுபற்றியானெழுதியவைகளில் பிழைகள் உள்ளனவெனினும் கல்வியறிவில் மிக்கயாவரும் கருணைகூர்ந்து பொறுத்தருள்வதோடு அவற்றை முக்கியமாகக் கவனிக்கவும்வேண்டுகிறேன்.

திருவேங்கடத் தந்தாதி,

## பொருட்பகுதி விளக்கம்.

பொருள்:—அதாவது அகப்பொருள், புறப்பொருள் என இருவகைப்படும். அவற்றுள்:—

அகப்பொருளாவது, ஒத்த அன்பினராகிய தலைவனும் தலைவியும் தம்முள் கூடுகின்றகாலத்துப்பிறந்து அக்கூட்டத்தின்பின்னர் அவ்விருவராலும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப்புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய் எப்பொழுதும் உள்ளத்துணர்வாலேயே அனுபவிக்கப்படுகிற இன்பமாகும். இன்பம்பற்றி அகத்தேநிகழும் ஒழுக்கத்தை அகமென்றது ஆகுபெயர்; [அகம் - உள்.] அதனிடத்துத்தலைவராக வரப்பெறுவார் இருவர்; அவர் பாட்டுடைத்தலைவன் கிளவித்தலைவனெனப்படுவர். அவருள் பாட்டுடைத்தலைவன் பெயர்கூறலாம்; கிளவித்தலைவன்பெயருடையவனாகவும் அவன்தெய்வமாகவும் வருதல்கூடாது. மனிதர்களே கிளவித்தலைவராகவரப்பெறுவாரென்பதையும்அப்படிவருவதும் தம்தம் திணைப்பெயராலே கூறப்படுவாரென்பதையும் மனிதரல்லாத தேவரும் நரகரும் தலைவராகக்கூறப்படாரென்பதையும் "மக்க ணுதலிய வகனைந் திணையுஞ், சுட்டி யொருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்" (தொல்-பொருள் - 54.) என்னுஞ் சூத்திரத்தாலும் அதனுரையாலும் அறிக. திணைப் பெயர்கள்:— வெற்பன், குறும்பொறைநாடன், ஊரன், புலம்பன், விடலை என்பனவாம்.

பாட்டுடைத்தலைவன் கிளவித்தலைவன் இவர்களுக்கு உதாரணம்:— 'திருவேங்கடநாதன் மலையிலிருக்கிறசிலம்பனே' 'வேங்கடத்தான்நாட்டிலிருக்கிற ஊரனே' திருவேங்கடத்தான்கடல்துறையிலுள்ள புலம்பனே' இவற்றுள் திருவேங்கடத்தான் பாட்டுடைத்தலைவன்; சிலம்பன், ஊரன், புலம்பன் இவர்கள் கிளவித்தலைவராவார்கள்.

புறப்பொருளாவது, முற்கூறியவிதியைக்கடந்து தேவரைக்கிளவித் தலைவராகவைத்துச் செய்யுள்கூறினால் அது புறப்பொருளெனப்படும். உதாரணம்:—'திருவேங்கடநாதர் நமதுதலைவியை அணையவந்திலரே' 'திருவேங்கடத்தாரே யான் காமத்தால் வருந்துகிறேன் என்னைக் கண்பாருமே' 'தோழியரே எனக்குக்காமந்தாங்கவில்லை என்னைத்திருவேங்கடத்தான் சன்னிதியிற்சேர்ப்புமே' என்றாற்போலப்பாடுதலெல்லாங்

கொள்க. இப்படித்தேவரைக்கிளவித்தலைவராகவைத்துச் செய்யுள்கூறுவதற்கு "காமப் பகுதி கடவுளும் வரையார், ஏனோர் பாங்கினு மென்மனார் புலவர்" (தொல் - பொரு - 83.) என்னுஞ் சூத்திரத்தாலும் அதனுரையாலும் அறிந்துகொள்க. [புறப்பொருள் பலவகையாகப்பகுக்கப் பட்டிருப்பினும் இங்குக்கூறுவது இவ்வந்தாதியின் துறைப்பொருள் சம்பந்தப்பட்டவரையிலெனக்கொள்க.]

திணை :—இங்ஙனம் பாடுவதெல்லாம் பாடாண்திணையெனப்படும்; அஃதாவது :—ஒருவனை ஒருவன் பாடலும், புகழ்தலும், ஒருபொருளை விரும்பிக்கேட்டலும், பிறவுமாம். ஆண்மகனைப்பாடுதலமைந்ததிணை பாடாண்டிணையாகும்.

பகுதி :—பாடாண்டிணைக்கு உட்பகுதிபலவிருப்பினும் இந்நூலுட் கூறப்படுவன இரண்டேயாம் : அவையாவன :—கடவுளை மானிடமாதர் காதலித்தபகுதியும் குழவிக்கட்டோன்றியகாமப்பகுதியுமாம். அவற்றுள், கடவுளை மானிடமாதர் காதலித்தபகுதியாவது :—தெய்வத்தை மானிடப் பெண் விரும்பினதாகச்செய்யுள்செய்வது; இதனையே கடவுண்மாட்டு மானிடப்பெண்டிர் நயந்தபக்கமென்பர்.

குழவிக்கட்டோன்றிய காமப்பகுதியாவது :—காமச்சுவையறியாத இளம்பிராயமுள்ள ஒருவனிடத்தில் சிலமாதர்கள் விரும்பிக்கூறுவதாகச்செய்யுள்செய்வது. இப்படி விரும்பிக்கூறுதலில் வெளிப்படையாகக் காமத்தைப்புலப்படுத்தாமல் கூறுவதற் குறிப்பானுண்டென்னும்படி பாடுவது. இதற்கு "குழவி மருங்கினுங் கிழவ தாகும்" (தொ - பொ - 84.) என்றதுவிதி.

துறை :—அகத்திணைப்பயிற்சி பெரும்பான்மையர்க்கு உண்டாயிருத்தலினால் புறத்திணைக்குரிய மேற்கூறிய இரண்டனுள்ளும் அகத்திணைத் துறைநயங்களை அமைத்துச் செய்யுள்செய்வது பண்டைக்காலந்தொட்டுப் பயின்றுவருவதாகக்காணப்படுகிறது. அத்துறைகள், அகத்திணைத் துறைகள்போலக் காணப்படினும் பொருளிலக்கண ஆராய்ச்சியாற் காண்பவருக்குப் புறத்திணையாவதன்றி அகத்திணையாதல் ஒருவழியாலும் பெறப்படுதலில்லையென்றறிந்துகொள்க.

உள்ளுறைப்பொருள் :—தெய்வசம்பந்தமாக உள்ளுறையுவமம் சொல்லப்படாதென்பது தொல்காப்பியனார் கொள்கை; அஃது :—"உள்ளுறை தெய்வ மொழிந்ததை நிலனெனக் கொள்ளு மென்ப குறியறிந் தோரே" (தொ - பொ - 47.) என்னுஞ்சூத்திரத்தாலறிக. இதனை அறியாதசிலர் தெய்வசம்பந்தமாக உள்ளுறைப்பொருள் கற்பித்தெழுதுவது இலக்கணவழுவாதலறிக.

மெய்ப்பாடு :—புணர்ச்சியின்பத்தாற்பிறக்கும் மெய்ப்பாடே அகமெய்ப்பாடு; அல்லாதன புறமெய்ப்பாடுகள். இங்குத்தெய்வவிஷயமாகக்கூறுகின்றமையால் அதற்குரிய பக்தியினால் கண்ணீர்வடிதல் மெய்ம்மயிர்சிலிர்த்தல் முதலிய சிலவன்றிப்பிறகூறுதல் குற்றமாமென்க.

அவ்வண்ணமே இந்நூலுட்கூறுந்துறைகளுள்,

கடவுளை மானிடமாதர் விரும்பியபகுதி :— ௯, ௧௦, ௧௨, ௪௫, ௧௧, ௪௮, ௫௦, ௫௧, ௫௫, ௫௪, ௫௯, ௭௨, ௭௮, ௯௯ இந்தத்துறைகளேயாம்.

குழவிக்கட் டோன்றிய காமப் பகுதி :— ௯௭, இந்த ஒருதுறையேயாம். இதனைத் தெய்வக்குழவியில்லாமையால் மக்கட்கேயாக்கிப் பின்னைத்தமிழுக்கு விதியாக அமைத்தாராமெனின் பிறப்புடைய கடவுளருக்கு உண்டென்றுகொண்டு உமாதேவியார் இலக்குமிதேவியார் குமா

ரக்கடவுள் இவர்களுக்கெல்லாம் பிள்ளைத்தமிழ்கூறுதல் ஆன்றோர்வழக்காதலன்றியும் மாயோனை ஆழ்வாராதியர் பிள்ளைத்தமிழ்விதியால் தாலசப்பாணிமுதலியன கூறியிருப்பதாலும். அங்ஙனமேஇக்குமாயோனமிசமாகிய கண்ணபிரானிடத்தில் ஆயர்மகளிர் விரும்பியதாகப் பொருள்கொள்க; இதனை "குழையணி மங்கையரிறில் காமங், குழவி மருங்கிற் கூறிய பகுதி" எனபர் இலக்கணவிளக்கமுடையார்.

அகப்பொருள்:—(கக) ஆம் துறை ஒன்றுமேயாம். இது புறப்பொருளின்பாற்படுக்கவும் அகப்பொருளின்பாற்படுக்கவும் அமையுமாயினும் யான் அகப்பொருளிடைவைத்தே பொருள்கூறினேன். ஆழ்வார்பிரபந்தத்திற்குப் பூர்வாசாரியர்கூறியவைபோல், இவற்றிற்கும் உரைகூறினால் குற்றமாகாதோவெனில் அவ்வாசாரியர்கள் கூறியவை இலக்கணவிதிக்கு ஒக்குமெனில் கொள்ளலாம்; இலக்கணவரம்புகடந்துள்ளவற்றை மேற்கோளாககி ஆசாரியமரியாதைக்கு, அவற்றையே மேற்கொள்ளவேண்டுமெனில் இலக்கணமென்பது வேண்டாம; எனப்போக்கேசிறந்ததாகும். இதிற்கூறுதனவற்றைச சடகோபரந்தாதி முகவுரையிற் கூறியிருக்கிறேன. அங்குக்கண்டுகொள்க.

## துறைவிவரம்.

(கூ) பிரிந்த தலைவி வருந்தியது அறிந்த, கேள்கிளர் கோதை தோழி புலம்பல்:— பருவமுடைய விவாகமாகாத சிறந்த ஒருதலைவியை அப்படியே சிறப்புற்ற ஒருதலைவன் தனியிடத்து எதிர்ப்பட்டு ஊழ்வினையினால் ஒருவரை யொருவர் மோகித்துக்கூடுதல் காந்தர்வ விவாகமெனப்படும். அங்ஙனம் இயற்கையாகப் புணர்ந்த தலைமகன் மீட்டும் அவளைச் சேரவேண்டித் தாமிருவரும் கூடுதற்குக் குறிப்பிட்ட இடத்தில் அந்தத் தலைவி வந்திருப்பதைத் தன் தோழனால் அறிந்து அவளைக் கூடுதல் பாங்கற் கூட்டமெனப்படும். அங்ஙனம் பாங்கற் கூட்டத்துப் புணர்ந்த தலைமகன் தலைவியின் உயிர்த்தோழியை யறிந்து அவளை வசஞ்செய்துகொண்டு அவள் மூலமாகத் தலைவியைக்கூடுதல் பாங்கியிற்கூட்டமெனப்படும். முற்கூறியவாறு கூடிய தலைவன் ஒருபொழுது பிரிதலும் அதனை ஆற்றாததலைவி வருந்த அந்த வருத்தத்தை யறிந்த தோழி புலம்புவது இத்துறையென்க.

(க0) மாலவிழ் கோதை கடலொடு புலம்பல்:—அங்ஙனம் தலைவனைப் பிரிந்த தலைவி கடலைநோக்கி புலம்புவதாம்.

(கஉ) தலைவி. தலைமகனூர்க்குச் செலவொருப் படுதல்:— அங்ஙனம் பல முட்டுப்பாடுகள் நேர்வதனால் களவிலிருந்தும் கல்யாணஞ்செய்துகொள்ள விரும்பிய தலைவி அதன்குறிப்பாகத் தலைமகனிருக்கும் ஊரில் தன்னைக் கொண்டுபோய் விடும்படி சொல்லுதலாகும்.

(கரு) பூங்கொடி துயர்கண்டு பாங்கி புலம்பல்:— தலைவன் பிரிதலால் விரகத்தை யாற்றாததலைவி வருந்துவதைக் கண்டதோழி அவ்வருத்தத்தைத் தலைவன்கேட்கப் புலம்புதல்.

(கக) புலம்புறு தலைவி நலந்தொலை வறிந்து, பிதிர்நகிற் பாங்கி மதியோடு புலம்புதல்:— அப்படிப் புலம்புகின்ற தலைவியின் சரீரம் காமவிகாரத்தினால் வேறுபடுவதை யறிந்த தோழி சந்திரனைநோக்கிப் புலம்பிக்கூறுதல். இத்துறை தலைவியிடத்துள்ள குணங்களெல்லாம் சந்திரனிடத்திருப்பனவாகச் சிலேடித்துக் கூறப்பட்டுள்ளது.

(சஅ) தலைவன் தலைவியைத் தானணைந்திலனென், றலைவுறு பாங்கி நிலைதளர்ந் துரைத்தல் ;— தலைவன் தலைவியைச் சேரவில்லையென்று தோழி புலம்புதல்.

(ரு๐) மாதர்பைங் கிளியைத் தூது விடுத்தல் :— தலைவனை யணையப்பெறாத தலைவி தலைவனுக்குச் சொல்லும்படி கிளியைத் தூதுவிடுத்தல்.

(ருக) தலைவி பாங்கியர்க் கறத்தோடு நிற்றல் :— தலைவனைப் பிரிந்ததனால் வருந்திய தலைவியின் சரீரம் வேறுபடுதலும் அதனையறிந்த செவிலித்தாய் இவ்வேறுபாடு எதனாலுண்டாயிற்றென்று கவலைகொண்டு சேரியிற் பெரிய கிழவியை (அறிவோரையுமாம்.) அழைத்துவந்து பார்க்கும்படிசெய்ய அவளும் குறிபார்த்து வேறொன்றும் கூறப்படாதஉயர்ந்தகுலமாதலால் இது தெய்வத்தினாலாயிற்றென்றாள் ; அப்பொழுதே வேலனை, (பூசாரியை), அழைத்துத் தெய்வத்திற்குப் பூசைபோடத் தொடங்கலும அறிந்ததலைவி வேலன்முகமாகத் தெய்வம் வெளிவந்து உண்மையைச்சொல்லிவிட்டால் எல்லாரும் பழிப்பதற்கிடமாகுமே யென்றஞ்சி அப்பூசையை நடவாமல் தோழியரைக்கொண்டு நிறுத்தும்படி உத்தேசித்துக் குறிப்பா லுணர்ந்துகொள்ளுமாறு கூறுதல்.

(ருரு) பூங்குழை துயர்கண்டு பாங்கி யிரங்குதல் :— முன் 15-ம் பாடலிற் கூறியதை இங்குக் கூறிக்கொள்க.

(ருச) ஐயனைநோக்கிக் கையற வுரைத்தல் :—தலைவனைநோக்கித தான் காமத்தால் வருந்துவதைக் கூறுதல். கையறவு - செயலறுதல்.

(ருகூ) வெறிவிலக்கியபெழி, பாங்கி செவிலிக் கறத்தோடு நிற்றல்:- இதன் கருத்து அவ்வைம்பத்தொன்பதாஞ் செய்யுளுரையின்கீழ் எழுதப்பட்டிருப்பதைக் காண்க.

(எஉ) தலைவன் பிரிதலுந் தனியுறை தலைவி, சிலைநுதற் பாங்கியர்க்கு நிலைதளர்ந் துரைத்தல் :-- தலைவனைப் பிரிந்த தலைவி காமவிகாரத்தால் தன்னிலைகடந்து வெளிப்படுத்திக் கூறுதல்.

(எஅ) போதணி குழலி தூது விடுத்தல் :— தலைவனைப் பிரிந்த தலைவி தன்வருத்தமிகுதி சொல்லி நாரையைத் தூதுவிடுத்தல்.

(கூக) தலைவன், ஏதங் கூறி இரவுவரல் விலக்கல் :— முற்கூறியபடி களவுப் புணர்ச்சியில் தலைவன் ஊக்கங்கொண்டிருப்பதை யறிந்த தோழி இது வெளிப்பட்டால் தீங்குநேருமேயென்றஞ்சிப் பலமுகத்தாலும் அங்ஙனம் வாராதபடி மறுத்துக்கூறுகின்றவள் அவன் வருகிறமார்க்கத்திலுள்ள கொடிய விலங்குகள் அவனைத் துன்பஞ்செய்யுமோவென்றஞ்சி மறுத்தனளென்பதாம். இது நன்குமதியாமையால் வழுவாயினும் அன்பு மிகுதியாற் கூறுதலின் வழுவமைதியாயிற்று.

(கூகூ) காம மிக்க கழிபடர் கிளவி :— தலைவனைப் பிரிந்த தலைவி காமமிகுதியால் கடலைநோக்கிப் புலம்புதல் ; இது தலைவியின் செய்கையைக் கடலொடு சிலேடித்துக் கூறியது.

(கூஎ) கண்ணனை ஆயர் சிறுமியர் கழறுதல் :— கண்ணபிரான் இளம்பிராயத்தில் தெருவில் இடைப்பெண்கள் மணல்வீடுகட்டி விளையாடுதலைக்கண்டுசென்று அதனை அழித்தனன். அப்பொழுது அப்பெண்கள் இவன் செய்கைகளிற் சிலவற்றை எடுத்துக்காட்டி வழக்கிட்டுக் கூறுதல்.

---

V. B. SUBRAHMANIYASARMA
TAMIL-PANDIT.

உ

கடவுள் துணை.

# திருவேங்கடத்தந்தாதி.

திரு - மேன்மையாகிய, வேங்கடத்து - வேங்கடத்தினது, அந்தாதி - அந்தத்தை ஆதியாக உடையதொரு நூலென்பதாம். எனவே திருவேங்கடத்தினது சம்பந்தமாகப் பாடியதொரு பிரபந்தமென்க.

திரு - இது வேங்கடத்துக்கு அடைமொழி; வேங்கடம் - இது திருமாலின் நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்றாகவும் வடநாட்டுத்திருப்பதிகள் பன்னிரண்டனுள் முதலதாகவும் சொல்லப்படும். வேம் - பாவம், கடம் - எரித்தல், எனவே பாவத்தை எரித்துப்போக்குந்தன்மையது என்க; இவை வடசொல். அந்தம் + ஆதி = அந்தாதி; வடமொழித் தொடர், தீர்க்கசந்தி, அந்தம் - இறுதியை, ஆதி - முதலாகவுடையது; எனவே முகற்பாட்டின் அந்தத்தை அடுத்தபாட்டின் ஆதியாகவுடையதொரு நூலென்று பொருள்பட்டு அன்மொழித்தொகையாயிற்று. வேங்கடத்தந்தாதி, மவ்வீறொற்றழிந்து அத்துச்சாரியைஅகரங்கெட்டுப் புணர்ந்து வருமொழிமுதல் உயிர்வர அத்துச்சாரியையின் ஈற்று உகரம் ஓடிற்று. அந்தாதியின் இலக்கணம் "நூறு வெண்பாநூறு கலித்துறை, கூறுதல் நூற்றந் தாதிக் கோளே" என்ற இலக்கண விளக்கச்சூத்திரத்தாலும் "பத்தாதி நூறந்தம் பல்சந்த மாலையாம், ஒத்தாய வெண்பா வொருநூறு - ஒத்தசீர், அந்தாதி யாகுங் கலித்துறையு மவ்வகையே, வந்தாலதன்பே ரவை" என்றவச்சணந்திமாலையாலுமறிக. இந்நூல் முற்கூறிய அந்தாதித்தொடையா லமையப்பெற்ற நூறு கட்டளைக்கலித்துறைகளையுடையது. அந்தாதி-சொற்றொடர்நிலை. கட்டளைக்கலித்துறையின் இலக்கணம்:—"அடியடிதோறுமைஞ்சீராகி,முதற்சீர்நான்கும்வெண்டளைபிழையாக், கடையொரு சீரும் விளங்கா யாகி,நேர்பதி னாறே நிரைபதினேழென், றோதினர் கலித்துறை யோரடிக் கெழுத்தே" என்பதனாலறிக. இந்நூலுட் பயின்றுவருவனவெல்லாந் திரிபாகவும் சில துறைகள் யமகமாவுமுள்ளன. திரிபு - முதலிரு சீருள் முதலெழுத்தன்றிமற்றையெழுத்துக்கள் ஒன்றிவருவது. யமகம் - முதலெழுத்துஞ்சேர ஒன்றிவருவது.

திருவேங்கடத்து எம்பெருமான் திருநாமம் - திருவேங்கடத்தான், அப்பன், ஸ்ரீனிவாசன்.
தேவியார்—அலர்மேல்மங்கைத்தாயார்.
விமானம்—ஆனந்தநிலை விமானம்.
தீர்த்தம்—சுவாமி புஷ்கரிணி, கோனேரிதீர்த்தம்.
சன்னிதி—கிழக்குநோக்கிய சன்னிதி.
கோலம்—நின்றதிருக்கோலம்.
பிரத்தியக்ஷம்—தொண்டைமான் சக்கரவர்த்திக்கும், குமாரக்கடவுளுக்கும் பிரத்தியக்ஷமாம். இந்தப்பதி ஆழ்வார் பதின்மராலும் பாடப்பெற்றுள்ளது.

## சிறப்புப்பாயிரம்.

இது சிறப்பித்துக் கூறும் வரலாற்று முறையென்பதாம். எனவே நூல் செய்தான் பெயரும் காரணமும் நூற்பயனுங் கூறுவதாம். அவற்றுள் இப்பாடல் ஆக்கியோன் பெயரும் பயனுங் கூறுகின்றது. இதனை வைஷ்ணவர்கள் தனியன் என்பார்கள்.

இக்கரை யந்திரத் துட்பட்ட தென்ன விருவினையுட்
புக்கரை மாநொடி யுந்தரி யாதுழல் புன்பிறப்பா
மெக்கரை நீக்கிப் படித்தாரை யந்த விருவிரசைக்
கக்கரை சேர்க்கு மணவாள தாச னருங்கவியே.

உரை:—மணவாளதாசன் - அழகிய மணவாள தாசரது, அரும் கவி - அரியபாடல்கள், படித்தாரை - தம்மைப் பாடமாகப் படித்தவரை,— இக்கு - கரும்பானது, அரை - அரைக்கின்ற, யந்திரத்துள் - ஆலை யந்திரத்துக்குள், பட்டது என்ன - அகப்பட்டுக் கொண்டது போல, இருவினையுள் - நல்வினை தீவினையென்னு மிரண்டனுள், புக்கு - புகுந்து, அரையா நொடியும் - அரைமா என்னும் அளவினதாகிய சிறிது பொழுதும், தரியாது - தங்காமல், உழல் - சுழலுகின்ற, புல் பிறப்பாம் - அற்பப்பிறவியாகிய, எக்கரை - மணல்மேட்டைவிட்டு, நீக்கி - விலகச்செய்து, அந்த———, இருவிரசைக்கு - பெரிய விரசாநதியினது, அக்கரை - அப்பாலிருக்கிறகரையி லுள்ளபரமபதத்தை, சேர்க்கும் - அடையப்பண்ணும்; (எ - று.)

மணவாளதாசருடைய பாடல்களானவைதம்மை யார் படிக்கிறார்களோ அவர்களுடைய பிறவியாகிய மணல் மேட்டை விட்டு விலகச் செய்து அவரை விரஜாநதிக்கு அக்கரையிலுள்ள பரமபதத்தை அடையப் பண்ணும் என்பதாம். கவி - எழுவாய். சேர்க்கும் - பயனிலை. இக்கு - வடசொற்றிரிபு; இக்கு - சீவராசிகளுக்கும், யந்திரம் - இருவினைகளுக்கும் உவமை. புன் பிறப்பு - பண்புத்தொகையில் முன்னின்ற மெய் திரிந்தது. எக்கர் - இறுதிப்போலி. படித்தார் - வினையாலணையும் பெயர். அந்த - அகரச்சுட்டின் மரூஉ. அக்கரை - பரமபதத்திற்கு இடவாகுபெயர்.

நல்வினையானது நல்ல சுவர்க்க பதவியைக் கொடுக்குமேயானாலும் புண்ணியம் முடிந்தவுடன் பிறப்பிற் செலுத்தலால் இரண்டையும் உடன் கூறினர். அரைமாநொடி - ஒரு நொடியில் நாற்பதில் ஒரு பங்கு. விரசாநதி - பரமபதத் தருகிலுள்ளது; அந்நதிக்கு இக்கரையளவும் பிரகிருதி சம்பந்தமான உலகங்களும் அக்கரையில் பரமபதமுமுள்ளனவாதலால் பரமபதத்திற்குப் போபவர் விரஜா நதியில் முழுகிப் பிரகிருதி சம்பந்த மொழிந்து திவ்விய தேகத்தை யுடையவர்களாகி நித்திய சூரிகளா லெதிர்கொண் டழைக்கப்படுவா ரென்பது நூற்றுணிபு. இப்பாடல் - அபியுக்தரில் ஒருவர் செய்தது. (க)

## காப்பு.

காப்பு - காத்தலென்னும் பொருளது. இது ஆழ்வாருள் சிறந்த நம்மாழ்வாரைக்குறித்தது. நம்மாழ்வார் திருமாலின் அம்சமாதலால் அவரை வணங்குவது கடவுள் வணக்கத்தின் பாலதேயாம். கடவுள்

வணக்கம்-வழிபடு கடவுள் வணக்கமென்றும், ஏற்புடைக் கடவுள் வணக்கமென்றும் இருவகைப்படும்; அவற்றுள் இது தம்மதத்திற்குரிய கடவுளின் அம்சமாகிய அடியாரையே வணங்குதலால் வழிபடு கடவுள் வணக்கம் என்க.

நல்லவந் தாதி திருவேங் கடவற்கு நான்விளம்பச்
சொல்லவந் தாதின் வழுப்பொருட் சோர்வறச்சொல்வித்தருள்
பல்லவந் தாதிசை வண்டார் குருகைப் பரசமயம்
வெல்ல வந்தாதி மறைதமி ழாற்செய்த வித்தகனே.

உரை:—பல்லவம் - தளிர்களிலும், தாது - மகரந்தங்களிலும், இசை - இராகம்பாடுகின்ற, வண்டு - வண்டுகள், ஆர் - பொருந்திய, (சோலை சூழ்ந்த), குருகை - திருக்குருகூரென்னும் பதியில், பரசமயம் - அன்னிய மதங்களை, வெல்ல - ஜயிக்க, வந்து - அவதரித்து, ஆதி - முதன்மையாகிய, மறை - வேதத்தை, தமிழால் - தமிழ்ப்பாடல்களால், செய்த - பாடியருளிய, வித்தகனே - ஞானவடிவத்தையுடைய நம்மாழ்வாரே! திருவேங்கடவற்கு - திருவேங்கடநாதன்மீது, நல்ல———, அந்தாதி-அந்தாதியென்னும் பிரபந்தத்தை, நான்-----,விளம்ப - சொல்ல, சொல் அவம் - சொற்குற்றமும், தாதின் வழு - முதனிலைக்குற்றமும், பொருள் சோர்வு - பொருட்குற்றமும், அற - நீங்க, சொல்வித்து அருள் - பாடும்படி செய்தருள்; (எ - று.)

குருகூரி லவதரித்த நம்மாழ்வாரே! திருவேங்கடமுடைய எம்பெருமான்மீது யான் பாடும் அந்தாதியில் யாதும் பிழைவாராமல் நீங்கும்படி காத்தருள்வீராக எனபதாம்.

நல்ல - நன்மையென்னும் பண்படியாகப்பிறந்த குறிப்புப்பெயரெச்சம். விளம்ப என்னுஞ் செயவெனெச்சம் சொல்வித்தருளென்னும் பிறவினையொடு முடிந்தது. அவம், வழு, சோர்வு இவற்றுள்ள உம்மைகள் தொக்கன, செய்யுள் விகாரம். சொல்வித்து, வி - பிறவினை விகுதி. ஆர்குருகை - வினைத்தொகை; குருகை - குருகூரென்பதன் மரூஉ. பரசமயம் - வடசொற்றொடர்.

மனிதப்பிறவியுடையார்க்கு மறதியுடைமையால் அதனால் நேர்கின்ற சொற்குற்ற முதலியன நீங்க என்றார். நீங்க என்றதனால் இயல்பாகவே உண்டாயிருக்குமென்றும் அத்தகையகுற்றம் கடவுளும் கடவுளை போல்வாரும் நீக்கவேண்டுமென்றும் ஏனைப் பேதைமை நிலையார் பிறர்நூலை யிகழ்ந்து கூறுதல் இம்மைக்குப் பழியும் மறுமைக்கு நரகுந்தருமென்பதும் விளங்கிக்கிடந்தமை காண்க.

## நூல்.

திருவேங் கடத்து நிலைபெற்று நின்றன சிற்றனையாற்
றருவேங் கடத்துத் தரைமே னடந்தன தாழ்பிறப்பி
னுருவேங் கடத்துக் குளத்தே யிருந்தன வுற்றழைக்க
வருவேங் கடத்தும்பி யஞ்சலென் றோடின மால்கழலே.

உரை:—மால் - திருமாலின், கழல் - திருவடிகளானவை, திருவேங்கடத்து - திருவேங்கட மலையென்னுந் திருப்பதியில், நிலைபெற்று - நிலைகொள்ளப்பெற்று, நின்றன - நிற்கலாயின; சிற்றன்னையால் - சிறிய தா

யாகிய கைகேசியால், தரு - மரங்கள், வேம் - வேகின்ற, கடத்து - கொடியபாதையுடைய, தரை மேல் - பாலை நிலத்தின்மேல், நடந்தன - நடக்கலாயின; தாழ் பிறப்பின் - தாழ்ந்த பிறப்பினையுடைய, உருவேங்கள் - வடிவத்தையுடைய எங்களது, தத்துக்கு - ஆபத்தை நீக்குதற்கு, உளத்தே - எம் மனத்தில், இருந்தன - இருக்கலாயின; உற்று அழைக்க - துன்பமடைந்து அழைத்தபொழுது, கடம் - மதநீர் பொருந்திய, தும்பி - யானையே ! வருவேம் - யாம் வருகின்றேம், அஞ்சல் - பயப்படாதே, என்று - என்று சொல்லிக்கொண்டு, ஓடின - ஓடலாயின; (எ - று.)

திருமாலின் திருவடிகள் திருவேங்கடத்து நின்றன; தரை மேல் நடந்தன; எம் உளத்தேயிருந்தன; அஞ்சாதே யென்றோடின வென்பதாம். இனி - ஓடின வென்பதைப் பெயரெச்சமாக்கி ஓடிய மால் கழலென்று கூறுவாருமுளர். இது இந்த நூலின் தலைவன் திருவடிகளின் சிறப்பைக் கூறினமையால் சீர்பாத வகுப்பென்னும் பெயர் பெற்றது. வேம் - வேகும் என்ற செய்யுமென் வாய்பாட்டு ஈற்றுயிர் மெய்கெட்டு நின்றது. உருவேங்கள், கள் - விகுதிமேல் விகுதி; தத்துக்கு - நோய்க்கு மருந்து போலக்கொள்க. கழல் - பால் பகா அஃறிணைப்பெயர்; பலவின்பால் முற்றைக்கொண்டது. திரு - பாலப் பொருத்தம். நின்றன, நடந்தன, இருந்தன இவை ஒன்றற்கொன்று மாறுபட்ட சொற்களாதலின் முரண் தொடையெனப் பெயர் பெறும். நின்றன என்றதனால் பெருமான் நின்ற திருக்கோலமெனக் கொள்க.

கைகேசியால் காட்டிற்குச் சென்றது:—இராவணாதியரை அழிக்கும் பொருட்டு மாயோன் அயோத்தியில் தசரத சக்கரவர்த்திக்கு மைந்தனாகிய இராமபிரானாக அவதரித்து மிதிலையில் சீதாபிராட்டியாரை விவாகஞ்செய்துகொண்டு மகிழ்ந்து இருக்கு நாளில் அரசன் தன் மைந்தனுக்கு அரசுரிமையைக் கொடுத்தலும் அவ்வரசன் இளைய மனைவி கைகேசி யென்பவள் தன் மகன் பரதனுக்குப் பட்டம் கொடுக்கவேண்டுமென்றும் இராமபிரான் 14-வருஷம் காட்டிற் போயிருக்க வேண்டுமென்றும் அரசனிடத்தில் கட்டளைபெற்று அப்படியே கூற அதன் நிமித்தமாக தன் மனைவி சீதாபிராட்டியுடன் காடுசென்றருளினனென்பதாம்.

யானை காத்த கதை:—தேவலனென்னும் முனியைக் கந்தருவரில் ஊகு என்பவன் சின மூட்டி அவரால் சபிக்கப்பெற்று முதலைவடிவடைந்து ஒரு மடுவிலிருக்கு நாளில் இந்திரத்துய்மனென்னு மரசன் அகத்தியரால் சபிக்கப்பெற்று யானை வடிவடைந்து அம்முதலை யிருக்கும் மடுவில் வந்து இறங்கலும் அந்த முதலை பிடித்துக்கொண்டது; அப்பொழுது யானை வருந்தி ஆதி மூலமே யென்று கதற எம்பெருமான் விரைந்து வந்து முதலையைக் கொன்று யானையைக் காத்தருளினனென்பதாம்.

மாலை மதிக்குஞ்சி யீசனும் போதனும் வாசவனு
நூலை மதிக்கு முனிவருந் தேவரு நோக்கியந்தி
காலை மதிக்குள்வைத் தேத்துந் திருமலை கைம்மலையால்
வேலை மதிக்கும் பெருமா னுறைதிரு வேங்கடமே.

உரை:—மாலை - மாலைக்காலத்தில்விளங்குகின்ற, மதி - சந்திரனை, குஞ்சி - சடையில்வைத்துள்ள, ஈசனும் - ருத்திரமூர்த்தியும், போதனும் - பிரமதேவரும், வாசவனும் - இந்திரனும், நூலை - சாஸ்திரங்களை, மதிக்கும் - ஆராய்ந்துமதித்தறிகிற, முனிவரும் - ரிஷிகளும், தேவரும்———,

உ

கடவுள் துணை.

# அழகியமணவாளதாசரென்கிற திவ்யகவி,

## பிள்ளைப்பெருமாளையங்கார் சரித்திரம்.

ஜாதி:—இவர் அந்தணர் மரபினர்.

இருந்த இடம்:—முதலில் மதுரையிலும் பிற்பாடு ஸ்ரீரங்கத்திலும் வசித்துவந்ததாகத் தெரிகிறது.

இவர்காலத்திய அரசர்கள்:—மதுரையில் திருமலைநாயக்கர்.

இவர் காலம்:—இற்றைக்குச சற்றேறக்குறைய 250 வருஷம் ஆகிறது.

இவர்காலத்திய வித்துவான்கள்:—உண்ணாமுலை எல்லப்பநயினார், கவிராஜசிங்கம்பிள்ளை, பரமேசுரப்புலவர், முதலானோர்கள்.

இவர் செய்த நூல்கள் :—1. திருவரங்கத்து ஊசற்றிருநாமம், 2. திருவரங்கக் கலம்பகம், 3. திருவரங்கத்து மாலை, 4. திருவரங்கத்தந்தாதி, 5. திருவேங்கடமாலை, 6. திருவேங்கடத்தந்தாதி, 7. நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி, 8. அழகரந்தாதி என்னும் எட்டுப்பிரபந்தங்கள்; இவற்றை அஷ்டப்பிரபந்தமென்பர்.

## இவரது வரலாறு.

மதுரையை அரசாண்ட திருமலைநாயக்கர் காலத்தில் அவரது அரண்மனையில் இராயஸம்என்கிற உத்தியோகத்திலிருந்துவந்த இந்நூலாசிரியர் எப்பொழுதும் திருவரங்கத்திலெழுந்தருளியிருக்கிற திருவரங்கநாதனிடத்தில் அன்புடையோராய்த் தாம்பயின்றுவருகிற தமிழ்க்கல்வி மேன்மேலோங்கிவளருமாறு அந்தக்கடவுளையேதுதித்துக்கொண்டிருந்தனர். அப்படியிருக்குநாளில் ஒருநாள் கணக்கு எழுதிக்கொண்டிருக்கும்பொழுது தமது உத்தரீயத்தை இரண்டுகையிலுங்கொண்டு 'கிருஷ்ணகிருஷ்ண' என்று தேய்த்தனர். அப்பொழுது அங்கிருந்துள்ள சிலர் ஐயங்காரைநோக்கி நீங்கள் இப்படிச்செய்ததன்காரணம் யாதென்றுவினவ ஐயங்காரும் இப்பொழுது அரங்கநாதன்சமீபத்திலுள்ள திருவிளக்கின் சுடர்தெறித்து எதிரிலுள்ளதிரையிற்பட்டுத் தீப்பிடித்துக்கொண்டது; அதனை அணைப்பவர் அங்கொருவருமில்லையாதலால் யான் இங்ஙனம் செய்யநேர்ந்தது என்றனர். பின்பு இவ்விஷயம் அரசனறிந்து வியந்து ஐயங்காரையழைத்து விசாரிக்க ஆசிரியரும் 'யான் மனத்தால் தியானித்தறிவதன்றி இன்னும் திருவரங்கத்தை நேரில் பார்த்ததில்லை' என இதனை அறிந்துவரவேண்டிச் சிலஒற்றரைத் திருவரங்கத்துக்கு வரவிடுப்ப அவர்களும்வந்து விசாரித்துச் சென்று பெருமாள் தேரிலேறியிருக்கிறகாலத்தில் முன்திரையில் நெருப்புப்பிடித்த

தாகவும் அப்பொழுது அருகிலுள்ள ஐயங்காரொருவர் அணைத்துவிட்ட தாகவும் தெவித்தார்கள். (இந்தக்கதை சைவசமயத்திலுள்ள சில பெரி யோர்கள் மேலேற்றியும் வைஷ்ணவசமயத்திலுள்ள சில பெரியோர் கள் மேலேற்றியும் கூறுவதுண்டு; எந்தமட்டும் உண்மையோ அது தெரியவில்லை.) அதுகேட்ட அரசன் வியந்து ஐயங்காரை யழைப்பித்து இதுவரையில் அவரைத் தான் நன்ருக அறிந்துகொள்ளாமைக்கு வருந் தி இனித் தங்களுக்கு நான் செய்யும் பணிவிடை யாதென்றுகேட்க ஆசிரியரும் "யான் எப்பொழுதும் திருவரங்கத்து அரங்கநாதன் சன்னி தியிலே யிருக்கும்படிசெய்க" என அப்படியே ஆசிரியர் வேண்டியவண் ணம் அரங்கநாதன் சன்னிதியிலே தினம் பிரஸாதமும் இருப்பதற்கு ஓர் அறையும் கொடுத்து உதவிபுரியும்படி கோயில்தலத்தார்க்குக் கட் டளை செய்தனன். ஐயங்காரும் அங்குப்போயிருந்து காலந்தோறும் தவருமல் அரங்கநாதனை வணங்கி அன்பின்மிகுதியால் இறைவன் மீது திருவரங்கக்கலம்பகம், முதலாகிய எட்டுப்பிரபந்தங்களைப்பாடி முடித்துத் தக்க பண்டிதர்கள் முன்னிலையில் அரங்கநாதன் சன்னிதி யில் அரங்கேற்றியபின்பு இச்சோழநாட்டில் உன்றுழலை எல்லப்பநயி ஞரென்னு மொருபுலவர் (எல்லப்பநாவலர் என்பவரிவரே) தமிழில் நல்லபாண்டித்திய முடையவராயிருக்கின்றனரென்று கேள்வியுற்றிருந் தமையால் அவரிடத்தில் காட்டவிரும்பித் தம்பால் கல்விபயிலும் ஒரு அந்தணர் மைந்தனிடத்தில் தந்நூல்களைக்கொடுத்து நயினரிடங் காட் டிவரும்படி விடுத்தனர். அப்படியேசென்ற பிராமணப்பையன் நயினு ரிருக்கும் இடத்திற்சென்று விசாரித்தலும் அப்பொழுது நயினர் வெளி யிற் சென்றிருந்ததனுல் அவர்மனைவியார் நேரில் விசாரித்து வந்தவிஷ யத்தையறிந்து மகிழ்ந்து யான்சிறிது கேட்கலாமோவென அந்தணனும் அப்படியேயாகவென்றுகூறி முதலில் திருவரங்கக்கலம்பகத்தையெடு த்து அதனிடையிலுள்ள,

"வாடியோட வனசமன்ன விருகண்வெள்ள மருவிபோல்
மருவியோட மதனன்வாளி யுருவியோட வாடையூ
டாடியோட வன்றிலோசை செவியிலோட வண்டுழா
யாசையோடு மெங்கள்பேதை யாவியோட வீதியோ
மோடியோட வங்கிவெப்பு மங்கியோட வைங்கரன்
முடுகியோட முருகனோட முக்கணீசன் மக்களைத்
தேடியோட வாணனு யிரம்புயங்கள் குருதிநீர்
சிந்தியோட நேமிதொட்ட திருவரங்க ராசரே."

என்றபாடலைப் படிக்கக்கேட்டுச் சிவநிந்தை மிகுதியாகவிரவியிருப்ப தற்குவருந்தி உடனே ஒருவாற்ருல்தேறி அவரைநோக்கி இப்படியே நம் நயினரவர்கள் திருவருணைக்கலம்பகமொன்று பாடியிருக்கின்றனர்; அதிலொருபாடலும் எனக்குநினைவிலுள்ளதென்று கூறி உடனே :—

"கருடனோட மச்சமாதி கமடமோட முற்கரங்
காட்டிலோட மூன்றிராமர் காறடுக்கி யோடவே
மருளில்வந்த சிங்கமோட வாமன்வெள்ளை பாறவே
வஞ்சமான கண்ணனோட மாயனீறச் சேனனு
மிருளினோட முண்டகத்த னேங்கியோட வென்றவர்க்
கீறிலாத சீவன்வைத்த வேந்தல்யாவன் வேதமே
யருளுமந்த முதல்வன்வைகு மருணைகண்டு வாழ்மினோ
ஆரனுதி மூலமென்ப தறிகிலாத மாக்களே"

என்றொரு செய்யுளைப்பாடிக்காட்ட வந்தவரும்அதனையெழுதிவாங் கிக்கொண்டு மீண்டுவந்து ஐயங்காரவர்களுக்குக் காட்டினர். அவரும் வியப்புற்றிருந்தனர். பிற்பாடுவெளியிற் சென்றிருந்து மீண்டுவந்த நயினா ர் நிகழ்ந்ததையறிந்து உடனே திருவருணைக்கலம்பகமென்ற ஒரு பிரபந் தமும் அண்ணாமலையந்தாதியும் ஆரூர்க்கோவையும்பாடி ஐயங்காருக்குக் காட்டிவரும்படி ஒருவரை அனுப்ப அவற்றை ஆராய்ந்துமுற்கூறியபாட ல் நயினாரின் மனைவியார் அப்பொழுதுசெய்ததாகவும் அது கலம்பகத் திற்சேர்க்கப்படாமல் விடப்பட்டதென்றும் தெரிந்து ஆச்சரியமடைந்து தம்நூல்களிற்கூறிய சிவநிந்தையைக்காட்டிலும் நயினார்கூறிய விஷ்ணு தூஷணம் அதிகமாயிருக்கிறதென்றும்அப்படி நயினார் தூஷிப்பதற்குக்கா ரணம்தாம்முதலில் அஷ்டப்பிரபந்தத்தில் நிந்தித்ததேயாமென்றும் தம் மைத்தாமேவெறுத்துக்கூறித் தாம்எப்பொழுதும்போலத் திருவரங்கநா தனைத் தரிசித்துக்கொண்டு அங்கேவசித்துவந்தனர். அப்படியிருக்குநா ளில்ஐயங்காருக்குப்பூர்வகர்மவசத்தால் கண்டமாலையென்னும்நோயுண் டாகிப் புண்கண்டது ; அக்காலத்தில் எல்லப்பநயினார் திரிசிராப்பள்ளிக் குவந்து அத்தலபுராணத்தைத் தமிழில் மொழிபெயர்க்கத்தொடங்கினர். அவ்விஷயத்தைஅங்குள்ளவர்கள்வந்து சொல்லக்கேட்ட ஐயங்கார் தமக் குண்டாகிய நோயினால் படுந்துன்பத்தை ஒரு அந்தணர்மூலமாக நயினா ருக்குத்தெரிவிக்க நயினாரும் அவரைநோக்கி, "ஐயங்கார் சிவதூஷண மாத்திரஞ் செய்தாரல்லர் சிவபிரானுடைய மெய்யடியாரையெல்லாம் நிந்தித்தார் ; சான்றாகக்கூரத்தாழ்வார் சிவத்துக்குமேற் பதக்கென்றெ ழுதிக் கையெழுத்திட்டதை அறிந்தசோழன் அவர் கண்ணைப்பிடுங்கின தைப்பற்றி வைஷ்ணவர்கள் கூரேசவிசயமென்னும் ஒரு நூலைக்கற்பித் தெழுதியிருப்பதை மெய்யென்று சாதிக்கவெண்ணிச் சீரங்கநாயகர் திரு வூசல் 20-ஆம் செய்யுளில் "அவத்தப்புன் சமயச்சொற் பொய்யை மெய் யென், றணிமிடறுபுழுத்தான்" என்று கர்ணகடூரமான பாடல்பாடின தன்பலன் இப்பொழுது தாமே அனுபவிக்கிறார் ; அவர் அப்படியெல் லாம் பாடியதனைக் கேட்டதனாலே நானும் மதவெறிகொண்டு மாயோ னை முதற்கடவுளென்று மதியாமல் தாறுமாறாக உளறிவிட்டேன் ; நான் இப்படி உளறியதற்குக்காரணம் அவரே; ஆதலால் இப்பொழுது சிவ பெருமானடியவரைத்தூஷித்தபாவ விமோசனமாகத்திருவானைக்காவில் (ஜம்புகேசுவரத்தில்) ஒரு மண்டலம் இருந்து காலந்தோறும் தவறாமல் சிவதரிசனம் செய்வாராயின் இந்நோயினின்றும் குணப்படுவார்." என்று சொல்லிவிடுப்ப அதனைக்கேட்டறிந்த ஐயங்காரும் வேறுவிதியில்லாமை யினால் அவ்வண்ணமே திருவானைக்காவிற் சென்றிருந்து சிவபெருமா னைத் தரிசித்து இருக்குநாளில் இவரது நல்வினைப்பயனால் அந்நோய் நீங்கிக்குணமாயிற்று. பிற்பாடு அங்குநின்று திருசிராப்பள்ளிக்குவந்து நயினாரைக்கண்டு அவருடன் நட்புடையவராகி அங்கு இருக்கும் நாளில் நயினார் தாம் எடுத்துக்கொண்ட மொழிபெயர்ப்பு முற்றுப்பெற்று அரங் கேற்றியானவுடன் ஐயங்காரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தம் மூரையடைந்தனர். அதன்பிறகு சிலகாலங்கழித்து ஒருநாள் ஸ்வாமி தரிசனம் செய்துகொண்டிருக்கும்பொழுது ஒரு நொண்டிப்பசு ஆசிரி யர்மேல் தடுக்கிவிழ அதுகாரணமாக உடம்பில் நோய்கொண்டுகிடந்து ஈற்றில் "துளவ துளவவெனச் சொல்லுஞ்சொல் போச்சே, யளவி னெடுமூச்சு மாச்சே - முளரிக், கரங்கால் குளிர்ந்ததே கண்ணும்

பஞ் சாச்சே, யிரங்கா யரங்கா வினி.'' என்று ஒருபாடல் கூறித்திரு நாட்டுக்கெழுந்தருளினார். இவர் பேரனார் கோனேரியப்பனையங்கார் செய்த சீரங்கநாயகியாருசு லென்ற ஒரு நூல் வழங்கிவருகிறது.

சிலர் "பரப்பிரஹ்மவிவேகம்" என்ற ஒருநூல் இவர் செய்ததாகக்கொண்டு அதிலுள்ள உளறுபடைகளை இவர் சரித்திரத்தில் பொருந்த அமைத்துக்காட்டுவார்; அந்தநூல் பொய்யாகக்கற்பித்ததென்பதை "வரகவிபாகியகாளமேகப்புலவர்" திருவாய்மலர்ந்தருளிய "பரப்பிரஹ்மவிவேகம்" என்னும் நூலை இதற்கு நாற்பத்தைந்து வருஷம் முன் அச்சிட்டகாலத்தில் அது அச்சிட்டதற்குக் காரணம் என்றதன் கீழ்வருமாறு:—"சென்னைப் போலீஸ் எட்வார்டு எல்லையட்டுதுரையவர்கள் போக்கிரிகளைத் தூக்கிற்போடுவித்தும் தீபாந்தரம் போக்குவித்தும் மண்கிடங்கிலடைப்பித்தும் பலவிதத்தண்டஞ்செய்து உபத்திரவப்படுத்துவிக்கும்போது அவர்களில் நெடுநாள் மறைந்திருந்து வெளிப்பட்ட சிலர் வெறுங்கூட்டங்கூடினால் இராஜதண்டனை கிடைக்குமென்று ஆலோசித்து காலக்ஷேபசபையென்றும் பஜனைச்சபையென்றும் ஏற்படுத்திக் கொண்டகாலமுதல் பிராமணவிசுவாசமில்லாத சிலர் ஸ்ரீவைஷ்ணவ வேஷியரைப்போலத் தாங்களுமாகவேண்டுமென்னுமெண்ணங்கொண்டவர்களாய்க் கோஷ்டிகளென்கிற அபிதானம் வைத்துக்கொண்டு தங்கடங்கள் வீட்டுத்தலைவாயில்தோறும் சங்குசக்கர ஸ்தாபனமும் வீடுகள்தோறும் பஜனைப்பெருமாள்கோயிலும் பஜனைகாலக்ஷேபமும் எங்கும் பரவச்செய்தார்கள்; அவ்வாறு செய்துகொண்டதுமன்றித் தாங்கள் வைத்திருக்கிற பஜனைகாலக்ஷேப சபைகளுக்குச் சைவப்பிரபுக்களை முகமன்கூறி வரவழைத்து அச்சபையில் வைத்துக்கொண்டு சிவபெருமானையும் அவருடைய அடியார்களையுந் தூஷித்துக்கொண்டே வருகிறார்கள்; இதனடியிற்கண்டிருக்கிறபுத்தகங்களெல்லாம்அச்சிட்டுவெளிப்படுத்தும்போது அறிவுடையோர்கள் பரத்துவநிச்சயம் தெரிந்துகொள்ளாமலிரார்கள். ஒருவர் தமது பெயரை வெளிப்படுத்தாமல் கெ-பார்த்தசாரதி ராஜாவின் பெயரால் கலி-சகூருகூ-ல் நிகழாநின்ற பிங்களவருஷத்தில் இருசமயவிளக்கத்தை யச்சிட்டதுமன்றி ஷை கலி-சகூசுஙு-ம் வருஷத்தினிகழாநின்ற துன்மதிவருஷம் ஆவணி மாதத்தில் பரப்பிரஹ்மவிவேகமென்று நூதனமாக ஒரு நூல்செய்து பிள்ளைப்பெருமாளையங்கார் செய்ததென அச்சிட்டிருக்கின்றனர்.'' இதனால் மேற்கூறிய பரப்பிர்மவிவேகமென்ற நூல் பிள்ளைப்பெருமாளையங்கார் பாடியதில்லையென்பதையறிக.

இப்பிள்ளைப்பெருமாளையங்கார் சம்புகேசுவரத்தில் சிவபிரானைத் தரிசிக்குங்காலத்தில் அப்பெருமானைக் குறித்துத் தோத்திரப்பாடல்கள் பாடினதாகக் கர்ணபரம்பரையில் தெரிவதுடன் அப்பாடல்களும் வழங்கப்பட்டுவருகின்றன; அப்பாடல்கள் மாயோனைக் கண்டபடி தூஷித்து இருப்பதால் அவற்றை அச்சிடுவதற்கு என் மனங்கொள்ளவில்லையென்றறிக.

---

நோக்கி - தரிசித்து, அந்தி - மாலைப்பொழுதிலும், காலை - காலைப்பொழுதிலும், மதிக்குள் - தங்களறிவினுக்குள், வைத்து - தியானித்து, ஏத்தும்- துதிக்கின்ற, திருமலை - சிறந்தமலையானது, (யாதோவெனில்?) கை - ஒழுங்காகநீண்டுள்ள, மலையால் - மந்தரமலையினால், வேலை - திருப்பாற்கடலை, மதிக்கும் - கடைந்தருளிய, பெருமான் - இறைவனுகிய மாயவன், உறை-எழுந்தருளிய, திருவேங்கடமே-திருவேங்கடமலையேயாம்;(எ-று.)

எல்லாத்தேவரும் முனிவரும் நோக்கி ஏத்துந் திருமலையானது பெருமானுறையுந்திருவேங்கடமலையேயாமென்பதாம். மாலை - கொன்றைமாலையுமாம். மதி - ஞானகலையெனலுமாம். போதன், போது - தாமரைமலர்: திருமாலின் திருவுந்தித்தாமரையிலுண்டானதால் பிரமதேவரைப்போதனென்றார். வாசவன் - தேவரின் ஒருபகுதியாகிய வசுக்களுக்குந் தலைவனென்பதனால் இந்திரனை வாசவனென்றார். முனிவர் - தியானிப்பவர். கை - அழகுமாம். குஞ்சி - ஆண்பால் தலைமயிர். அந்தி காலை - உம்மைத்தொகை. வேலை - கடலுக்குஆகுபெயர். பெருமான் - உயர்திணை ஆண்பெண்ணென்னும் இருபாற்கும்பொதுப்பெயர்; "இந்த ஆண்விகுதி ஒரோவிடத்து ஆள்விகுதியாகிப் பெருமாளெனநின்று ஆண்பாலையே உணர்த்தும்" என்றாராலெனின் பெருமான் பெருமாள் என்னும் இந்தஇரண்டுசொற்களும் இருபாலினும்வந்துள்ளன:—"தங்கா விருப்பிற் நம்பெருமான் பாத முடிசூட்டி" "மங்கையர் பெருமான் கற்பின் மதியம்" "நளினவிழிப் பெண்பெருமாள்" "அளித்தன ளரிவையர் பெருமாள்" எனச்சான்றோரிலக்கியங்களுள் இவையனைத்தும் பெண்பாலையேயுணர்த்தினமையறிக. ஆண்பாற்கிலக்கியம் பலவுளவென்க; ஆதலின் இவ்விரண்டு சொற்களும் இருபாற்பொதுப் பெயரென்பது சிலர்கொள்கை. கடல்கடைந்த கதை வெளிப்படை. (௨

வேங்கட மாலை யவியா மதிவிளக் கேற்றி யங்க
மாங்கட மாலய மாக்கிவைத் தோமவன் சேவடிக்கே
தீங்கட மாலைக் கவிபுனைந் தோமிதிற் சீரியதே
யாங்கட மாலயி ராவத மேறி யிருக்குமதே.

உரை:—வேங்கடம் - திருவேங்கடமலையில் நின்றருளிய, மாலை - திருமாலுக்கு, யாம் -நாம், மதி - எமது அறிவாகிய, விளக்கு - விளக்கினை, அவியா - அணைந்துபோகாமல், ஏற்றி———, அங்கம் ஆம் - உறுப்புக்களாலாகிய, கடம் - நமது சரீரத்தை, ஆலயம் - கோயிலாக, ஆக்கிவைத்தோம் - செய்துவைத்தோம்; தீங்கு - எம்முடைய குற்றங்கள், அட - கெடும்படி, அவன் - அந்த மாயோனுடைய, சேஅடிக்கே - சிவந்த பாதங்களிலே, கவி மாலை - பாடலாகிய மாலைகளை, புனைந்தோம் - செய்து சார்த்தினோம்; இதில் - இப்படிப்பட்டதனைக்காட்டிலும், கடம் - மதநீர்ப்பெருக்கையுடைய, மால்-பெரிய, அயிராவதம் ஏறி- ஐராவதமென்னும் யானைமேலேறி, இருக்கும் - தேவராசனுகியிருக்கின்ற, அது - அந்தச்சிறப்பானது, சீரியதே - சிறந்ததோ? [இல்லை.]

யாம் திருவேங்கடத்துத் திருமாலுக்கு எம் சரீரத்தைக் கோயிலாக்கி அதில் எழுந்தருளப்பண்ணி எம் அறிவை விளக்காக்கிவைத்து அவனை எம் பாமாலையால் அலங்கரித்துக்கொண்டிருக்கிறோம்; இதனைக் காட்டிலும் இந்திரபோகம் சிறந்ததாகுமோ? ஆகாதென்பதாம். இப்படிக் கடவுளை யிருத்திப் பாமாலையால் துதித்தால் பரமபதம் அடைதலுண்மையெனத் துணிந்து இந்திரபதவியைத் தாழ்த்திக்கூறினார். அறி

வை விளக்காகவும் சரீரத்தை ஆலயமாகவும் உருவகப்படுத்தினமையால் இது உருவகவணி. "உவமை போலப் பண்பொடு மியைந்து, தானே யதுவாவ துருவக மாகும்." என்பதனாலறிக. இதில், இல் - ஐந்தனுருபு; எல்லைப்பொருளது. சீரியதே, ஏ - எதிர்மறை. ஆலயம், ஐராவதம் என்பனபோலியாயமைந்தன; எதுகை நயம்பற்றியென்க. (௩)

இருக்கா ரணஞ்சொல்லு மெய்ப்பொரு ளின்பமு மெப்பொரு
கருக்கா ரணமுநற் றாயுநற் றந்தையுங் கஞ்சச்செல்வப் [ட்கும்
பெருக்கா ரணங்கின் றலைவனு மாதிப் பெருந்தெய்வமு
மருக்கா ரணவும் பொழில்வட வேங்கட மாயவனே.

உரை:—இருக்கு - வேதங்களும், ஆரணம் - அவற்றின் பகுதிகளும் ஆகியவற்றால், சொல்லும் - சொல்லப்படுகிற, மெய்ப்பொருள் - உண்மைப்பொருளினது, இன்பமும் - மகிழ்ச்சியும், எ பொருட்கும் - எவ்வகைப்பட்ட பொருள்களுக்கும், கரு காரணமும் - உற்பத்தியின் காரணமும், நல் தாயும் - நல்லதாயும், நல் தந்தையும் - நல்லதந்தையும், கஞ்சம் - செந்தாமரைப்பூவில் எழுந்தருளிய,செல்வம் பெருக்கு - செல்வத்தின்மிகுதி, ஆர் - நிறைந்த, அணங்கின்-இலக்குமிதேவியாரினுடைய, தலைவனும் - நாயகனும், ஆதி - முதன்மையாகிய, பெருந்தெய்வமும் - பெரியதெய்வமும், (ஆவானியாவனோவெனின்?) மரு - வாசனையுடைய, கார் - மேகங்கள், அணவும் -பொருந்தப்பெற்ற, பொழில்- சோலைசூழ்ந்த, வட வேங்கடம் - வடக்கின் கண்ணுள்ள திருவேங்கடமலையிலிருக்கிற, மாயவனே - திருமாலேயாம்; (எ - று.)

வேங்கடத்து மாயவன் இன்பமும் காரணமும் தாயும் தந்தையும் திருமகள்கேள்வனும் தெய்வமுமாவானென்பதாம். அந்தரியாமித்துவமுடையவனாகி எல்லாப்பொருள்களிலும் வியாபித்திருத்தலால் மெய்ப்பொருளின்பமுதல் பெருந்தெய்வம் வரைக்கு முள்ளவையெல்லாம் மாயவனென்றார். வேடர்கள் அகில் முதலியவற்றை யெரித்தலாலுண்டாகிய புகை படியப்பெற்றதனால் மருக்காரென்றார். மாயவன் - கரியவனென்னும் பொருளது. ருக்கு - மொழிமுதலிகரம் பெற்றது. வட வேங்கடம் - இனமில்லாததனை அடைமொழி கொடுத்துக் கூறியது வழுவமைதி; [நன் - பொ - ௫0.] (௪)

மாயவன் கண்ணன் மணிவண்ணன் கேசவன் மண்ணும் விண்
தாயவன் கண்ணன் கமலமொப் பான்சரத் தாலிலங்கைத் [ணுந்
தீயவன் கண்ணன் சிரமறுத் தான்றிரு வேங்கடத்துத்
தூயவன் கண்ணன் புடையார்க்கு வைகுந்தந் தூரமன்றே.

உரை:—மாயவன் - மாயவனும், கண்ணன் - கண்ணபிரானும், மணிவண்ணன் - நீலமணிபோலும் நிறத்தையுடையவனும், கேசவன் - கேசியென்னும் அசுரனைக்கொன்றவனும், மண்ணும் - பூமியினையும், விண்ணும் - ஆகாயத்தினையும், தாயவன் - தாவியளந்தவனும், கண் - கண்கள், நல் - நல்ல, கமலம் ஒப்பான் - செந்தாமரைக்கு ஒப்பானவனும், சரத்தால் - அம்பினால், இலங்கை - இலங்கையிலிருந்த, தீய - கொடிய, வன்கண்ணன் - இரக்கமில்லாதவனாகிய இராவணனுடைய, சிரம் அறுத்தான் - தலைகளை அறுத்தவனுமாகிய, திருவேங்கடத்து - திருவேங்கடமலையில் எழுந்தருளியிருக்கின்ற, தூயவன்கண் - பரிசுத்த

னிடத்தில், அன்பு உடையார்க்கு - அன்புஉடைய அடியவர்களுக்கு, வைகுந்தம் - பரமபதமானது, தூரம் அன்று - அதிக தூரத்திலுள்ள தன்று ; [எனவே சமீபத்திலுள்ளதென்பதாம்.] (எ - று.)

திருவேங்கடநாதனிடத்தில் அன்புடைய அடியார்களுக்கு வைகுந்தம் வேண்டுங்காலத்தில் போகும்படியாக அதிகச்சமீபத்திலுள்ளதென்பதாம். கண்ணன் - கிருஷ்ணனென்னு மொழிதிரிந்து கண்ணனென்று பெயராயிற்று; கரியவனென்பது பொருள். மாயோன் காசிபருக்கு மகனயவதரித்து வாமனவடிவத்தோடு மகாபலியென்னும் அசுரனிடத்தில் சென்று யாசித்து மூன்றடிமண் தானம்வாங்கி உடனே திரிவிக்கிரமாவதாரமெடுத்து உலகமுழுவதும் ஓரடியாகவும் ஆகாயத்தை ஓரடியாகவும் அளந்தானென்பது வெளிப்படை ; இதனல் மண்ணும் விண்ணுந் தாயவனென்றார். கஞ்சன், கண்ணபிரானைக் கொல்லும்பொருட்டுக் கேசியென்னும் அசுரனை விடுப்ப அவன் குதிரைவடிவத்தொடு கண்ணனிடம் வருதலும் அவனைக் கண்ணன் கொன்றதனல் கேசவனென்ற பெயர்பெற்றனன்.

இலங்கை - இப்பொழுது ஸிலோனென்று சொல்லப்படுகிற தீவின் தென்பாலிருந்து துவாபரயுகத்தினிறுதியில் கடல் கொள்ளப்பட்டது. வைகுந்தம் - ஒரு அந்தணன் மனைவி விகுண்டையென்பவள் திருமாலே தனக்குப் பிள்ளையாகப்பிறக்கும்படி தவஞ்செய்து வரம் பெற்றதனல் அவளுக்கு மகனாய்ப்பிறந்த மாயோன் தாய்மொழி தவறாமல் ஒரு பட்டணம் அமைத்து அதற்கு அவள்பெயர் எக்காலத்தும் மாறாமலிருக்கும்படி வைத்ததனிமித்தம் அது வைகுண்டமென்றாயிற்று.

மாயவன் கண்ணனென்பன ஒரு பொருள் மேற்பல பெயர்கள் வந்தன. நன் கமலம் - பண்புத்தொகையில் முன்னின்ற மெய்திரிந்தது. வைகுந்தம் - தத்திதாந்தநாமம்; வடசொற்றிரிபு. (ரு)

தூர விரும்புண் டரிக்குமிக் காயத்தைச் சூழ்பிணிகா
ணேர விரும்புண்ட ரற்கருள் வானெடு வேங்கடத்தா
னீர விரும்புண்ட ரீகப்பொற் பாதங்க ளென்னுயிரைத்
தீர விரும்புண்ட நீராக்கு மாறுள்ளஞ் சேர்ந்தனவே.

உரை :—நேர் - நேராக, அவிரும் - விளங்குகின்ற, புண்டரர்க்கு - சடாயுவென்னும் கழுகரசனுக்கு, அருள்வான் - முத்திகொடுத்தருளினவனுகிய, நெடு - நீண்ட, வேங்கடத்தான் - திருவேங்கட நாதனுடைய, ஈர - குளிர்ந்த, இரும் - பெரிய, புண்டரீகம் - தாமரைமலர்போன்ற, பொன்-அழகிய, பாதங்கள் - திருவடிகள், என் உயிரை - எனதுயிரை, தீர - முழுவதும், இரும்பு உண்டநீர் - நெருப்பிற்காய்ந்த இரும்பால் உண்ணப்பட்ட நீரைப்போல், ஆக்கும் ஆறு - செய்யும்படியாக, உள்ளம் - என்மனத்தை, சேர்ந்தன - அடைந்தன ; (ஆதலால்), புண்தரிக்கும் - மாமிசத்தையுடைய, இ காயத்தை - இந்தச்சரீரத்தை, சூழ்பிணிகாள்-சூழ்ந்தபிறவிநோய்களே! தூர இரும்- நீங்கள் தூரப்போயிருங்கள்.

அருளுவோனுகிய திருவேங்கடத்தானுடைய திருவடிகள் என்னுயிரைத் தன்னிடத்திற் சேர்த்துக்கொள்ளும்பொருட்டு என்னுள்ளத்தை யடைந்தன; ஆதலால் பிறவிநோய்களே! நீங்கள் விலகுங்கள் என்பதாம். புண்டரீகம் - வெண்டாமரை ; அது தன் பண்புணர்த்தாமல்

தாமரை மாத்திரையாய்நின்று திருவடிக்கு உவமையாயிற்று. இரும், உம் - முன்னிலைக்கு வருதல் புதியன புகுதலாற் கொள்க. அருள்வான் - எச்சத்திரிபு. ஆக்குமாறு - ஆறீற்று வினையெச்சம். சடாயு - அருணனது புத்திரன்; தசரதனுக்கு மிக்க நண்பன்; இராமாவதாரத்தில் சீதாபிராட்டியை இராவணன் வஞ்சித்துக்கொண்டு சென்றபொழுது எதிர்கண்டுதடுத்துப்பொருது அவனாலடிபட்டுக்கீழேவிழுந்து அங்குத் தேடிவந்த இராமனிடத்தில் நிகழ்ந்தமை கூறி உயிர் துறந்தனன். அவனுக்கு இராமனே உத்தரகிரியை செய்தருளினனென்பதாம். (சு)

சேர்ந்து கவிக்கும் முடிகவித் தாய்சிறி யேனிதயஞ்
சார்ந்து கவிக்கும் வரமளித் தாய்கொண்ட றண்டலைமே
லூர்ந்து கவிக்கும் வடமலை யாய்பஞ் சொழுக்கியபால்
வார்ந்துக விக்கும் பொழுதிலஞ் சேலென்று வந்தருளே.

உரை:—சேர்ந்து - (கிட்கிந்தாபுரியை) அடைந்து, கவிக்கு - வானரவேந்தனாகிய சுக்கிரீவனுக்கு, முடி கவித்தாய் - திருமுடிசூட்டினவனே! சிறியேன் - அறிவிற்சிறியேனாகிய என்னுடைய, இதயம் - மனத்தை, சார்ந்து - அடைந்து, கவிக்கும் - உன்மேற்கவிபாடுவதற்கும், வரம் அளித்தாய் - வரங்கொடுத்தருளினவனே! கொண்டல் - மேகங்கள், தண்டலைமேல் - சோலைகளின்மேல், ஊர்ந்து - தவழ்ந்து, கவிக்கும் - மூடிக்கொள்ளுகின்ற, வடமலையாய் - வடமலைநாதனே! பஞ்சு - பஞ்சினால், ஒழுக்கிய - வாயிலூற்றிய, பால் - பாலானது, வார்ந்து - கடைவாயிலிருந்து வழிந்து, உக - சிந்தும்படி, விக்கும்பொழுதில் - விக்கலெடுக்கின்ற மரணதசையிலே, அஞ்சேல் என்று - நீ பயப்படாதேயென்று, வந்து - என்முன்வந்து, அருள் - கருணைசெய்வாய்; (எ - று.)

கவித்தோனே! அளித்தோனே! வடமலையவனே! பஞ்சினைப் பாலில்நனைத்து வாயிற்பிழிகின்றபொழுது அதுவும் உள்ளே செல்லாமல் விக்கலெடுக்கிற மரணகாலத்தில் அஞ்சாதேயென்று வந்து என்னைக்காப்பாயாக வென்பதாம். கவி - கபியென்னும் வடசொற்றிரிபு; கவிக்கும், உம் - இழிவுசிறப்பு. கொண்டல் - கொள்ளுதலென்னும் பொருளது; மேகத்துக்குத் தொழிலாகுபெயர். தண்டலை- ஒருசொல். கவிக்கு முடிகவித்தது:— சடாயுவினை முத்திக்குச்சேர்த்தபின் இராமபிரான் சீதையைத் தேடிச்செல்லுகையில் அனுமானால் சுக்கிரீவனை நண்புகொண்டு அவனுக்குப் பகையாகிய வாலியைக்கொன்று அந்தச்சுக்கிரீவனுக்கு முடிசூட்டிவைத்தன னென்பதாம். (எ)

வந்திக்க வந்தனை கொள்ளென்று கந்தனு மாதவருஞ்
சிந்திக்க வந்தனை வேங்கட நாதபல் சீவன்றின்னு
முந்திக் கவந்தனைச் செற்று யுனக்குரித் தாயபின்னும்
புந்திக் கவந்தனைச் செய்தைவர் வேட்கை பொருமென்னையே.

உரை:—வந்திக்க - வணங்க, வந்தனை - அவ்வணக்கத்தை, கொள் என்று - நீ அங்கீகரிப்பாயென்று சொல்லி, கந்தனும் - குமாரக்கடவுளும், மாதவரும் - சிறந்தமுனிவர்களும், சிந்திக்க - உன்னைத்தியானிக்க, வந்தனை - அவர்களுக்கு எதிரில் தோன்றினாய்; வேங்கடநாத - திருவேங்கடநாதனே! பல் - பல, சீவன் - உயிர்களை, தின்னும் - தின்கின்ற, உந்தி - வயிற்றையுடைய, கவந்தனை - கவந்தனென்னும்

இராக்கதனை, செற்றாய் - கொன்றவனே! உனக்கு உரித்து ஆயபின்னும் - எனது உயிர் உனக்குரியதானபிற்பாடும், ஐவர் - பஞ்சேந்திரியங்களின் சம்பந்தமாகிய, வேட்கை - பேராசையானது, புந்திக்கு - எனது அறிவிற்கு, அவம் தனை - பயனில்லாதவற்றை, செய்து ——, பொரும் - என்னை வருத்தும்; என்னை - இது என்ன அனியாயம்? (எ - று.)

வேங்கடநாத! கவந்தனை அழித்தோனே! என்னுயிர் உனக்குரியதானபிறகும் பேராசை என்னறிவை வருத்துகின்றது; இது என்ன அனியாயம்? என்பதாம். கந்தம் - சேர்க்கை; சரவணமடுவில் ஆறு குழந்தைகளாக அவதரித்து உமாதேவியார்வந்து அந்த ஆறுகுழந்தைகளையும் சேர்த்தெடுக்கும்பொழுது தோளுக்குக்கீழ்ப்பட்ட உடம்புகளெல்லாம் ஒருகுழந்தைவடிவமாகச் சேர்ந்துவிட்டமையால் கந்தனெனப்பட்டான். கவந்தனைச்செற்றா யென்றதனால் உன்னை விழுங்கவந்த கவந்தனை நீ கொன்றதுபோல என்னைப் பொரவந்த வேட்கையையும் அழிப்பாயாக எனக்கொள்க. வந்தனை - வடசொல். இரண்டாமடியில் வந்தனையென்றது முன்னிலைவினை. ஐவர் - தொகைக்குறிப்புமொழி; அர் - இகழ்ச்சிக்குறிப்பில்வந்தது. வேட்கை - தொழிற்பெயர். கவந்தன் - தனுவென்னும் இயக்கன். ஒரு முனிவன்சாபத்தால் அரக்கனாகி இந்திரனோடெதிர்த்து அவனாலடியுண்டு தலை வயிற்றில் அழுந்தப்பெற்றதனால் கவந்தனென்னும் பெயர் உடையவனாகி தண்டகவனத்திருந்து இராமனால் வதையுண்டு பண்டைவடிவமடைந்தனன். (அ)

பொருதரங் கத்தும் வடத்து மனந்த புரத்துமன்பர்
கருதரங் கத்துந் துயில்வேங் கடவகண் பார்த்தருளாய்
நிருதரங் கத்து நிறம்போல் வருமந்தி நேரத்தன்றி
லொருதரங் கத்தும்பொழுதும்பொ ருளென் னொருவல்லியே.

பொருள்—புறப்பொருள்.
திணை—பாடாண்டிணை.
பகுதி—கடவுளை மானிடமாதர் காதலித்த பகுதி.
துறை—பிரிந்த தலைவி வருந்திய தறிந்த
கேழ்கிளர் கோதை தோழி புலம்பல்.

உரை.—பொரு - மோதுகின்ற, தரங்கத்தும் - அலையையுடைய திருப்பாற்கடலிலும், வடத்தும்-ஆலிலையிலும், அனந்தபுரத்தும் - திருவனந்தபுரம் என்னும் திவ்வியதேசத்திலும், அன்பர் - அடியவர்கள், கருது - தியானிக்கின்ற, அரங்கத்தும் - திருவரங்கமென்னும் க்ஷேத்திரத்திலும், துயில் - நித்திரைசெய்தருள்கின்ற, வேங்கடவ - திருவேங்கடநாதனே! நிருதர் - இராக்கதருடைய, அங்கத்து - சரீரத்தினது, நிறம்போல - வடிவம்போல, வரும் - வருகின்ற, அந்திநேரத்து - மாலைப்பொழுதில், அன்றில் - அன்றிற் பறவை, ஒருதரம் ———, கத்தும்பொழுதும் - கூவுகின்றபொழுதும், என் - என்னுடைய, ஒரு - ஒப்பற்ற, வல்லி - கொடிபோன்ற இடையையுடைய தலைவியானவள், பொருள் - ஆற்றாமல் வருந்துகின்றாள்; (ஆதலால்), கண்பார்த்தருளாய் - இவளைக்கண்ணாலே நோக்கி அருள்செய்வாயாக; (எ - று.)

வேங்கடவ! என்னொருதலைவிஅந்திநேரத்தில் அன்றிற்பறவை கத்தும்பொழுது அதனைக்கேட்டு வருந்துகின்றனள்; அவளைக் கண்பார்த்

தருளாய் என்பதாம். மாலைக்காலம் காமவிகாரத்தை உண்டாக்குங் காலமாதலாலும் ஆண்பெண்பிரியாத அன்றில்கள் புணர்தற்காக ஒன்றனையொன்று அழைக்கின்ற ஓசை காதிற்படும்பொழுது விரகம் அதிகரித்தலாலும் பொழுதுளென்றார். "அம்பனைப்பச் சோலையிலே யானகுயில் கூவகித்தி, யம்பனைப்பச் சோலையிலே யன்றில் தெற - வெம்புகின்றாள்," என்றார்பிறரும். (௯)

ஒருமாதவனி யொருமாது செல்வி யுடனுறைய
வருமாதவனின் மகுடம்வில் வீச வடமலைமேற்
கருமா தவன்கண்ண னின்பாற் றிருநெடுங் கண்வளர்கைக்
கருமா தவமென்ன செய்தாய் பணியெனக் கம்புதியே.

பொருளும் திணையும் பகுதியும் - அவை.
துறை - மடலவிழ் கோதை கடலோடுபுலம்பல்.

உரை:—அம்புதியே - கடலே! ஒரு மாது - ஒருமனைவி, அவனி - பூமிதேவியார், ஒரு மாது———, செல்வி - திருமகளார், (ஆகிய இருவரும்,) உடன் உறைய - தன்னோடிருக்கவும், வரும் - உதிக்கின்ற, ஆதவனின் - சூரியனைப்போல, மகுடம் - கிரீடமானது, வில் வீச - ஒளிவீசவும், வட மலைமேல் - வடமலையினிடத்தில், கரு மாதவன் - கரியவடிவத்தையுடைய மாதவனாகிய, கண்ணன் - கண்ணபிரான், நின் பால் - உன்னிடத்தில், திரு - அழகிய, நெடு - நீண்ட, கண்வளர்கைக்கு - யோகநித்திரை செய்வதற்கு, அரும் மா - அரியபெரிய, என்ன தவஞ்செய்தாய் நீஎப்படிப்பட்ட தவத்தைச்செய்தனையோ? (அதனை) எனக்கு ———- பணி - சொல்லுவாயாக. (எ-று.)

கடலே! வடமலைமேலிருக்கும் கண்ணபிரான் உன்னிடத்தில் வந்து உறங்கும்படியான தவந்தான் யாதுசெய்தாய்? அதனை எனக்குச் சொல்லுகவென்பதாம். எனவே நானும் அந்தப்படி தவஞ்செய்து என்னிடத்தில் அக்கண்ணன் வந்து உறங்கும்படியாக்குவேன் என்றாள். முதலில் கருமாதவனென்றமையால் கண்ணனென்பது பொருளை யுணர்த்தாமல் பெயர்மாத்திரையாய் நின்றது. திரு நெடுங்கண் - பண்புத்தொகை பன்மொழித்தொடர். வளர்கை - தொழிற்பெயர். பணி - ஆய்விகுதிபுணர்ந்துகெட்டுநின்றது. ஆதவனின் - ஐந்தாம்வேற்றுமை எல்லைப்பொருளது. (௧௦)

அம்பரந் தாமரை பூத்தலர்ந் தன்ன வவயவரை
அம்பரந் தாமரை யஞ்சன வெற்பரை யாடகமாம்
அம்பரந் தாமரை சூழ்ந்தாரை வாழ்த்தில ரைம்புலனும்
அம்பரந் தாமரை போற்றிரி வாரை யகனெஞ்சமே.

உரை:—அம்பரம் - கடலில், தாமரை - செந்தாமரை, பூத்து——, அலர்ந்தன்ன - மலர்ந்தாற்போன்ற, அவயவரை - அவயவங்களையுடையவரும், அம் - அழகிய, பரந்தாமரை - பரமபதத்தையுடையவரும், அஞ்சனம் வெற்பரை - அஞ்சனத்திரிஎன்னும்பெயரையுடைய வேங்கடமலையில் இருப்பவருமாகிய, ஆடகம் ஆம் - பொன்னாகிய, அம்பரம் - வஸ்திரத்தை, தாம்———, அரை - இடையில், சூழ்ந்தாரை - சூழக்கட்டிக்கொண் வாழ்த்திலர் - துதிக்காதவர்களாய, ஐம்புலனும் - ஐம்புலன்களாகிய, அம்பரம் - திக்குக்களில், தாம் - தாவியோடுகின்ற, மரை

போல் - மரையென்னும்மிருகத்தைப்போல, திரிவாரை - சஞ்சரிக்கின்ற கீழ்மக்களை, நெஞ்சமே - என்மனமே! அகல் - நீங்குவாயாக; (எ-று.)

அவயவங்களையுடையவரும், பரமபதத்தின் தலைவரும், அஞ்சனமலையையுடையவருமாகிய பீதாம்பரத்தைத்தரித்த இறைவரை வாழ்த்தாமல் விலங்குபோலத்திரிகின்றகீழ்மக்களைமனமே!நீ நீங்குவாயாகஎன்பதாம். ஐம்புலனைமட்டும் உருவகஞ்செய்தமையால் இது ஏகதேசவுருவகவணி. இவர் இறைவனைவாழ்த்தாமைக்குக்காரணம் ஐம்புலவாசையை அடக்கும்வலியின்மையேயாம். இப்பாடல் ஒருபொருள்மேல் பலபெயர்கள் வந்து ஒருமுடிக்குஞ்சொல்லைக்கொண்டது. [நன் - பொது - சக.] அலர்ந்தன்ன - வினையெச்சத்திரிபு. இப்பாடல் யமகம். (கக)

நெஞ்சுகந் தத்தை யுமக்குரைத் தேனிற்றை நீடிரவொன்
றஞ்சுகந் தத்தை விளைக்குமென் றுசைய தாமிதழ்சொல்
கிஞ்சுகந் தத்தை யனையிரிங் கென்னைக் கெடாதுவிடும்
விஞ்சுகந் தத்தை விளைக்குந் துழாயண்ணல் வேங்கடத்தே.

பொருள்—புறப்பொருள்.
திணை—பாடாண்டிணை.
பகுதி—கடவுளை மானிடப்பெண்டிர் விரும்பிய பகுதி.
துறை—தலைவி, தலைமக ளூர்க்குச் செலவொருப் படுதல்.

உரை :—இதழ் - வாயினிதழும், சொல் - சொல்லும், கிஞ்சுகம் - செம்முருக்கம்பூவையும், தத்தை - கிளியையும், அனையீர் - ஒத்திருக்கின்ற தோழியர்களே! நெஞ்சு - என்மனமானது, உகந்தத்தை - விரும்பியதனை, உமக்கு உரைத்தேன் - உங்களுக்குச்சொன்னேன்; இற்றை - இன்றைத்தினம், நீடு - நீண்ட, ஒன்று இரவு - ஒரு இராத்திரியுமே, அஞ்சு உகம் - ஐந்துயுகங்களின்வரையில் அனுபவிக்கக்கூடிய, தத்தை - துன்பத்தினை, விளைக்கும் - உண்டாக்கும்; விஞ்சு - மிகுந்த, கந்தத்தை - வாசனையை, விளைக்கும் - உண்டாக்குகின்ற, துழாய் - துளவமாலையணிந்த, அண்ணல் - பெருமையுடைய எம்பெருமானிருக்கின்ற, வேங்கடத்தே - திருவேங்கடமலையிலே, என்னை ——, இங்கு கெடாது - இவ்விடத்தில் தாமதியாமல், விடும் - விட்டுவிடுங்கள்; என் ஆசை - எனக்குண்டாகிய ஆசை, அது ஆம் - அவ்வொன்றுமேயாம்; (எ-று.) (கஉ)

தோழியரே! என்மனத்தின்விருப்பத்தை உங்களுக்குச்சொல்லிவிட்டேன்; இன்று இராத்திரி ஒன்றுமே ஐந்துயுகமட்டும் அனுபவிக்கக்கூடிய அவ்வளவுதுன்பத்தை விளைவிக்கின்றது; இப்பொழுதே என்னைக்கொண்டுபோய் அண்ணலின்வேங்கடத்தில் விட்டுவிடுங்கள் என்றாளென்பதாம். இன்று - வன்றொடராகி ஐகாரச்சாரியைபெற்று இற்றையெனநின்றது. உகம் - யுகமென்பதன்திரிபு. இதழ்க்கு - செம்முருக்கமலரும், சொல்லுக்கு - கிளியும் உவமை; நிரனிறையணியாற்கொள்க. விடும், உம் - முன்னிலையில்வந்தது; புதியன புகுதல்.

வேங்கடத் தாரையு மீடேற்ற நின்றருள் வித்தகரைத்
தீங்கடத் தாரைப் புனைந்தேத்தி லீர்சிறி யீர்பிறவி
தாங்கடத் தாரைக் கடத்துமென் றேத்துதிர் தாழ்கயத்து
ளாங்கடத் தாரை விலங்குமன் றேசொல்லிற்றையமற்றே.

உரை :—சிறியீர் - அறிவிற்சிறியோர்களே! ஆரையும் - எல்லாரையும், ஈடு ஏற்ற - இரக்ஷிப்பதற்காக, வேங்கடத்து - திருவேங்கடமலையின் கண்ணே, நின்று அருள் - நின்றதிருக்கோலமாயெழுந்தருளியிருக்கின்ற, வித்தகனை-ஞானமூர்த்தியை, நீங்கு - உங்கள் தீவினைகள், அட-கெடும்படியாக, தாரை-பூமாலையை, புனைந்து - அணிந்து, எத்திலீர் - துதித்தீரில்லை; பிறவிதாம்-பிறவித்துன்பங்களை, கடத்தாரை - நீக்கமாட்டாத அற்பத்தெய்வங்களை நோக்கி, கடத்தும் என்று - எங்கள்பிறவியைப் போக்குங்களென்று, எத்துதிர் - துதிக்கின்றீர்கள்; (ஈதென்ன அறியாமை?), தாழ் - ஆழமாகிய, கயத்துள் ஆம்-நீர்நிலையுளகப்பட்ட, கடம் - மதநீர். தாரை - தாரையாக வடியப்பெற்ற, விலங்கும் அன்றோ - மிருகமாகிய யானையுமல்லவோ, ஐயம் அற்று - சந்தேகம் இல்லாமல், சொல்லிற்று - இவனே முதற்கடவுளென்றறியும்படி சொல்லிற்று; (எ - று.)

சிறியோர்களே! வேங்கடநாதரைத் துதித்திலீர்; பிறவியிலகப்பட்ட மற்றைத்தெய்வங்களை நம்பிறவியைப் போக்கும்படி வேண்டுகின்றீர்; (ஈதென்ன அறியாமை?) ஒரு மிருகமுமல்லவோ பரத்துவஞ் சொல்லிற்று; நீங்கள் இதுவுமறிந்திலீர் என்பதாம். பிறவி, தாங்கு - அடத்தாரை எனப்பிரித்துப் பிறப்புக்களையுடையராகி நல்ல நெறியில் நில்லாதவரையென்றும் பொருள்கொள்ளலாம். அடம் - ஒழுங்கினம். மேலாங்குலத்திற் பிறந்தவரேயாலும் கடவுளை வணங்காதவர் தாழ்ந்தவரே யெனப்படுதலால் சிறியீரென்றார். மிருகத்துக்குள்ள அறிவும் உங்களுக்கில்லையேயென்று கொள்க. எத்திலீர் - முன்னிலை யெதிர்மறைமுற்று. கடத்தும் - ஏவற்பன்மைமுற்று. (கரு)

ஐயா துவந்தவனை நாயேனை யஞ்சன வெற்பவென்றும்
கையாது வந்தனை நின்னையல் லாற்கண் ணுதன்முதலோர்
பொய்யாது வந்தனை யார்முகங் காட்டினும் போற்றியுரை
செய்யாது வந்தனை பண்ணுது வாக்குமென் சென்னியுமே.

உரை :—ஐயா - தலைவனே! அஞ்சனவெற்ப - அஞ்சனமலையிலுள்ளவனே! துவந்தனை - பாசத்தொடர்புடையனாகிய, நாயேனை - நாய்போன்ற என்னை, என்றும் - எக்காலத்திலும், கையாது - வெறுக்காமல், உவந்தனை - அங்கீகரித்து மகிழ்ந்தனை; நின்னை அல்லால் - உன்னையல்லாமல், கண்ணுதல் முதலோர் - உருத்திரமூர்த்தி முதலானோரும், அனையார் - அவர்போன்றுள்ள பிறரும், பொய்யாது - பொய்யின்றி உண்மையாகவே, வந்து-என்முன்வந்து, முகம் காட்டினும்-முகத்தைக்காட்டினாலும், (என்) வாக்கும் - எனதுவாயும், போற்றி- புகழ்ந்து, உரைசெய்யாது - துதிக்கமாட்டாது; என் சென்னியும் - என்தலையும், வந்தனை பண்ணுது - வணங்கமாட்டாது; (எ - று.)

ஐய! அஞ்சனவெற்ப! என்னை நீ அங்கீகரித்தனை; ஆதலால் இனி எந்தத்தேவர் வந்து முகங்காட்டினாலும் என்வாய் உன்னையன்றி அவரைத் துதியாது; என்தலையும் உன்னையன்றி அவரை வணங்காது; என்பதாம். அஞ்சனவெற்பு - திருவேங்கடமலைக்கு ஒரு பெயர். துவந்துவம் - கட்டு; அதனையுடையவன் துவந்தன். கையாது, அல்லால், பொய்யாது இவை எதிர்மறை வினை யெச்சங்கள். இதன் கடையடி நிரனிறை யணி. என்-இடைநிலைத்தீவகம். (கசு)

சென்னியி லங்கை குவிக்கு முயிர்க்குந் திகைக்கு நின்னை
யுன்னியி லங்கையிற் கண்ணுறங் காளுயர் வீடணனை
மன்னி யிலங்கையில் வாழ்கென்ற வேங்கட வாணமற்றோர்
கன்னி யிலங்கைக்கி னின்பேர் கருணைக் கடலல்லவே.

பொருள்—புறப்பொருள்.
திணை—பாடாண்டிணை.
பகுதி—கடவுளை மானிடப்பெண்டிர்விரும்பிய பகுதி.
துறை—பூங்கொடி துயர்கண்டு பாங்கி புலம்பல்.

உரை:— உயர் - அறிவினாலுயர்ந்த, வீடணனை - விபீஷணனை, மன்னி - நிலைபெற்று, இலங்கையில் - இலங்காபுரியில், வாழ்க என்ற - வாழ்ந்திரு என்று திருமுடிசூட்டின, வேங்கடவாழ்ந - திருவேங்கடமலையில் வாழ்பவனே! நின்னை - உன்னை, உன்னி - நினைத்து, சென்னியில் - தலைமேல், அம் கை குவிக்கும் - அகம்கையைக்கூப்புவாள்; உயிர்க்கும் - பெருமூச்செறிவாள்; திகைக்கும் - மயங்குவாள்; இலங்கு - விளங்குகின்ற, அயில் - வேல்போன்ற, கண் உறங்காள் - கண்ணுறக்கங்கொள்ளாள்; (யாங்களும்), மற்று ஓர் - வேறொரு, கன்னியிலம் - பெண்ணில்லாதவர்களாயிருக்கின்றோம்; (ஆதலினால்), கைக்கின் - இவளை நீ வெறுத்தால், நின்பேர் - உன்னுடைய பெயர், கருணைக்கடல் அல்ல - கிருபாசமுத்திரம் இல்லை; (எ-று.)

அஞ்சலித்தால் உனக்கு இரக்கம்வருமோவென்று எண்ணி அங்கைகுவிக்கும் என்றார். இக்காமநோய் தீர்தற்கிடமில்லையேயென்னும் ஏக்கத்தினால் பெருமூச்செறிவளென்றார். யாதுசெய்வதென்ற கவலையினால் திகைப்பளென்றார். இரவில் கூடல்வகையை எண்ணமிட்டிருத்தலால் கண்ணுறங்காளென்றார். மற்றோர் கன்னியிலமென்றது - இவளிப்படியிறந்துபட்டாளென்பதைக் குறித்தது; இதற்கு ஒப்பற்ற இக்கன்னிகையின் மனையென்று பொருள்கொள்ளினும் பொருந்தும். இனி அங்கைகுவித்தல் முதலியன காமக்குறியாம். என்னை? "பாடலும் பரவலும் பணிதலும் பணித்தலும், அணங்குகொண் டகைத்தலு மழுங்குற் றுணர்த்தலுங், குணம்புகழ்ந் துரைத்தலுங் சுற்றங்கூறலும்" குறிப்பென்பது சூத்திரமாதலாலென்க. கைகுவித்தல் - சுப்பிரயோகம். உயிர்த்தல் - விப்பிரயோகம். திகைத்தல் - சோகம். கண்ணுறங்காமை - மோகம். இவை காமனுடைய நீலமொழிந்த நான்கு பாணங்களின் செயல்களுமாம். அன்றியும் "மயங்குதல், மூரியுயிர்ப்பு மூர்ச்சனை முறுவல், சிந்தனைகூர்தல் சேர்துயிலின்மை" முதலிய அகமெய்ப்பாடு தோன்றக்கூறின் அவை அகப்பொருட்கேயன்றிப் புறப்பொருட்குவாராவெனமறுக்க. அங்கை - அகம் என்பது கைவர இடையிலுள்ள ககரம்கெட்டது. வாழ்க - அகரம் தொகுத்தல்விகாரம். ஐயில் - முதற்போலி. நின்னையுன்னியென்பது இடைநிலைத்தீவகமாய் முன்னும்பின்னும் பொருள்கொள்ள நின்றது. அல்ல - எதிர்மறைப் பலவின்பால்முற்று. சீதாபிராட்டியை வஞ்சித்துக் கவர்ந்துசென்ற இராவணனை அவன் தம்பியாகிய விபீஷணன் பலவித நன்னெறி கூறியும் பயன்படாமையால் தமையனை வெறுத்து போருக்கு வந்திருந்த இராமபிரானிடத்தில்

சரணம்புக, அப்பிரான் இலக்கண நூற்பயிற்சி மிக்கவனாதலின் "கொள்ளார்தேஎங் குறித்தகொற்றமும்" (தொல் - பொ - சுஎ.) என்ற சூத்திரவிதிக்கு இலக்கியமாக வெற்றிகொள்ளுமுன் இலங்கைக்கு முடிசூட்டினமை வெளிப்படை.

இத்தன்மையான துறைகளுக்கு அகத்திணைக்களவொழுக்கங்கூறுதல் இலக்கணம் அறியாமையென்பதின்பாற்படும். அன்றி மெய்ப்பாடு கூறுதலுமமையாதோவெனின் (தொல் - பொரு - உசுஎ.) "மன்னிய வினைய" என்பதனால் அம்மெய்ப்பாடுகள் நடுவணைந்திணைக்கேயுரியவாதலாலும் கந்தருவ வழக்கமல்லாதவை மன்னிய காமமென்னாராதலாலும் அம்மெய்ப்பாடுகூறுதலும் மனம்போனபடி தாறுமாறாக உளறுகின்ற இலக்கண மறியாமையாமென்க. (கரு)

கடமா மலையின் மருப்பொசித் தாய்க்குக் கவிநடத்தத்
தடமா மலைவற்ற வாளிதொட் டாய்க்கென் றனிநெஞ்சமே
வடமா மலையுந் திருப்பாற் கடலும்வை குந்தமும்போ
லிடமா மலைவற்று நின்றுங் கிடந்து மிருப்பதற்கே.

உரை:— கடம் - மதத்தையுடைய, மா - பெரிய, மலையின் - மலைபோன்ற குவலயாபீடத்தினது, மருப்பு - தந்தத்தை, ஒசித்தாய்க்கு - ஒடித்தவனாகிய உனக்கு, கவி - வானரசைனியங்களை, நடத்த - செலுத்தவேண்டி, தடம் - அகன்ற, ஆம் - நீரையுடைய, அலை - கடலானது, வற்ற - வற்றிப்போகும்படி, வாளி - அக்கினியாஸ்திரத்தை, தொட்டாய்க்கு - பிரயோகம்பண்ணின உனக்கு, மா - சிறந்த, வடமலையும்-வடக்கிலுள்ள திருவேங்கடமலையும், திருப்பாற்கடலும் —, வைகுந்தமும் போல் - திருவைகுந்தமும் ஒப்பாக, அலைவு அற்று - அசைவற்று, நின்றும் - நிலையாக நின்றும், கிடந்தும் - சயனித்தும், இருப்பதற்கு - வீற்றிருப்பதற்கும், என் - எனது, தனி - ஒப்பற்ற, நெஞ்சமே - மனமே, இடமாம் - தக்க இருப்பிடமாகும்; (எ - று.)

யானையின் தந்தத்தை ஒடித்துக் கடலிலம்பெய்தவுனக்கு வடமலையும், பாற்கடலும், வைகுந்தமும்போல நின்றும் கிடந்து மிருப்பதற்கும் என்னெஞ்சம் இடமாகும் என்பதாம். வேங்கடத்தில் நின்றதிருக்கோலம். பாற்கடலில் கிடந்ததிருக்கோலம். வைகுந்தத்தில் இருந்ததிருக்கோலம். இறைவன் அலைவற்று நின்றும் கிடந்தும் இருப்பதற்கே இடமாம் என்னும் திண்மைநோக்கித் தன்னெஞ்சைத் "தனிநெஞ்சம்" என்றார். பின்னிரண்டடி நிரனிறையணி. யானையின்தந்தத்தை முறித்தது:— கண்ணபிரான் வடமதுரையில் கம்ஸன் அரண்மனையிற் புகும்பொழுது கம்ஸனால் விடப்பட்ட குவலயாபீடமென்னும் யானையின் தந்தத்தை ஒடித்தருளினான் என்பதாம். கடலில் அம்பு எய்தது:— இராமபிரான் சீதாபிராட்டியாரைத் தேடித் தென்கடலருகு சென்று இலங்கைக்குப் போகவேண்டி வருணனையழைத்தும் அவன் வாராமையால் கடல்மேல் அக்கினியாஸ்திரத்தைப் பிரயோகித்தனனென்பதாம். (கசு)

இருப்ப தனந்தனிலெண்ணலில்வைகுந்தத் தென்பர்வெள்ளிப்
பருப்பத னந்தண் மலரோ னறிகிலர் பாரளந்த
திருப்பத னந்தன் மதலைநிற் குந்திரு வேங்கடமென்
பொருப்ப தனந்த றவிர்ந்துயிர் காடொழப் போதுமினே.

உரை:—'பார் - பூமியை, அளந்த - அளந்தருளிய, திருப்பதன் - சிறந்த திருவடியையுடையவனாகிய, நந்தன் மதலை - நந்தகோபனது திருக்குமாரனானவன், எண்ணல் இல் - எண்ணுதற்கரிய, வைகுந்தத்து - திருவைகுண்டத்தில், அனந்தனில் - ஆதிசேஷசயனத்தில், இருப்பது - வீற்றிருக்கிறது' என்பர் - என்று சொல்லுவார்கள்; (அதனை), வெள்ளிப்பருப்பதன் - வெள்ளிமலையாகிய ஸ்ரீகைலாஸத்திலிருக்குமிறைவனும், அம் - அழகிய, தண் - குளிர்ந்த, மலரோன் - தாமரை மலரிலிருப்பவனாகிய பிரமதேவனுமே, அறிகிலர் - அறியார்கள்; (ஆதலால்), உயிர்காள் - உயிர்களே ! நிற்கும் - நின்றதிருக்கோலமாகி எழுந்தருளியிருக்கிற, திருவேங்கடம் என் - திருவேங்கடமென்னும், பொருப்பது - மலையை, அனந்தல் தவிர்ந்து - உமது அஞ்ஞான நித்திரையை நீங்கி, தொழ - வணங்குவதற்கு, போதுமின் - வாருங்கள். (எ - று.)

பூமியையளந்த திருவடியையுடையவனாகிய கண்ணபிரான் வைகுந்தத்தில் ஆதிசேஷன் மீது வீற்றிருப்பதுண்டென்று பெரியோர் கூறுவார்; அவ்விஷயத்தைப் பிரமாதிதேவருமறிந்திலர்; யாரேனுமறிந்து சொல்லவல்லவன்? ஆதலால் உயிர்களே ! அப்பெருமானைக்காண வேண்டின் அவன் நிற்கின்ற திருவேங்கடமலையை வணங்கவாருங்கள்; என்பதாம். இருப்பது - தொழிற்பெயர். என்பர் என்னும் பயனிலைக்குப் பெரியோரென்பதைத் தோன்றா எழுவாயாக்கிக்கொள்க. பருப்பதன், மலரோன் - உம்மைதொக்கபெயர்ச்செவ்வெண். (கஎ)

போதா ரவிந்த வரையும் புகாவண்ட புற்புதத்தின்
மீதார விந்த வினைதீர்க்க வேண்டும்விண் மண்ணுக்கெல்லா
மாதார விந்தளந் தேன்பாடும் வேங்கடத் தப்பநின்பொற்
பாதார விந்தமல் லாலடி யேற்கொரு பற்றிலையே.

உரை:— விண் - தேவருலகத்துக்கும், மண்ணுக்கு - பூவுலகத்திற்கும், எல்லாம் - மற்றெல்லாவுலகத்திற்கும், ஆதார - ஆதாரமானவனே ! தேன் - வண்டுகள், இந்தளம் - இந்தளமென்னும் இராகத்தை, பாடும் - பாடுகின்ற, (சோலைசூழ்ந்த), வேங்கடத்து அப்ப - திருவேங்கடமலையிலிருக்கிற அப்பனே ! போதார் - பிரமர்கள், அவிந்த வரையும் - ஒடுங்கி யிறக்கும்வரையிலும், புகா - ஒடுங்கியழியாத, அண்ட புற்புதத்தின் மீது - நீர்க்குமிழிபோன்ற அண்டங்களுக்குமேலுள்ள வைகுண்டபதத்திலே, ஆர - யான்சேர, இந்த வினை தீர்க்கவேண்டும் - இந்த இருவினைகளையும் கெடுக்கவேண்டும்; நின் - உன்னுடைய, பொன் - அழகிய, பாதார விந்தம் அல்லால் - திருவடித்தாமரைகளேயல்லாமல், அடியேற்கு - உன் அடியவனான எனக்கு, ஒரு பற்று இல்லை - வேறொரு பிடிப்புமில்லை; (எ - று.) எனவே பிரமரிறக்குங்காலத்தில் அவர்படைத்த அண்டங்களழியும் என்பதாம்.

ஆதாரனே ! அப்பனே ! பிரமாக்கள் இறந்து அண்டங்களழிந்தாலும் அழியாத பரமபதத்திலே யானடையும்படி என் வினைகளைக்

கெடுக்கவேண்டும்; உன்னுடைய திருவடிகளல்லாமல் வேறொருபற்றும் எனக்கில்லை என்பதாம். அண்டங்கள் அழியும் இயல்பின ஆகையால் புற்புதம் என்றார். அழியா இயல்பினதாகிய பரமபதம் அவற்றிற்குமே லுள்ளதாதலால், அதனை அண்டபுற்புதத்தின்மீது என்றார். தன்னுள் ளேயுலகங்களெல்லாவற்றையும் தந்தவனாதலால் அப்ப என்றார். மீது - இடவாகுபெயர். அண்டபுற்புதம் - வடசொற்றொடர். பாதாரவிந்தம் - தீர்க்கசந்தி. (கஅ)

பற்றி யிராமற் கலைபோய் வெளுத்துடல் பாதியிரா
வற்றி யிராப்பக னின்கண் பனிமல்கி மாசடைந்து
நிற்றி யிராக மொழிச்சியைப் போனெடு வேங்கடத்துள்
வெற்றி யிராமனை வேட்டாய்கொ னீயுஞ்சொல் வெண்மதியே.

பொருள்—புறப்பொருள்.
திணை—பாடாண்டிணை.
பகுதி—கடவுளை மானிடமாதர் காதலித்த பகுதி.
துறை—புலம்புறுதலைவி நலந்தொலை வறிந்து
பிதிர் நகிற் பாங்கி மதியோடு புலம்புதல்.

(தலைவிக்கும் சந்திரனுக்குஞ் சிலேடை.)

உரை :—வெண்மதியே - வெண்மையாகிய சந்திரனே! பற்றியிராமல் - ஓரிடத்தில் தங்கியிராமல், கலைபோய் - கலைகள்போய், உடல் வெளுத்து - சரீரம்வெளுத்து, பாதி யிரா - பாதியிராத்திரியில், வற்றி - மறைபட்டு, இராப்பகல் - இராப்பொழுதிலும் பகற்பொழுதிலும், நின் கண் - உன்னிடத்தில், பனி மல்கி - பனிநீர்துளித்து, மாசு அடைந்து - களங்கம் உற்று, இராகம் மொழிச்சியைப்போல் - இசைக்கொப்பான சொல்லையுடைய எங்கள் தலைவியைப்போல, நிற்றி - நிற்கின்றனை; நெடு - நீண்ட, வேங்கடத்துள் - திருவேங்கடமலையிடத்தில், வெற்றி இராமனை - சயராமனை, நீயும் ———, வேட்டாய்கொல் - விரும்பினையோ? சொல் - சொல்வாயாக; (எ - று.)

சந்திரனே! நீ இத்தன்மையையடைந்திருப்பதனால் எங்கள் தலைவியைப்போல திருவேங்கடத்துச் சயராமனை நீயும் விரும்பினையோ? சொல்லுவாயாக; என்பதாம். தலைவிக்கேற்றும்பொழுது இறைவனை யடையப்பெறாத விரகவேதனையால் ஓரிடத்தில் தங்கியிராமலும் இடுப்பில் கட்டியிருக்கிற உடையையிழந்து உடல்வெளுத்துப் பாதியாயிளைத்தும் இரவும் பகலும் கண்ணீர்வடியப்பெற்றும் மாசடைந்துமிருக்கிற தலைவி என்க. நிற்றி - முன்னிலைவினைமுற்று; நில் - பகுதி. கொல் - ஐயப்பொருளில் வந்த இடைச்சொல். பாதியிரா, இரா - சந்திரனைக் கூறும்பொழுது பெயர்ச்சொல்லும் தலைவியைக்கூறும்பொழுது ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சமுமாம். மொழிச்சி, ச் - பெயரிடைநிலை.

மதியா தவன்கதிர் மின்மினி போலொளிர் வைகுந்தந்தா
மதியா தவன்றர வாழ்ந்திருப் பீர்வட வேங்கடவன்
மதியாத வன்கடத் துட்டயிர் வாய்வைத்த மாயப்பிரான்
மதியா தவனுர ங்கீண்டான் கழல்சென்னி வைத்திருமே.

உரை:—வல் கடத்துள் - வலியகுடத்துள் இருக்கிற, மதியாத - கடையப்பெறாத, தயிர் - தயிரை, வாய்வைத்த - வாயிற்கொண்டுகுடித்த, மாயம் பிரான் - மாயத்தையுடைய பெருமானும், மதியாதவன் - தன்னை மதியாதவனாகிய இரணியனுடைய, உரம் - மார்பை, கீண்டான் - பிளந்தவனுமாகிய, வடவேங்கடவன் - வடக்கிலுள்ள திருவேங்கடநாதனுடைய, கழல் - திருவடிகளை, சென்னி - தலையில், வைத்திரும் - வைத்துக்கொள்ளுங்கள்; மதி ஆதவன் - சந்திர சூரியர்களுடைய, கதிர் - கிரணங்கள், மின்மினிபோல் - மின்மினி என்றுசொல்லும்படியாக, ஒளிர் - மிகவிளங்குகின்ற, வைகுந்தம்- அப்பரமபதத்தை, தாமதியாது - தாமதஞ்செய்யாமல், அவன் தர - அந்த இறைவன் உங்களுக்குக்கொடுக்க, வாழ்ந்திருப்பீர் - நீங்கள் நிலைபெற்று வாழ்ந்திருப்பீர்கள். இப்பாடல் யமகம். இரணியன் மார்புபிளந்தது வெளிப்படை.

வேங்கடநாதன் பாதங்களை வணங்குங்கள்; அவன் பரமபதந்தர அதில் எக்காலமும் வாழ்ந்திருப்பீர்கள் என்பதாம். பரமபதம் சிறந்த சோதிவடிவமுடையதென்பது தோன்ற மதியாதவன்கதிர் மின்மினி போலவென்றார். தாமதியாமல் கருணைசெய்வதற்குக்கஜேந்திரனே சாட்சியாகும். கண்ணபிரான் ஆய்ச்சியர் வீடுகளில் தயிரெடுத்துண்டது வெளிப்படை. மதி, ஆதவன் - உம்மைத்தொக்க பெயர்ச்சொல். வன்கடம் - பண்புத்தொகையில் முன்னின்றமெய்திரிந்தது.

இருபது மந்தரத் தோளு மிலங்கைக் கிறைவன்சென்னி
யொருபது மந்தரத் தேயறுத் தோனப்ப னுந்திமுன்னாட்
டருபது மந்தர வந்தன நான்முகன் றான்முதலா
வருபது மந்தர மொத்தபல் சீவனும் வையமுமே.

உரை:—இலங்கைக்கு - இலங்காபுரிக்கு, இறைவன் - அரசனாகிய இராவணனுடைய, மந்தரம் - மந்தரமலைபோன்ற, இருபது தோளும் - இருபதுகைகளும், சென்னி ஒருபதும் - பத்துத்தலைகளும், அந்தரத்தே - ஆகாயத்திலே, அறுத்தோன் - அறுத்தவனாகிய, அப்பன் - திருவேங்கடத்து அப்பனது, உந்திதருபதுமம் - திருவுந்திபூத்த தாமரையானது, முன்னாள் - ஆதிகாலத்தில், தர - படைக்க, நான்முகன்தான்முதலா - பிரமதேவன் முதலாக, வரு - வருகின்ற, பதுமம் தரம் - பதுமமென்னும் தொகை அளவினுக்கு, ஒத்த - நிகராகிய, பல்சீவனும் - பற்பல ஆத்மகோடிகளும், வையமும் - பூமியும், வந்தன - உற்பத்தியாயின; (எ - று.)

இலங்காதிபனான இராவணனைக்கொன்ற திருவேங்கட முடையானது திருவுந்தித்தாமரையில் பிரமாமுதல் எல்லாச்சீவராசிகளும் உண்டாயினவென்பதாம். திருவுந்தியிலுண்டாகிய பிரமனாற்படைக்கப்பட்டன எல்லாவுயிர்களுமாதலால் உந்தியில் வந்தனவென்றார். மந்தரத்தோள் - உவமத்தொகை. தருபதுமம் - வினைத்தொகை. நான்முகன்தான், தான் - சாரியை. பதுமம் - கோடாகோடி. (உக)

வைய மடங்கலு மோர்துகள் வாரி யொருதிவலை
செய்ய மடங்கல் சிறுபொறி மாருதஞ் சிற்றுயிர்ப்புத்
துய்ய மடங்கலி லாகாயந் தான்விரற் றோன்றும்வெளி
வெய்ய மடங்கல் வடிவான வேங்கட வேதியற்கே.

உரை:—வெய்ய - கொடிய, மடங்கல் - சிங்கத்தின், வடிவு ஆன - வடிவம்பொருந்திய, வேங்கடம் - திருவேங்கடத்திலிருக்கிற, வேதியற்கு - வேதத்தில் விளங்கிய இறைவனுக்கு, வையம் அடங்கலும் - உலகமெல்லாம், ஓர் துகள் - ஒரு தூசியாகும்; வாரி - சமுத்திரமானது, ஒருதிவலை - ஒரு துளியாகும்; செய்ய - சிவந்த, மடங்கல் - வடவாமுகாக்கினியானது, சிறு பொறி - சிறியதீப்பொறியாகும்; மாருதம் - பெருங்காற்றானது, சிற்றுயிர்ப்பு - சிறிய மூச்சுவிடுதலாகும்; துய்ய - பரிசுத்தமான, மடங்கல் இல் - அழியாத, ஆகாயம்———, விரல் தோன்றும் - விரலிடுக்கில் தோன்றுகிற, வெளி - வெளியாகும்; (எ-று.)

இது கடவுள் விசுவரூபமுடையவனுதலால் அந்தவடிவமெடுக்கும் பொழுது, உலகமுதலாகியவெல்லாம் சிறிதாகுமென்று கூறியதாம். தான் - சாரியை. சிங்கம் - நரசிங்கம். சிற்றுயிர்ப்பு - பண்புத்தொகை; உயிர்ப்பு - உயிருக்குத் தொழிலாகுபெயர். செய்ய, துய்ய, வெய்ய - இவை குறிப்புப்பெயரெச்சங்கள். இரணியனைக் கொல்லவேண்டி நரசிங்கவடிவமெடுத்தது பிரசித்தம். வேதத்து முடிவான பொருளாய் விளங்குகின்றமையால் வேதியனென்றார். இது ஐம்பெரும் பூதமும் கடவுள் வடிவமென்று கூறப்பட்டது. (உஉ)

வேதா வடமலை வெங்காலன் கையில் விடுவித்தென்னை
மாதா வடமலை கொங்கையுண் ணுதருண் மண்ணளந்த
பாதா வடமலை மேற்றுயின் றாய்கடற் பார்மகட்கு
நாதா வடமலை யாயலர் மேன்மங்கை நாயகனே.

உரை:—மண் - பூமியை, அளந்த - ஓரடியால் அளந்தருளிய, பாதா - திருவடியையுடையவனே! வடம் - ஆலிலையிலும், அலைமேல் - திருப்பாற்கடலிடத்தும், துயின்றாய் - யோகநித்திரை செய்தோனே! கடல் - கடல்சூழ்ந்த, பார் மகட்கு - பூமிதேவிக்கு, நாதா - தலைவனே! வடமலையாய் - வடவேங்கடமலையில் விளங்குபவனே! அலர்மேல் - தாமரைமலர்மேல் விளங்கிய, மங்கை - திருமகளாருக்கு, நாயகனே தலைவனே! வேதா - பிரமாவின்கையில்நின்றும், வடம் - கயிற்றால், அலை - கட்டிவருத்துகின்ற, வெம் - கொடிய, காலன்கையில் - யமன் கையில்நின்றும், என்னை———, விடுவித்து - விடுதலைசெய்து, மாதா - தாயின், வடம் அலை - முத்துமாலைகள் அசையப்பெற்ற, கொங்கை - முலைப்பாலை, உண்ணுது - அருந்திப்பிறவியிலுழலாமல், அருள் - அருளுவாய்; (எ-று.) அலர்மேல்மங்கை - தேவியாரின் திருநாமம்.

பாதனே! துயின்றவனே! பூமிக்குநாயகனே! அலர்மேல் மங்கை கணவனே! பிரமா என்னைச்சிருஷ்டிக்காமலும் எமன் என்னைக்கட்டிக் கொண்டுபோகாமலும் நான் தாயார்வயிற்றிற்பிறந்து அவர்ஸ்தன்னிய பானம்பண்ணுமலும் என்னைக்காத்தருளுவாயாகவென்பதாம். மகாபலியிடத்துமூன்றடிமண் தானம்வாங்கி ஓரடியால் உலகமளந்ததும் பாற்

கடல்மேல் பள்ளிகொண்டதும் உலகமெல்லாம் கடலுள்முழுகியகாலத்தில் ஆலிலையில் சிறுகுழந்தையாய்க் கிடந்ததும் இரணியாக்ஷன் பூமியைச் சுருட்டிக்கொண்டு பாதாளம்புகுந்தபோது வராகாவதாரமெடுத்துச் சென்று அவனைக்கொன்று பூமிதேவியை மணந்துகொண்டதும் வெளிப்படை. காலன் - உயிர்களுக்கு இறுதிக்காலத்தைச்செய்பவன். விடுவித்து, வி - பிறவினைவிகுதி. மேல் என்பதனை வடத்திற்குங்கூட்டுக. வேதா, மாதா, பாதம், நாதன், நாயகன் வடசொற்கள். (உ௩)

நாயக ராத்திரி யுஞ்சில தேவர்க்கு நாணிலைகொ
றாயக ராத்திரி மூலமெ னுமுனந் துத்திப்பணிப்
பாயக ராத்திரி மேனியம் மான்பைம்பொன் வேங்கடவன்
றீயக ராத்திரி சக்கரத் தாற்கொன்ற சீர்கண்டுமே.

உரை:—தூய - பரிசுத்தமாகிய, கர அத்திரி - கையையுடைய மலைபோன்ற கஜேந்திரன், மூலம் - ஆதிமூலமே, எனு முனம் - என்றுசொல்லுவதன்முன்னமே, துத்தி - புள்ளிகளையுடைய, பணி - படம்பொருந்தியபாம்பாகிய, பாய் அகம் - படுக்கையிடத்துள்ள, ராத்திரி மேனி - இருள்போன்றகரியவடிவத்தையுடைய, அம்மான் - அந்தமகானும், பைபொன் - பசும்பொன்போன்ற, வேங்கடவன் - திருவேங்கடமலையிலுள்ளவனுமானஇறைவன், (அவ்யானையைப்பற்றியிழுத்த,) தீய-கொடிய,கரா-முதலையை, திரி - சுழற்றுகின்ற, சக்கரத்தால் - சக்கராயுதத்தினல், கொன்ற - பிளந்துகொன்ற, சீர் - ஒருமகிமை, கண்டும் - பார்த்திருந்தும், நாயகர் ஆ - தலைவராக, திரியும் - திரிகின்ற, சிலதேவர்க்கு - சிற்சில தெய்வங்களுக்கு, நாண் - வெட்கமென்பது, இலைகொல் - இல்லையோ ?.

யானையானது ஆதிமூலமேயென்றழைத்தலும் ஸர்ப்பசயனனுகிய வேங்கடநாதன் சென்று அந்தயானையைப் பிடித்திழுத்த முதலையைக் கொன்ற ஒரு மகிமையைப் பார்த்திருந்தும் தலைவரென்று பெயரிட்டுத் திரிகிற தேவர்களுக்கு வெட்கமென்பது இல்லையோ? இருந்தால் தாம் தலைவரென்னும்பெயரை ஏற்றுக்கொள்ளாரென்பதாம். கராத்திரி - தீர்க்கசந்தி; இதுயானைக்கு அடையடுத்த உவமையாகுபெயர். முனம், அம் - சாரியை. கொல் - ஐயப்பொருளில்வந்த இடைச்சொல். ராத்திரி-வடசொல்; தொடர்மொழியில் இகரம்பெறுகின்றது. முன்னம், அம்-சாரியை. கண்டு, உம் - உயர்வுசிறப்பு. (உ௪)

கண்டவ னந்தரங் காலெரி நீர்வையங் காத்தவைமீண்
டுண்டவ னந்தரங் கத்துறை வானுய ரத்தமமர்
விண்டவ னந்தர மேலவன் வேங்கட மாலடிமை
கொண்டவ னந்தரத் தும்பேர் நினைக்கவுங் கூற்றஞ்சுமே.

உரை:—வையம் - பூமியையும், நீர் - தண்ணீரையும், எரி - தீயையும், கால் - காற்றையும், அந்தரம் - ஆகாயத்தையும், கண்டவன் - படைத்தவனும், அவை - அந்தஐந்துபூதங்களையும், காத்து - ——, மீண்டு - மறுபடி, உண்டவன் - எல்லாமழியுங்காலத்தில் அவையழியாமல் தான் உண்டு ரக்ஷித்தவனும், அந்த ———, ரங்கத்து - ஸ்ரீரங்கத்தில், உறைவான் - வஸிப்பவனும், அமர் - யுத்தகளத்தில், உயர் - உயர்ந்த, அத்தம் - கீதையின்பொருளை, விண்டவன் - அருச்சுனனுக்குச்சொன்னவனும், நம்

தரம் - நம்முடையதரத்தைக்காட்டிலும், மேலவன் - மேலானவனுமாகிய, வேங்கடம்மால் - திருவேங்கடத்துமாயவனுக்கு, அடிமை - அடிமைத்தொழிலை, கொண்டவன் - மேற்கொண்ட அடியானது, பேர் - பெயரை, அந்தரத்தும் - அவ்வடியவன் இருக்குங்காலத்தில், நினைக்கவும் - நினைக்கிறதற்கும், கூற்று - யமன், அஞ்சும் - நடுங்குவான் ; (எ-று.)

ஐந்துபூதங்களையும் படைத்துக் காத்து உண்டவனும் திருவரங்கத்திலிருப்பவனும் கீதை உபதேசித்தவனும் மேலோனும் திருவேங்கடத்திலிருப்பவனுமாகிய மாயோனுக்கு அடிமைத்தொழில்செய்யுந் தொண்டனது பெயரை அத்தொண்டனிறக்குங்காலத்தில் மனத்தில் நினைப்பதற்கும் யமன்பயப்படுவானென்பதாம். அந்த - அகரச்சுட்டின்மரூஉ. ஆகாயத்திற்காற்றும், காற்றில் தீயும், தீயில் நீரும், நீரில் நிலமும் தோன்றியமுறைபற்றி ஆகாயமுதலாகத்தோன்றுமுறை கூறியதாம். கூற்று - சொல்லால் அஃறிணையும் பொருளாலுயர்திணையுமாம். (உரு)

அஞ்சக் கரவட மூலத்தன் போத னறிவரிய
செஞ்சக் கரவட வேங்கட நாதனைத் தேசத்துள்ளீர்
நெஞ்சக் கரவட நீங்கியின் றேதொழு நீண்மறலி
துஞ்சக் கரவடம் வீசுமக் காலந் தொழற்கரிதே.

உரை:—தேசத்து உள்ளீர் - இந்தத்தேசத்திலுள்ள ஜனங்களே! அஞ்சு அக்கரம் - பஞ்சாக்ஷரத்தையுடைய, வடம் மூலத்தன் - கல்லாலமரத்தின்கீழிருப்பவராகியருத்திரமூர்த்தியும், போதன் - பிரமதேவரும், அறிவு அரிய - அறிதற்கரிய, செம்சக்கரம் - அழகியசக்கராயுதத்தையுடைய, வடவேங்கடநாதனை - வடதிசையிலுள்ள திருவேங்கடமலையிலிருக்கிற தலைவனை, நெஞ்சம் - உங்கள்மனத்திலுள்ள, கரவடம் - கபடங்களை, நீங்கி - போகவிட்டு, இன்றே - இப்பொழுதே, தொழும் - வணங்குங்கள் ; நீள்மறலி - நெடியயமனானவன், கரம் - தன்கையிலுள்ள, வடம் - பாசத்தை, (கயிற்றை,) துஞ்ச - நீங்களிறக்கும்படியாக, வீசும் - எறிந்துபற்றுகின்ற, அக்காலம் - அந்தமரணகாலத்தில், தொழற்கு - கடவுளைவணங்குவதற்கு, அரிது - அரியதொருகாரியமாகும் ; (எ - று.)

உலகத்தவரே! உங்கள்தீவினை நீங்கும்பொருட்டுப் பிரமருத்திரராலறியப்படாத திருவேங்கடநாதனை இப்பொழுதே வணங்குங்கள்; யமன் வந்து உங்களைக் கொன்று கொண்டுபோகக்கூடிய மரணகாலத்தில் அக்கடவுளை வணங்குவதற்கரிது என்பதாம். சிவபெருமான் கல்லாலமரத்தின்கீழ்தட்சிணாமூர்த்திவடிவமாயெழுந்தருளிப் பிரமபுத்திரராகிய, சனக சனந்தன சனாதன சனத்குமாரர்களுக்கு ஞானோபதேசஞ்செய்தமையால் வடமூலத்தனென்றார். மூலத்தன், போதன் - உம்மைதொக்க பெயர்ச்செவ்வெண். நீங்கி - பிறவினையில்வந்ததன்வினை. இன்றே, ஏ - தேற்றம். தொழற்கு - குவ்விகுதிபெற்றசெயவெனெச்சம். (உசு)

தொழும்பா லமரர் தொழும்வேங் கடவன் சுடர்நயனக்
கொழும்பா லனையொரு கூறுடை யானந்த கோபனில்லத்
தழும்பால னாகிய காலத்துப் பேய்ச்சி யருத்துநஞ்சைச்
செழும்பா லமுதென் றுவந்தாற்கென் பாடல் சிறக்குமன்றே.

உரை:—அமரர் - தேவரெல்லாம், தொழும்பால் - அடிமைத்தொழிலால், தொழும் - வணங்கப்பெற்ற, வேங்கடவன் - வேங்கடமலையிலிருப்

பவனும், சுடர் - எரிகின்ற, நயனம் - கண்ணுடைய, கொழும்பாலனை - சிறந்தநெற்றியில்விளங்கப்பெற்ற சிவபெருமானை, ஒருகூறு உடையான் - தனது ஒப்பற்றவலப்பக்கத்திலுடையவனுமாகிய மாயோன், நந்தகோபன் இல்லத்து - கோகுலத்தில் நந்தகோபன் மனையில், அழும் பாலன் ஆகிய காலத்து - அழுகின்ற இளங்குழந்தையாயிருந்தபொழுது, பேய்ச்சி - பேய்மகளாகியபூதனையென்பவள், அருத்தும் நஞ்சை - கொடுத்தவிஷத்தினை, செழும் - செழுமையாகிய, பால் அமுது என்று - பாலுணவு என்பதாக, உவந்தாற்கு - மகிழ்ந்து உண்ட அந்தமாயோனுக்கு, என்பாடல் - என்னுடைய கவிகளும், சிறக்கும் - சிறந்திருக்கும்; (எ-று.) அன்று, ஏ - அசைகள்.

வேங்கடவனும் சங்கரநாராயணஅவதாரமுடையவனுமாகிய திருமால் கிருஷ்ணாவதாரமெடுத்து நந்தகோபன் வீட்டில் வளருநாளில் கம்ஸன் அனுப்பிய பூதனையென்னும் பேய் தன்முலைப்பாலில் விஷத்தைக் கலந்து கிருஷ்ணனுக்குக்கொடுக்க அதனையும் உண்டு மகிழ்ந்தனனாதலின் அவனுக்கு யான்பாடியபாடல்களும் சிறக்கும்; என்பதாம். இது பற்றியே "வலத்தனன் திரிபுரமெரித்தவன்" "இடமால் வலம் தான் இடப்பால் துழாய் வலப்பாலொண்கொன்றை" என்றார் பெரியோரும். சிவபெருமானுடைய (உரு) மூர்த்திகளுள் அர்த்தாங்க விஷ்ணுமூர்த்தியென்று ஒன்று உள்ளதென்றும், அது யாவருக்கும் இருவினையொப்புவருமாறு கொள்ளப்பட்டதென்றும், மதவெறிபிடித்து மனம்போனபடி பிதற்றுகிற அறிவில்லாதவர்க்கு எல்லாத்தெய்வமும் ஒன்றென்றுகாட்ட இவ்வடிவமெடுக்கலாயிற்றென்றும் பெரியோர் கூறுவார். அன்றிச்சைவசமயத்தில் வேறொருவிதமாகக்கூறுகின்றார்கள்;

வருமாறு:— உமாதேவியார் தவஞ்செய்கையில் பரமசிவன் முதன்முறை நாராயணராகக் காட்சிகொடுக்க அதனை அவர் விரும்பாமையைப் பற்றிச் சங்கரநாராயணத்திருவுருவமாகக் காட்சிகொடுக்க அதனையும் அவர் விரும்பாததனால் சங்கரராகக் காட்சிகொடுத்தாரென்பது சங்கர நாராயணர்கோயில் தலபுராணகதை. ஷை தலம் சங்கரநயினார்கோயிலென்றும் வழங்கும்: இது திருநெல்வேலிஜில்லாவில் ஒருதாலூகாவாகவுள்ளது. (உஎ)

சிறக்கும் பதந்தரு வார்திரு வேங்கடச் செல்வர்செய்ய
நிறக்கும் பதந்தொழு துய்யவெண் ணீர்நெறி யிற்பிழைத்து
மறக்கும்ப தந்தியுஞ் சேலு மசுணமும் வண்டினமும்
பறக்கும் பதங்கமும் போலைவ ராற்கெடும் பாதகரே.

உரை:—மறம் - வலிமையுள்ள, கும்பம் - மத்தகத்தையுடைய, தந்தியும் - யானையும், சேலும் - மீனும், அசுணமும் - அசுணமென்னுமொருவகைமிருகமும், வண்டு இனமும் - வண்டின்கூட்டமும், பறக்கும் - பறக்கின்ற, பதங்கமும் - விட்டிற்பூச்சியும், போல்———, நெறியில் - நல்லமார்க்கத்தில் நின்றும், பிழைத்து - தவறி, ஐவரால் - ஐந்துபொறிகளாலும், கெடும் - கெட்டுப்போகின்ற, பாதகரே - கொடியோரே! (நீங்கள்), திருவேங்கடச்செல்வர் - திருவேங்கடத்திலிருக்கும் இறைவருடைய, செய்ய - சிவந்த, நிறக்கும் - நிறம்பொருந்திய, பதம் - திருவடிகளை, தொழுது - வணங்கி, உய்ய - நிலைபெறவாழ்வதற்கு, எண்ணீர் -

நினையுங்கள்; (அவர்), சிறக்கும் - சிறந்த, பதம் - மோக்ஷபதவியை, தருவார் - உங்களுக்குக்கொடுப்பார்; (எ - று.)

பஞ்சேந்திரியங்களையும்மற்றவழிகளிலே செலுத்தி அவற்றால் கெட்டுப்போகிற பாவிகளே! வேங்கடச்செல்வர் பாதங்களைத் தொழுது பிழைக்கும்படி யெண்ணுங்கள்; அவர் அப்படியே உங்களுக்கு நல்ல பதவியைக்கொடுப்பார்; என்பதாம். யானை - பரிசத்தால் படுகுழி யென்றறியாமல் அதில்விழுவது. மீன்-வாயில் சுவையால் தூண்டிலிலுள்ள இரையைவிழுங்குவது. அசுணம்-செவியால்வீணைமுதலியவற்றின் ஓசையைக் கேட்டவுடன் பறைத்தப்பின் ஓசையைக்கேட்டால் இறந்துபோவது. வண்டு - மூக்கால் தேனையறிந்துண்டு மயங்கிச்சாவது. விட்டிற்பூச்சி - கண்ணால் விளக்கைக்கண்டு அதில்வீழ்ந்து மடிவது. இவைபோல "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு, மொண்டொடி கண்ணே யுள" என்றுகூறிமாதர் மயக்கில்மயங்கி மாய்தலாம். ஐவர் - தொகைக்குறிப்புமொழி; அர் - இகழ்ச்சிக்குறிப்பு. தந்தி - தந்தத்தையுடையது. சேல் - மீன்சிறப்புப்பெயர்; இங்குப்பொதுப்பெயராயிற்று. அசுணம் - இசையறிவதொரு விலங்கு. (உஅ)

பாத மராவுறை பாதாளத் தூடு பகிரண்டத்துப்
போதம ராயிரம் பொன்முடி யோங்கப் பொலிந்துநின்றாய்
நீதம ரானவர்க் கெவ்வாறு வேங்கட நின்றருளு
நாத மராமர மெய்தாய்முன் கோவ னடந்ததுவே.

உரை:— மராமரம் - ஏழுமராமரங்களை, எய்தாய் - துளைத்தவனே! வேங்கடம் நின்றருளும் - திருவேங்கடமலையில் எழுந்தருளிய, நாத-தலைவனே! அரா-பாம்புகள், உறை-தங்குகின்ற, பாதாளத்து ஊடு-பாதாளத்துள்ளே, பாதம் - உன் பாதங்களும், பகிர் அண்டத்து - இந்த அண்டத்துக்குவெளியில், போது - மலர்கள், அமர் - பொருந்தியிருக்கின்ற, ஆயிரம் - ஆயிரமென்னுமெண்ணிக்கையுள்ள, பொன்முடி - அழகியதலைகளும், ஓங்க - உயர்ந்துதோன்ற, பொலிந்து - விளங்கி, நின்றாய் - நின்றனை; நீ - இத்தன்மையாகிய நீ, முன் - முன்னாளில், கோவல் - திருக்கோவலூரில், தமர் ஆனவர்க்கு - உன் அடியவர்கள் நிமித்தமாக, எவ்வாறு நடந்தது - எப்படி நடந்ததோ? [அறியேன்;] (எ - று.)

மராமரத்தைத் துளைத்தவனே! நாதனே! பாதாளத்துள்ளே உன் பாதங்களும் அண்டத்துக்கு வெளியில் உன் ஆயிரந்தலைகளுமாயோங்க விளங்கிநின்றனை; இப்படிப்பட்ட பெரியவடிவத்தையுடைய நீ முன்னாளில் திருக்கோவலூரில் உன் அடியார்கள் நிமித்தமாக எப்படிச் சிறிய வடிவத்தோடு நடந்ததோ? அறியேனென்பதாம். "மராமர மேழு மெய்த வாங்குவிற் றடக்கை நம்பி, யிராமனை வல்ல னென்பது" என்றார் சிந்தாமணியிலும். இராமபிரானை நட்புக்கொண்ட சுக்கிரீவனுடைய வன் வாலியைக்கொல்லத்தக்கவலிமை இராமனுக்கிருப்பதை அறிய வேண்டி எதிரில்நின்ற ஏழு மராமரங்களை ஒரு அம்பால் எய்கவென அங்ஙனமே இராமனெய்தனனென்பதாம்.

கோவல் நடந்தது:—'பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்' என்னும் மூவரும் ஒருவரையொருவரறியாமல் ஒரு நாள் திருக்கோவலூரில் பெருமாளைத் தரிசித்து மீண்டுவரும்பொழுது மழைவந்

தது; அப்பொழுது ஒருவீட்டுரேழி (இடைகழி)யில் மூவரும்வந்து நின்ற வளவில் திருமாலும் இடையில் வந்து நெருக்க உடனே அம்மூவரும் தம் அறிவாலறிந்து ஞானவிளக்கேற்றி மாயோனைக் கண்டுபிடித்துத் தனித்தனி அந்தாதிகள் பாடினரென்பதாம். பகிரண்டம் - வெளியண்டமுமாம். "ஸஹஸ்ரசீரிஷாபுருஷ:" என்ற வேதப்பொருள்களைக் கொண்டு ஆயிரம் பொன்முடியென்றார். தமர் - தம்மைச்சார்ந்தவர்.

நடைக்கலங் கார மடவார் விழிக்கு நகைக்குச் செவ்வாய்க்
கிடைக்கலங் கார முலைக்கிச்சை யான விவனென் றெண்ணிப்
படைக்கலங் காணத் துரந்தே நமன்றமர் பற்றுமன்றைக்
கடைக்கலங் காணப்ப னேயலர் மேன்மங்கை யங்கத்தனே.

உரை:—அப்பனே - (எல்லாவுயிர்களுக்குந்) தகப்பனானவனே! அலர்மேல்மங்கை - அலர்மேல்மங்கைநாயகியாரை, அங்கத்தனே - மார்பிலுடையவனே! அலங்காரம் - அழகுவாய்ந்த, மடவார் - மாதர்களின், நடைக்கு-நடைக்கும், விழிக்கு - கண்களுக்கும், நகைக்கு - சிரிப்புக்கும், செவ்வாய்க்கு - சிவந்தவாய்க்கும், இடைக்கு - இடுப்புக்கும், ஆரம் - முத்துமாலைகள், அலங்கு - அசைகின்ற, முலைக்கு - கொங்கைக்கும், இச்சை ஆன - ஆசைவைத்திருக்கிற, இவன் என்று - இந்த ஒருவனென்பதாக, எண்ணி - நினைத்து, காண - என்கண்காணும்படியாக, நமன்தமர் - யமதூதர்கள், படைக்கலம் - ஆயுதங்களை, துரந்து - பிரயோகித்து, பற்றும் அன்றைக்கு - என்னைப் பிடித்துக்கொண்டுபோகிற அந்த மரணகாலத்தில், அடைக்கலம் காண் - நான உன் அடைக்கலம், என்னை நோக்குவாயாக; (எ - று.)

அப்பனே! அங்கத்தனே! யமதூதரானவர்கள் என்னை நோக்கி இவன் மாதர்களின் நடைமுதலியவற்றி லிச்சைவைத்துள்ளவனென்று என்னை அடித்துப் பிடித்துக்கொண்டு போகுங்காலத்தில் நான் உன் அடைக்கலம்; என்னைப் பார்ப்பாயாக; என்பதாம். அப்பன் - திருவேங்கடமுடைய கடவுளின் திருநாமங்களில் ஒன்று. நடைக்கு முதலியவற்றிலுள்ள எண்ணும்மைகள் தொக்கன. படைக்கலம் - இருபெயரொட்டு. காண் - முன்னிலையசையுமாம். (௩௰)

அங்க மலைக்கும் வினையா லலமர வோவுனக்கு
மங்க மலைக்கு மடிமைப்பட் டேனர வானபரி
யங்க மலைக்குடை யாயக் கராவுட னன்றமர்செ
யங்க மலைக்குமுன் னின்றருள் வேங்கடத் தற்புதனே.

உரை:—அரவு ஆன - பாம்பாகிய, பரியங்க - கட்டிலையுடையவனே! மலை குடையாய் -கோவர்த்தனமென்னும் மலையைக் குடையாகக் கொண்டவனே! அ - அந்த, கராவுடன் - முதலையோடு, அன்று - வருந்தப்பட்ட, அமர்செய் - யுத்தஞ்செய்த, அங்கம் மலைக்குமுன் - பெரியமலைபோன்றிருக்கிற கஜேந்திரனென்னும் யானையின்முன்பு, நின்று - சென்றுநின்று, அருள் - (முதலையைக்கொன்று) அருள்செய்த, வேங்கடத்து - திருவேங்கடமலையிடத்தெழுந்தருளிய, அற்புதனே - ஆச்சரியமானசெய்கையுடையவனே! அங்கம் - சரீரத்தை, அலைக்கும் - துன்பப்படுத்துகின்ற, வினையால்-இருவினையால், அலமரவோ - சுழலவோ,

உனக்கும்—, அம் - அழகிய, கமலைக்கும் - திருமகளாருக்கும், அடிமைப் பட்டேன் - தொண்டனாக அமைந்தேன்; (எ-று.) இப்பாடல் - யமகம்.

பரியங்கனே! மலைக்குடையோனே! கஜேந்திரனுக்கு அருள்செய்த வேங்கடத்து அற்புதனே! துன்பப்படுத்துகிற இருவினையிலும் அகப்பட்டுச்சுழலுதற்கோ உனக்கும் தேவியார்க்கும் நான் அடிமைப்பட்டேன்? என்பதாம். பாரப்பு - ஆதிசேஷன்.

மலையைக் குடையாகக்கொண்டது :—இடையர்கள் ஆய்ப்பாடியில் மழைவேண்டி இந்திரனுக்குச்செய்த பூசனையை கண்ணபிரான் வஞ்சித்து அருகிலுள்ள கோவர்த்தனமலைக்குப் படைக்கச்சொல்லித் தானே அதனை ஏற்றுக்கொண்டதனால் இந்திரன் சினந்து பெருமழை பெய்வித்து வருத்த கண்ணன் அந்த மலையைப் பிடுங்கிக் குடையாகக்கொண்டு அங்குள்ள இடையர்களையும் அவர் மாடுகளையும் காப்பாற்றினனென்பதாம். ஓ - எதிர்மறை. பரியங்கம். அற்புதம் - வடசொற்கள். கரா - தண்ணீரில் ஒளிக்கப்படுவது; தனித்தமிழ்மொழி. அன்று - அக்காலத்திலுமாம். அலமர, அலமா - பகுதி. (ருக)

அற்ப ரதத்து மடவார் கலவியு மாங்கவர்க
ளற்பர தத்து நடிப்பதும் பாடலு நச்சிநிற்பார்
நிற்ப ரதத்துக் கதிர்தோயும் வேங்கட நின்றருளுஞ்
சிற்பர தத்துவன் றாளடைந் தேன்முத்தி சித்திக்கவே.

உரை:—மடவார் - மாதர்களுடைய, அற்பம் - சிறிய, ரதத்து - சுவையினையுடைய, கலவியும் - போகத்தையும், ஆங்கு - அவ்விடத்தில், அவர்கள் - அந்தமாதர்கள், நல் - நல்ல, பரதத்து - பரதசாஸ்திரப்படி, நடிப்பதும் - நடனஞ்செய்வதையும், பாடலும் - இசைப்பாடல்பாடுவதனையும், நச்சி நிற்பார் - விரும்பி நிற்பவர்கள், நிற்ப-நிற்பாராக; (யான்), முத்திசித்திக்க - மோட்சபதவி சித்தியடையவேண்டி, ரதத்து - இரதத்தில் வருகிற, கதிர் - சூரியனானவன், தோயும் - வந்து தங்கப்பெற்ற, (உயர்ச்சியையுடைய), வேங்கடம் - திருவேங்கடமலையில், நின்று அருளும் - எழுந்தருளியிருக்கிற, சிற்பரதத்துவன் - சின்மயமாகிய பரதத்துவப்பொருளானவனுடைய, தாள் - பாதங்களை, அடைந்தேன் - சரணமாகப்புகுந்துவிட்டேன்; (எ - று.)

மாதர்களின் போகமுதலியவற்றை விரும்பி நிற்பவர்கள் நிற்கட்டும்; யான் அப்படிப்போகாமல் மோட்சமாகிய பரமபதம் கைகூடவேண்டித் திருவேங்கடப்பெருமான் பாதங்களைச் சரணமடைந்துவிட்டேன்; என்பதாம். நிற்ப - வியங்கோள்முற்று. கதிர் - சினையாகுபெயர். சித்-ஞானமாகிய, பரம் - மேலாகிய, தத்துவன் - உண்மையானவன். யான் - தோன்றா எழுவாய். கதிர்தோய்தல் - உயர்வுநவிற்சியணி. (ருஉ)

சித்திக்கு வித்தது வோவிது வோவென்று தேடிப்பன்னூல்
கத்திக் குவித்தபொய்ப் புத்தகத் திரட்டுரைக்கவம்மி
னத்திக்கு வித்தனை யும்முண்ட வேங்கடத் தச்சுதனே
முத்திக்கு வித்தக னென்றே சுருதி முறையிடுமே.

உரை :—சித்திக்கு - மோட்சத்திற்கு, வித்து - மூலமானது, அதுவோ - அந்தப்பொருள்தானோ, (அல்லது.) இதுவோ - இந்தப்பொருள்

தானே, என்று - என்றுநினைத்து, பல் - பலவாகிய, நூல் - சாஸ்திரங்களை, தேடி - ஆராய்ந்து, கத்தி - ஓயாமல் கதறி, குவித்த - (ஒருமூலையில்) குவித்துக்கிடக்கிற, பொய் - பொய்யாகக்கட்டிய, புத்தகத்தீர் - சுவடிகளையுடையவர்களே! அத்தி - சமுத்திரம், கு - பூமி, இத்தனையும் - ஆகிய இவ்வளவையும், உண்ட - தன்வயிற்றிற்புக உண்டருளிய, வேங்கடத்து - திருவேங்கடத்திலுள்ள, அச்சுதனே - அழியாக்கடவுளே, முத்திக்கு - மோட்சபதந்தருவதற்குரிய, வித்தகன் என்று - ஞானவடிவமுடையவனென்று, சுருதி - வேதங்களெல்லாம், முறையிடும் - முறையிடுகின்றன; (ஆதலால் யான்), கட்டுரைக்க - உறுதியாகச்சொல்ல, வம்மின் - வாருங்கள்; (எ - று.)

முத்திதருவதற்கு அதுகாரணமோ அல்லது இதுதான் மூலமோவென்று தேடிப் பல பொய்ச் சாஸ்திரங்களையும் படித்துக்குவித்துவைத்திருக்கிற மனிதர்களே! எல்லாவற்றையும் தன்வயிற்றடக்கிய திருவேங்கடநாதனே மோக்ஷாதிகாரியென்று வேதங்களெல்லாம் முறையிடுகின்றன; அவ்விஷயத்தை யான் உங்களுக்கு உறுதியாகச்சொல்ல வாருங்கள்: என்பதாம். அதுவோ இதுவோ என்பனவற்று, ஓ - ஐயப்பொருளன. அச்சுதனே, ஏ - தேற்றம். என்றே, ஏ - இசைநிறை. அத்தம் - கை; அதனையுடையது அத்தி. சுருதி - காதினால் கேட்கப்படுவது; இதுபற்றியே கேள்வியென்பதும். முத்தம் - விடப்படுவது; எல்லாப்பற்றும் விடுவதே முத்தியென்பதாம். "சுதலறந் தீவினைவிட் டீட்டல்பொருளெஞ்ஞான்றுங், காத லிருவர் கருத்தொருமித் - தாதரவு, பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும், விட்டதே பேரின்ப வீடு." என்பதனாலறிக. (௩௩)

முறையிடத் தேச மிலங்கைசெற் றுன்முது வேங்கடத்து
ளிறையிடத் தேசங் குடையா னினியென்னை யாண்டிலனேற்
றறையிடத் தேயுழ லெல்லாப் பிறவி தமக்குமள
வுறையிடத் தேய்ந்திடு மிவ்வந்தி வானத் துடுக்குலமே.

உரை:--தேசம் - உலகம், முறையிட - முறையிட்டலற, இலங்கை - இலங்கைத்தீவிலுள்ள அரக்கரை, செற்றோன் - அழித்தவனும், இடத்தே - இடக்கையில், சங்குடையான் - பாஞ்சசன்னியமென்னும் சங்கத்தையுடையவனுமாகிய, முது - பழமையாயுள்ள, வேங்கடத்துள் - திருவேங்கட மலையினிடத்திலிருக்கிற, இறை - தலைவன், இனி - இப்பொழுது, என்னை --------, ஆண்டிலனேல் - ஆண்டுகொள்ளானேயானால், (யான்,) தறையிடத்தே - பூமியில், உழல் - பிறந்து வருந்துகின்ற, எல்லாப் பிறவி தமக்கும் - எல்லாப்பிறப்புக்களுக்கும், அளவு - கணக்கு அறியவேண்டி, இ அந்திவானத்து - இந்தமாலைக்காலத்தில் ஆகாயத்தில் தோன்றுகிற, உடு குலம் - நக்ஷத்திரக்கூட்டங்கள், உறை இட - உறையென்னும் இலக்கத்தின் குறியிட, தேய்ந்திடும் - குறைந்துபோகும்; (எ - று.)

இலங்கையழித்தவனும் இடக்கையிற் சங்கினை உடையவனுமாகிய திருவேங்கடநாதன் என்னை இப்பொழுது ஆண்டுகொள்ளாவிட்டால் நான் இனிப்பிறக்கும்பிறவிகளைக் கணக்கிட்டு அளவறிய (நூற்றுக்கு ஒன்றுவீதம்) ஆகாசத்தில் தோன்றுகிற நட்சத்திரங்களையெல்லாம் உறைவைத்தாலும் அந்த நக்ஷத்திரங்கள் போதாமல் குறைவுபடுமென்ப

தாம். செற்றான், செறு - பகுதி. பிறவிதமக்கு, பிறவி - தொழிற்பெயர்; தம்-சாரியை. உடுகுலம் - வடசொல். தேய்த்திடு, இடு - பகுதிப்பொருள் விகுதி. தேசம், இலங்கை - இடவாகுபெயர்கள். (௫௪)

உடுக்கு முடைக்கு முணவுக்கு மேயுழல் வீரினிநீ
ரெடுக்கு முடைக்குரம் பைக்கென்செய் வீரிழி மும்மதமு
மிடுக்கு முடைக்குஞ் சரந்தொட்ட வேங்கட வெற்பரண்ட
வடுக்கு முடைக்கு மவரடி காண்மி னனைவருமே.

உரை:—நீர் - நீங்கள், அனைவரும் - எல்லாரும், உடுக்கும் - உடுத்துக்கொள்ளுகிற, உடைக்கும் - வஸ்திரத்தினைச் சம்பாதிப்பதற்கும், உணவுக்குமே - ஆகாரத்தைச் சம்பாதிப்பதற்குமே, உழல்வீர் - சுழன்று திரிந்துவருந்துகின்றீர்; இனி - இனிமேல், எடுக்கும் - எடுக்கப்போகிற, முடை - துர்நாற்றத்தையுடைய, குரம்பைக்கு - சரீரத்தையெடுக்காமல் ஒழிப்பதற்கு, என் செய்வீர் - யாதுசெய்யநினைக்கின்றீர்? இழி - வழிகின்ற, மும்மதமும் - மூன்றுமதங்களும், மிடுக்கும் - வலிமையும், உடை - உடைய, குஞ்சரம் - யானையினது தந்தத்தை, தொட்ட - பிடுங்கின, வேங்கடம் வெற்பர் - திருவேங்கடமலையிலிருப்பவராகிய, அவர் - அவருடைய, அண்டம் அடுக்கும் - அண்டங்களின் அடுக்குக்களையெல்லாம், உடைக்கும் - உடைத்து அதனிடையேவிளங்குகின்ற, அடி - பாதங்களை, காண்மின் - தரிசியுங்கள்; [இனி முடைக்குரம்பை எடுக்காமலிருக்கலாம்] (எ - று.)

நீங்களெல்லாரும், உடைதேடுதற்கும் உணவுதேடுதற்குமே காலம் போக்குகின்றீர்; இனிப்பிறப்பை ஒழிப்பதற்கு யாதுசெய்ய நினைக்கின்றீர்? ஆதலால் குவலயாபீடமென்னும் யானையின் தந்தத்தைப்பிடுங்கினவரும் திருவேங்கடத்திலிருப்பவருமாகிய இறைவர் பாதங்களைத் தரிசியுங்கள் உங்கள் பிறப்பறுக்கலாம்; என்பதாம். மும்மதம் - கன்னமதம், கபோலமதம், பீஜமதம். குவலயாபீடம்-மதுரையில்வந்த கண்ணபிரானைக் கொல்லவேண்டிக் கம்ஸனாலனுப்பப்பட்ட யானை. தொடுதல்-பறித்தல்; விசுவரூபமெடுக்குங்கால் எல்லாவண்டங்களையும் பொத்துக்கொண்டுசென்று திருவடிகள் விளங்குவதும் அப்படியே தலைகள் விளங்குவதுமுளவென்று நூல்கள்கூறும், உழல்வீர் - முன்னிலைவினைமுற்று. காண்மின் - ஏவற்பன்மைமுற்று. குஞ்சரம் - தந்தத்துக்கு பொருளாகுபெயர். (௫௫)

வருமஞ் சனவ னொருவனை யேயுன்னி வாழ்த்துந்தொண்டீர்
கருமஞ் சனனங் களைந்துய்ய வேண்டிற் கருதிற்றெல்லாந்
தருமஞ் சனவெற்பன் றாட்டா மரையைச் சதுமுகத்தோன்
றிருமஞ் சனஞ்செய் புனல்காணு மீசன் சிரம்வைத்ததே.

உரை:—தொண்டீர் - அடியார்களே! கருதிற்று எல்லாம் - நினைத்ததையெல்லாம், தரும்-கொடுக்கின்ற, அஞ்சனம்வெற்பன் - அஞ்சனமலையிலிருப்பவனாகிய மாயோனுடைய, தாள் தாமரையை - திருவடித்தாமரைகளை. சதுமுகத்தோன் - பிரமதேவன், திருமஞ்சனம்செய் - அபிஷேகம்செய்த, புனல் - கங்கைநீரை, ஈசன் - முதற்கடவுளாகிய சிவபெருமான், சிரம்வைத்தது - தலைமேல் வைத்துக்கொண்டதை,

காணும் - பாருங்கள் ; (ஆதலால்,) கருமம் - உங்கள் இருவினையையும், சனனம் - பிறப்புக்களையும், களைந்து - அழித்துவிட்டு, உய்யவேண்டில் - அவற்றில் நின்றும் தப்பவேண்டினால், வரும்-ஆகாயத்தில் சஞ்சரிக்கிற, மஞ்சு - நீலமேகத்தை, அன்னவன் - ஒத்தவனாகிய, ஒருவனையே - அந்தமாயோனொருவனையே, உன்னி - தியானித்து, வாழ்த்தும் - துதியுங்கள் ; (எ - று.)

தொண்டர்களே ! அஞ்சனத்திரியிலிருக்கிற எம்பெருமான் திருவடித்தீர்த்தமாகிய கங்கையைச்சிவபிரான் தரித்தருளினமையால் இவனேசிறந்தவன் ; உங்கள் வினையையும் பிறப்பையும் நீக்கிப்பிழைக்க வேண்டில் நீலமேகவண்ணனாகிய இவனையே வாழ்த்துங்கள்; என்பதாம். மாயோன் மாவலியிடத்துமண் இரந்துபெற்றுத் திரிவிக்கிரமாவதாரமெடுத்து ஆகாயத்தை ஓரடியாலளந்தபொழுது பிரமதேவன் ஆகாயகங்கைநீரைத் தன் கமண்டலத்தில் முகந்து அந்தத்திருவடிகளில் அபிஷேகம்பண்ணினான் ; ஆகாயத்தை மாயோனளந்ததனால் அந்த ஆகாயத்திற்கு விஷ்ணுபதமென்றும் ஆகாயகங்கைக்கு விஷ்ணுபதியென்றும் பெயராயின ; பிற்பட்டு அனேககாலங்கழித்து அயோத்தியிலிருந்த பகீரதன் கங்கையைப் பூமியில் தருவிக்க அக்கங்கை வரும்வேகத்தைப் பூமி தாங்காதென்றறிந்து சிவபெருமானைவேண்ட அப்பெருமான் தம் சடையிற்றாங்கிப் பூமியில் விடுத்தருளினாரென்பது பிரசித்தம்; இக்கதை முன்னும்பின்னும் நடந்த விஷயத்தை ஒரேகாலத்திலாக்கி மாயோனுக்கு ஒரு சிறப்பை உண்டுபண்ணவேண்டி வைஷ்ணவர்கள் தம் மதாபிமானமேலீட்டினால் இங்ஙனங்கூறுதல் வழக்கமாம்; புராணத்திலுளதோவெனில் இருவகைப்பாகவத நூலிலுமில்லை. இக்கதையை உறுதிப்பாடு செய்யவேண்டிச் சிலர் சிலபாடல்களும் பாடியிருக்கிறார்கள்; அவற்றைக்கொண்டு இதனை நிச்சயித்தற்கிடமில்லையாதலின் அப்பாடல்களை எடுத்துக்காட்டவில்லை. (௩௬)

சிரந்தடி வானிவ னேயென் றயன்வெய்ய தீயசொல்லக்
கரந்தடி வான்றலை கவ்வப்பித் தேறலிற் கண்ணுதலோ
னிரந்தடி வீழத் துயர்தீர்த்த வேங்கடத் தெந்தைகண்டீர்
புரந்தடி யேனைத்தன் பொன்னடிக் கீழ்வைக்கும் புண்ணியனே.

உரை:—'சிரம் - என் தலையை, தடிவான் - கொய்பவன், இவனே - இச்சிவபிரானே' என்று - என்பதாக, அயன் - பிரமதேவன், வெய்ய - கொடிய, தீய - கெட்ட வார்த்தைகளை, சொல்ல - சொல்லும்படியாக, (சிவபிரான் கட்டளையால் வைரவக்கடவுள் தன் கையினால் பிரமன் நடுத்தலையைக் கிள்ளியெடுத்தலும்) கரம் - அப்படி யெடுத்த கையில், தடி - தசையையுடைய, வான் - பெரிய, தலை - அந்தப் பிரமகபாலம், கவ்வ - பற்றிக்கொள்ள, பித்து ஏறலில் - இரத்த வெறியால் மயக்கங்கொண்டதனால், கண் நுதலோன் - அந்த நெற்றிக்கண்ணையுடைய வைரவன், இரந்து - இரத்த பிக்ஷை கொடுக்கவேண்டுமென்று கேட்டு, அடி வீழ - திருவடியிலே விழுதலும், அப்படியே பிக்ஷை கொடுத்து, துயர் தீர்த்த - துன்பத்தை நிவர்த்தி செய்த, வேங்கடத்து - திருவேங்கடத்திலுள்ள, எந்தை - எமது தந்தைபோல்வான், அடியேனை - அவனடிமையாகிய என்னை, புரந்து - காத்து, தன் ——, பொன் - அழ

கிய, அடி கீழ் - திருவடி நிழலில், வைக்கும் - வைத்தருளுகின்ற, புண்ணியன் - புண்ணிய வடிவமுடையவன்; கண்டீர் - பாருங்கள்; (எ-று.)

பிரமன் சிவபிரானை நிந்தித்தபொழுது அவரேவலால் வைரவக் கடவுள் சென்று அந்தப் பிரமாவின் நடுத்தலையைக் கொய்தெடுக்கவும் அந்தக்கபாலம் கையிற் பற்றிக்கொண்டதனால் வைரவன் யாசிக்க அவனுக்கு பிச்சை கொடுத்த வேங்கடத்தப்பன் என்னைக்காத்துத் தன்னடியில் வைக்கும் புண்ணியன் காணுங்களென்பதாம்.

ஈய - வினைப்பெயர். கண்டீர் - முன்னிலையசையுமாம். ஏறலின் - மூன்றனுருபு; ஏதுப்பொருட்டு. அஜன் - 'ஈட்டேயவ்வும்' என்றதனால் அயன் என்றாயிற்று; [நன் - பத - ௨0]. சிவபிரான் சாபமிட்டதாகவும் மாயோன் பிச்சையிட்டதாகவும், "வாளையார் தடங்க ணுமைபங்கன் வன்சாப மற்றது நீங்க" என்றும் "வெந்தா ரென்புஞ் சுடுநீறு மெய்யிற் பூசிக் கையகத்தோர், சந்தார் தலைகொண் டுலகேழுந் திரியும் பெரியோன் றான்சென்றென்,னெந்தாய் சாபந் தீரென்ன விலங்க முதுநீர் திருமார்பிற், றந்தான் சந்தார் பொழில் சூழ்ந்த சாளக் கிராம மடை நெஞ்சே" என்றும் திருமங்கையாழ்வார்கூறிய பாசுரங்களாலுமறிக. (௩எ)

புண்ணியங் காமம் பொருள் வீடு பூதலத் தோர்க்களிப்பா
னெண்ணியங் காமன் றிருத்தாதை நிற்கு மிடமென்பரா
னண்ணியங் காமன் பரைக்கலங் காத்திரு நாட்டிருத்தி
மண்ணியங் காமற் பிறப்பறுத் தாளும் வடமலையே.

உரை:— நண்ணி - தன்னையடைந்து, அங்கு - அவ்விடத்தில், ஆம் - மேன்மைப்பட்டிருக்கிற, அன்பரை - அடியார்களை, கலங்கா - அஞ்சாமல், திரு நாட்டு இருத்தி - பரமபதத்திலேயே இருக்கும்படி செய்து, மண் - பூமியில், இயங்காமல் - சஞ்சரிக்காமல், பிறப்பு - அவர் பிறவியை, அறுத்து - போக்கி, ஆளும் - ஆண்டருளுகின்ற, வடமலை - திருவேங்கடமலையானது, அம் - அழகிய, காமன் - மன்மதனுக்கு, திருதாதை - சிறந்த தந்தையாகிய மாயோன், பூதலத்தோர்க்கு - இந்தப் பூவுலகத்திலிருப்பவருக்கு, புண்ணியம் - தருமத்தையும், காமம் - இன்பத்தையும், பொருள் - செல்வத்தையும், வீடு - மோக்ஷத்தையும், அளிப்பான் - கொடுப்பதற்காக, எண்ணி - நினைத்து, நிற்கும் - நிற்கின்ற, இடம் என்பர் - இடமாகுமென்று பெரியோர் சொல்லுவார்; (எ - று.) ஆல் - அசை.

அன்பர் பிறப்பறுத்துப் பரமபதத்தைத் தருகின்ற வேங்கடமலையானது மாயவன் உலகத்தவர்க்குத் தருமார்த்த காம மோக்ஷமாகிய புருஷார்த்தங்களைக் கொடுக்கும் பொருட்டு எழுந்தருளி யிருக்கிற இடமாகுமென்று பெரியோர் சொல்லுவார்; என்பதாம். மன்மதன் கிருஷ்ணனுக்குப் பிள்ளையாய்ப் பிறந்ததனால் காமன் தாதை யென்றார். பெரியோர் - தோன்றா எழுவாய். நண்ணி யென்னும் வினையெச்சம் ஆம் என்பதைக்கொண்டது. ஆம் அன்பர் பெயரெச்சத் தொடர். கலங்கா - ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம். பிறப்பு - தொழிற்பெயர்.

வடமலை யப்பன் னகஞ்சேர்ந் தவனிடை மங்கைகொங்கை
வடமலை யப்பன் னரும்போகந் துய்த்தவன் மாயன் கண்ணன்
வடமலை யப்பன் னருள்போற்றி யைவர் மயக்கு கர
வடமலை யப்பன் னிருநாம நாவின் மலக்குவனே.

உரை:—வடம் - ஆலிலையிலும், அலை - திருப்பாற்கடலிலும், அ - அந்த, பன்னகம் - பாம்பின் (ஆதிசேடன்) இடத்திலும், சேர்ந்தவன் - யோக நித்திரை செய்தருளியவனும், இடை மங்கை - இடைப்பெண்களுடைய, கொங்கை - கொங்கைகளின்மேல், வடம் - முத்து மாலைகள், அலைய - அசைந்தாட, பன்ன அரும் - சொல்லுதற்கரிய, போகம் - இன்பத்தை, துய்த்தவன் - அனுபவித்தவனும், மாயன் - உலகத்தை மயக்குவிக்கும் மாயையையுடையவனும், கண்ணன் - கிருஷ்ணனென்னும் திருநாமமுடையவனுமாகிய, வடமலையப்பன் - திருவேங்கடமலையிலிருக்கிற என்தந்தையினது, அருள் - திருவருளை, போற்றி - துதித்து, ஐவர் - பஞ்சேந்திரியங்கள், மயக்கு - என்னை மயக்குகின்ற, கரவடம் - வஞ்சனையானது, அலைய - நீங்கும்படி, (அக்கடவுளினுடைய,) பன்னிரு நாமம் - பன்னிரண்டு திருநாமங்களையும், நாவில் - எனது நாக்கினால், மலக்குவன் - உச்சரிப்பேன்; (எ - று.) இப்பாடல் யமகம்.

இலையிலும் கடலிலும் ஆதிசேஷனிடத்திலும் நித்திரை செய்பவனும் ஆய்ச்சியரை யனுபவித்தவனும் மாயோனும் கண்ணனுமாகிய வடமலையப்பனது கருணையைத் துதித்து என்னை மயக்குகின்ற பஞ்சேந்திரியங்களுடைய வஞ்சனை யெல்லா நீங்கும்படி அக்கடவுளின் பன்னிரண்டுதிருப்பெயர்களையும் உச்சரிப்பேனென்பதாம். பன்னிருநாமங்களாவன:—(1) கேசவன், (2) நாராயணன், (3) மாதவன், (4) கோவிந்தன், (5) விஷ்ணு, (6) மதுசூதனன், (7) திரிவிக்கிரமன், (8) வாமனன், (9) சிறீதரன். (10) ரிஷீகேசன், (11) பதுமநாபன் (12) தாமோதரன் என்பன. வடம், அலை, பன்னகம் - பெயர்ச்செவ்வெண்; ஈற்றிலும்மை தொக்கது செய்யுள் விகாரம். பன்ன, அ - தொக்கது. மாயன் கண்ணன் முதலியன ஒருபொருள் மேற்பலபெயரடுக்கி வந்தன. ஐவர் - இகழ்ச்சிக்குறிப்பு. (௩௧)

மலங்கத் தனத்தை யுழன்றீட்டி மங்கையர் மார்பில்வட
மலங்கத் தனத்தை யணைபநிற் பீரப்பன் வேங்கடத்து
ளிலங்கத்த னத்தை மகன்றேரி னின்றெதி ரேற்றமன்னர்
கலங்கத்த னத்தைக் குறித்தானை மேவக் கருதுமினே.

உரை:—(மனிதர்களே!) மலங்க - (உங்கள் மனம்) கலங்க, உழன்று - வருந்தி, தனத்தை - பொருளை, ஈட்டி - சேகரித்து, மங்கையர் - பருவமாதர்களினுடைய, மார்பில் ———, வடம் - மாலைகள், அலங்க - அசைந்தாட, தனத்தை - கொங்கைகளை, அணைய - சேருமாறு, (அதற்குவேண்டிய செலவு செய்து,) நிற்பீர் - அந்த வழியில் நிற்கின்றீர்கள்; (இக்காரியத்தாற் பயனில்லைகாணும்.) அப்பன் - தந்தையானவனும், வேங்கடத்துள் - திருவேங்கடமலையுள், இலங்கு - விளங்குகின்ற, அத்தன் - தலைவனும், அத்தைமகன் - அத்தையாகிய குந்தியின் புத்திரன் அருச்சுனனது, தேரில்நின்று - இரதத்தின்மேல்நின்று, எதிர் - தன்முன்பு, ஏற்ற - எதிர்த்த, மன்னர் - அரசரெல்லாரும், கலங்க - மயங்கும்படியாக, தன் -

தனது, நத்தை - சங்கத்தை, குறித்தானை - ஊதினவனுமாகியமுதல்வனை, மேவ - அடைய, கருதுமின் - நினையுங்கள்; (இதனாற்பயனுண்டு); (எ-று.)

(மனிதர்களே !) பொருளைச்சேர்த்து மாதர்கள் சிற்றின்பத்திலாழ்ந்து அதற்கேற்பச் செலவுசெய்திருக்கின்றீர்கள்; அதனாற் பயனில்லை கண்டீர்; அப்பனும் வேங்கடத்தள் அத்தனும் பாரதயுத்தத்தில் அருச்சுனன்தேரில்நின்று சங்கத்தவனிசெய்து பகைவரை மயக்கினவனுமாகிய இறைவனைச் சார்ந்து மகிழ நினையுங்கள்; இதனாற்பயனுண்டென்பதாம்.

பாரதம்-பதினான்காம்போர்ச்சருக்கத்து அருச்சுனன்பகைவரொடு போர்செய்தகாலத்து இவன்களைக்கும்படி பகைவர் ஒருசேரப்போர் செய்தலால் கண்ணபிரான் தன்சங்கத்தை ஊதியாவருமயங்கச்செய்தனனென்பதாம். உழன்று, உழல் - பகுதி. ஈட்டி, ஈண்டுஎன்பதன்பிறவினை ஈட்டு - பகுதி, நிற்பீர் - முன்னிலை முற்று; விளியாக்கவுமமையும். (௪0)

கருத்தா தரிக்கு மடியேனைத் தள்ளக் கருதிக்கொல்லோ
திருத்தா தரிக்குமை வர்க்கிரை யாக்கினை செண்பகத்தின்
மருத்தா தரிக்கு மருவிய றுவட வேங்கடத்து
வொருத்தா தரிக்கும் படியெங்ங னேயினி யுன்னைவிட்டே.

உரை :— செண்பகத்தின் - செண்பகப்பூக்களினுடைய, மரு - வாசனைபொருந்திய, தாது - மகரந்தங்களை, அரிக்கும் - அரித்துக்கொண்டுவருகிற, அருவி - அருவிநீர், அறு - நீங்காத, வட வேங்கடத்துள் - வடதிசையிலுள்ள திருவேங்கடமலையிலே இருக்கிற, ஒருத்தா — ஒப்பில்லாதவனே ! கருத்து - நினைவில், ஆதரிக்கும் - (உன்னையே) விரும்புகின்ற, அடியேனை - தொண்டனாகிய என்னை, தள்ள - புறத்தில் தள்ளிவிடுதற்கு, கருதி கொல்லோ - நினைத்தோ, திருத்தாது - ஒழுங்காயில்லாமல், அரிக்கும் - கெடுக்கின்ற, ஐவர்க்கு - பஞ்சேந்திரியங்களுக்கு, இரை ஆக்கினை - உணவாகச்செய்தனை; இனி - இன்மேல், உன்னைவிட்டு - உன்னை விட்டுநீங்கி, தரிக்கும் - ஓரிடத்தில் தங்கியிருக்கிற, படி - விதமானது, எங்ஙன் - எப்படி? (எ - று.)

வேங்கடத்துளிருக்கிற ஒப்பற்றவனே! என்னைக் கைவிடுதற்கு நினைத்துத்தானோ பஞ்சேந்திரியங்களுக்கு என்னை உணவாகக்கொடுத்தனை? இனி உன்னைவிட்டுத் தரித்திருக்கும் விதந்தானெப்படி? (உரைப்பாயாக); என்பதாம். கொல் - ஐயப்பொருள்தருமிடைச்சொல். ஓ - இசைநிறை. ஐவர் - தொகைக்குறிப்புமொழி; இது அஃறிணையை உயர்திணையாகக்கூறியது இகழ்ச்சிபற்றி. அறு - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். வடவேங்கடம் - இனமில்லாததனை அடைகொடுத்துக்கூறியது வழுவமைதி. (௪௧)

உன்னைக் கரிய மிடற்ற னயன்முத லும்பரெல்லாம்
பொன்னைக் கரியொத்த போதுமொவ் வார்புகழ்க் கோசலையா
மன்னைக் கரியமுத் தேயப்ப னேயுன்னை யன்றிப்பின்னை
முன்னைக் கரியளித் தாய்க்குவ மான மொழியில்லையே.

உரை :— புகழ் - கீர்த்தியையுடைய, கோசலையாம் - கோசலாதேவியாகிய, அன்னைக்கு - தாய்க்கு, அரிய முத்தே — அருமையாகிய முத்

தாய்போன்றவனே ! அப்பனே - என்னப்பனே ! பொன்னே-தங்கத்தை, கரி - கரியானது, ஒத்தபோதும் - சமானமானபோதிலும், கரியமிடற்றன் — கரியகழுத்தினையுடைய ருத்திரனும், அயன் - பிரமதேவனும், முதல் - முதலாகிய, உம்பரெல்லாம் - தேவரெல்லாரும், உன்னை ஒவ்வார்-உனக்கு நிகராகமாட்டார் ; (ஆதலால்,) முன்னே-முன்னாளில், கரி-யானையை, அளித்தாய்க்கு - காத்த உனக்கு, உன்னையன்றி — உன்னையல்லாமல், உவமானம் - உவமானமாகிய, மொழி - சொல், பின்னே-வேறு, இல்லை—— ; (எ-று.) இன்னும்வேறு பொருள்கூறுமாறு:— பின்-எல்லாம் அழிந்தபிற்பாடும் நிற்கின்ற, ஐ - இறைவனே ! முன்-எல்லாம் தோன்றுவதற்கு முன்னமேயுள்ள, ஐ - இறைவனே ! கரி-எல்லா வுயிர்களிலும் சாட்சியாகிவிளங்குபவனே ! அளி - கருணையுடைய, தாய்க்கு-எல்லாவுயிர்களுக்கும் தாயாகியஉனக்கு; என்று உரைப்பினும்அமையும்.

முத்தே ! அப்பனே ! பொன்னைக்கரி ஒத்தாலும் ஒப்பாகும் பிரமருத்திராதிகள் உன்னை ஒருபோதும் ஒப்பாகார் : கஜேந்திரவரதனாகிய உனக்கு நீயே நிகரல்லாமல் வேறு உவமிக்க ஒன்றுமில்லையென்பதாம். உம்பர் - ஆகாயம் ; இடவாகுபெயராய்த் தேவரையுணர்த்திற்றென்பார்க்கு, உம்பன் எனத் தேவனுக்குப்பெயர் சான்றோர் செய்யுளில் வருதலால் இடவாகுபெயரில்லையென்க. முத்து - உவமையாகுபெயர். பின்னே. முன்னே, ஐ - சாரியை. அளித்தாய் — முன்னிலைவினையாலணையும் பெயர். பின், முன் - முரண்தொடை. (௪௨)

இல்லைக்கண் டீரின்பந் துன்பங்கண் டீர்கண்ட வேந்திழையார்
சொல்லைக்கண் டீரமு தென்னுந்தொண் டீர்தொல் லசுரனிறங்
கல்லைக்கண் டீரவத் தைத்திரு வேங்கடக் காவலனை
மல்லைக்கண் டீர்தரத் தேய்த்தானை வாழ்த்துமின் வாழுகைக்கே.

உரை :— கண்ட - உம்மால் விரும்பப்பட்ட, ஏந்திழையார் - ஆபரணமணிந்த மாதர்களினது, சொல்லை - வார்த்தையைக்கேட்டு, கண்டு-இச்சொல் கற்கண்டேயாம், (அன்றெனில்) ஈர் - குளிர்ந்த, அமுது - அமிர்தமேயாம், என்னும் - என்றுபுகழ்கின்ற, தொண்டீர் - அந்த மாதர்களுக்கு அடிமையாயிருக்கிற சனங்களே ! (அவர்களாற் கொடுக்கிற இன்பம்) இன்பம் இல்லை——— ; கண்டீர் - பாருங்கள் ; (இன்பமெல்லாம்) துன்பங்கண்டீர் - துன்பமேயாகப் பார்ப்பீர்கள் ; (ஆதலால்) வாழுகைக்கு - நீங்கள் அழியாமல் வாழ்வதற்கு, தொல் - பழமையாகிய அசுரன் - இரணியகசிபனது, நிறம்-மார்பினை, கல் - பறித்தப்பிளந்த, ஐ - அழகிய, கண்டீரவத்தை - நரசிங்கவடிவமுடையவனும், மல்லை - மல்லர்களை, கண் - இரக்கம், தீர்தர - நீங்க, தேய்த்தானை - தேய்த்துக்கொன்றவனுமாகிய, திருவேங்கடம் காவலனை - திருவேங்கடநாதனை, வாழ்த்துமின் - துதியுங்கள் ; (எ - று.)

மாதர்சொற்களைப்புகழ்ந்து அவர்க்கு அடிமையாய்க்கிடக்கு மனிதர்களே ! அவர்களாற் கொடுக்குமின்பம் இன்பமில்லை ; துன்பமேயாமாதலால் நீங்கள் அழியாவாழ்க்கையை அடைவதற்கு இரணியனைக் கொன்றவனும் மல்லரை அழித்தவனுமான திருவேங்கடநாதனை வாழ்த்துங்கள் ; என்பதாம். காண்டல் - விரும்புதல். கண்டீர் - முன்னிலையசையுமாம். இன்பம் - இடைநிலைத்தீவகமாய் நிற்றலின் முன்னும்பின்னும் கூட்டிப்பொருள்கொள்ளப்பட்டது. கண்டீரவத்தை முத

வியனை ஒருபொருள்மேலடுக்கி வாழ்த்துமினென்னு முடிக்குஞ்சொல் லைக்கொண்டன; [நன் - பொது - சக.] வாழுகை - தொழிற்பெயர்; உ - சாரியை.

மல்லரைத் தேய்த்தது:—கம்சன் சபையிற் கண்ணபிரான் சென்ற பொழுது அந்தக் கம்ஸனுலேவப்பட்டுவந்த முஷ்டிகன் சாணூரனென் னுமல்லர்களைக் கொன்றருளினானென்பதாம். (௩௩.)

கைத்தனு மோடிசை வெற்பெனக் காணவெவ் வாணனெனு
மத்தனு மோடிகல் செய்வனென் றேவந்து வையுறுவே
லத்தனு மோடியு மங்கியு மோடவென் னப்பனுக்குப் [றே.
பித்தனு மோடின னங்கத்துத் தானென்று மெண்ணனென்

உரை:—கை - கையிலுள்ள, தனு - வில்லானது, மோடு இசை - உயர்ச்சிபொருந்திய, வெற்பு என - மலைபோல, காண - விளங்க, வெவ் வாணன் எனும் - கொடியவாணாசுரனென்கிற, மத்தன் - செருக்குடை யவன், நும்மோடு - உம்முடனே, இகல் - போர், செய்வன்என்று - செய்கிறேனென்றுகூறி, வந்து - போர்க்களத்தில் வர, (அவனுக்குத் துணையாகிவந்த), வை உறு - கூர்மைபொருந்திய, வேல் - வேலாயுதத் தையுடைய, அத்தனும் - இறைவனாகிய முருகக்கடவுளும், மோடியும் - துர்க்கையும், அங்கியும் - அக்கினியும், ஓட - ஓடிவிடுதலும், (அல்லா மல்), என் அப்பனுக்கு - என்தந்தையாகிய மாயோனுக்கெதிரில், பித்த னும் - ருத்திரமூர்த்தியும், தான் - தாம், அங்கத்து - சரீரத்தில், என் றும் - எக்காலத்திலும், பெண்ணன் என்று - உமாதேவியாரை ஒருபா கத்திலுள்ளவனென்று சொல்லிவிட்டு, ஓடினன் - சென்றருளினார்; (எனவே எம்பெருமானுக்கு எத்தேவரும் நிகரிலரென்பதாயிற்று.)

எம்பெருமானிடத்தில் எதிர்த்துவந்த வாணாசுரனுக்குப் படைத்து ணையாய்வந்த முருகக்கடவுள் முதலாகிய யாவரு மெதிர்நிற்காமல் ஓடி னராதலால் மாயோனே தலைவனென்றதாம்.

பாணாசுரன் கதை:—மகாபலியின் புதல்வனாகிய பாணன் தவத் தால் சிவபிரானே தன் கோட்டையைக் காக்கும்படி வரம்பெற்றுச் சோணிதபுரத்திலரசாளு நாளில் அவன் மகள் உஷா (உழை) என்பவள் கண்ணன் மகன் பிரத்தியும்னனது பிள்ளை அனிருத்தனை வலிதிற்கொ ணர்வித்துப் புணர்ந்திருந்தனள்; இதனை அறிந்த வாணன் அவ்வனிருத் தனைப்பற்றிச் சிறையிட்டனன். இவற்றையெல்லாம் நாரதனாலறிந்த கண்ணன் படையெடுத்துப் பாணனொடு போர்செய்யவந்து சிவபிரானை வினவ அவர் தம்மைப் பூசிப்பதற்கு மட்டில் நான்கு கைவைத்து ஒஞ்சிய கைகளை வெட்டென்று கூறிச்சென்று மீண்டுவந்து இருவரையும் நட் பாக்குவிக்க அங்ஙனமே உறவினராகி அனிருத்தனுக்கு உழையை மண ஞ்செய்வித்தார்கள் என்பதாம்.

வெவ்வாணன், வெம்மையென்னும் பண்பு ஈறுகெட்டு முன் னின்ற மெய்திரிந்தது. வந்து - வினையெச்சத்திரிபு; [நன் - வினை - உஎ.] இம்மைப்பயனைவேண்டாத பிருங்கிமுனி சிவபெருமானைமட்டும் வலம்வந்து வணங்கிப்போவதனைப் பார்த்திருந்த உமாதேவியார் சிவ பிரானுடன் இடப்பக்கத்திற்சேர்ந்து அர்த்தநாரீசுவர வடிவம்பெற்றிருந் தனர்; அதனை வந்துபார்த்த முனிவன் வண்டுவடிவமெடுத்துப் பெரு

மான் முதுகில் தளைத்துக்கொண்டு இறைவனை வலஞ்சூழ்ந்து பணிந்துபோயினன். இதுபற்றி அங்கத்துப்பெண்ணனென்றதாம். (௪௪)

பெண்ணுக்கு விக்கச் சிலைமே லொருதுகள் பெய்தபொற்றா
ளண்ணுக்கு விக்க லெழும்போ தெனக்கருள் வாய்பழிப்பு
நண்ணுக் குவிக்கச் சிளமுலைப் பூமக ளாயகனே
யெண்ணுக் குவிக்கக் குழலூது மவேங்கடத் தென்கண்ணனே.

உரை:—பழிப்பு - பழித்தலை, நண்ணு - அடையாத, குவி - குவிதலையுடைய, கச்சு - கச்சணிந்த, இள முலை பூமகள் - இளையகொங்கைகளையுடைய அலர்மேல் மங்கையார்க்கு, நாயகனே - தலைவனே! எண் - மதிக்கப்பெற்ற, ஆ - பசுக்களை, குவிக்க - ஓரிடத்திற்சேர்க்கவேண்டி, குழல் - புல்லாங்குழலை, ஊதும் - ஊதுகின்ற, வேங்கடத்து -திருவேங்கடமலையிலிருக்கிற, என் ———, கண்ணனே - கண்ணபிரானே! பெண் - பெண்வடிவமாக, ஆக்குவிக்க - செய்விக்கவேண்டி, சிலை மேல் - கல்லின்மேலே, ஒரு துகள் - ஒருதுகளை, பெய்த - உதிர்த்த, பொன் தாள் - அழகிய உன் திருவடிகளை, அண்ணுக்கு - உள்நாக்குவிளங்குகிற தொண்டையிடத்தில், விக்கல் எழும்போது - விக்கலுண்டாகிற மரணகாலத்தில், எனக்கு அருள்வாய் - எனக்குக்கருணை செய்வாய்; (எ-று.)

அலர்மேல்மங்கைநாயகனே! பசுக்களைச் சேர்ப்பதற்குப் புல்லாங்குழலையூதுகின்ற திருவேங்கடத்துள்ள கண்ணபிரானே! கல்லாய்க்கிடந்த அகலிகையின் சாபவிமோசனஞ் செய்த உன் திருவடிகளை மரணகாலத்தில் என் மனத்தில் பொருந்தும்படி எனக்கருளுவாய்; என்பதாம். இந்திரனால் கற்புநிலைதவறிய அகலிகையை அவள்கணவன் கௌதமமுனிவன் கல்லாய்க்கிடக்கும்படி சபித்தனன்; அப்படியே அவள் கல்லாய்க்கிடந்தனள். பின்பு திருமாலவதாரமாகிய இராமபிரான் மிதிலைக்குச் செல்லுநாளில் மார்க்கத்தில்கிடந்த அந்தக் கல்லிற் கால்பொடி பட்டவுடன் அக்கல்லின் உருமாறி அகலிகையாயினள் என்பதாம். கிருஷ்ணாவதாரத்தில் பசுமந்தையிற்சென்று புல்லாங்குழலூதினது வெளிப்படை; "பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவ, னீங்குநம் மானுள் வருமே லவன்வாயி, லாம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ" என்றதனாலுமறிக. குவி - முதனிலைத்தொழிற்பெயர். ஆக்குவிக்க, வி - பிறவினைவிகுதி. பழிப்பு - தொழிற்பெயர். (௪௫)

கண்ணனையேனெஞ் சுருகேனவைகொண் டென்கண்ணுநெஞ்சும்
புண்ணனை யேன்கல் லனையேனென் றாலும்பொற் பூங்கமலத்
தண்ணனை யேநல்ல சார்வாக வேங்கடஞ் சார்ந்துமணி
வண்ணனை யேயடைந் தேற்கில்லை யோதொல்லை வைகுந்தமே.

உரை:—கண் - (என்) கண்களை, நனையேன் - நனைக்கின்றேனில்லை; நெஞ்சு - (என்) மனம், உருகேன் - நைந்து உருகுகின்றேனில்லை; அவை கொண்டு - அக்காரணங்களைக்கொண்டு, என் கண்ணும் - என்னுடைய கண்களும், நெஞ்சும் - (என்) மனமும், புண் அனையேன் - புண்களுக்கு ஒப்பாயினேன்; (அன்றி), கல் அனையேன் - கல்லுக்கும் ஒப்பாயினேன்; என்றாலும் - என்று சொன்னபோதிலும், பொன் - பொன்னிறமுள்ள, பூ கமலம் - தாமரை மலரிலிருக்கிற,

தண் - கிருபையுள்ள, அனையே - உலகமாதாவாகிய திருமகளாரையே, நல்ல சார்வு ஆக - நல்லஅடைக்கலமாகக் கொண்டு, வேங்கடம் - திருவேங்கடத்தை, சார்ந்து - அடைந்து, (அங்கு எழுந்தருளிய), மணிவண்ணனையே - நீலரத்தினம்போன்ற நிறத்தையுடைய திருமாலையே, அடைந்தேற்கு - சரணமாகப்புகுந்த எனக்கு, தொல்லை - பழமையாகிய, வைகுந்தம் - பரமபதமானது, இல்லையோ ——? (எ - று.)

என்னிடத்தில் பக்தியிருக்கிறதற்கு அடையாளமாக ஆநந்த அன்பு மேலிட்டினால் கண்களில் நின்று நீர்பெருக்கினேனில்லை; அதுபற்றி மனமும் உருகினேனில்லை; அந்தக் காரணங்களால் என் கண்கள் புண்களாயினேன்; என்மனம் கல்லாயினேன் என்றாலும் திருமகளாரைப் பற்றுக்கோடாகக் கொண்டு வேங்கடஞ்சார்ந்து மணிவண்ணனைச் சரணமாக அடைந்த எனக்கு வைகுந்தபதவி இல்லையா? என்பதாம். புண், கல் இரண்டனையும் முறையே கண்களுக்கும் நெஞ்சுக்கும் நிரனிறையாற் கொள்க. சார்பு - தொழிற்பெயர். தொல்லை - பண்புப்பெயர்; ஐ - பண்புவிகுதி. (சசு)

வைகுந்த மாய விழிமாதர் வேட்கையை மாற்றியென்னை
வைகுந்த மாய வினைநீங் கியமுத்தர் மாட்டிருத்தி
வைகுந்த மாய வொசித்தாய் வடதிரு வேங்கடவா
வைகுந்த மாயவ னேமாசி லாதவென் மாமணியே.

உரை:— குந்தம் - குருந்தமரத்தை, மாய - கெடும்படியாக, ஒசித்தாய் - ஒடித்தவனே! வடதிருவேங்கடவா - வடதிசையிலுள்ள திருவேங்கடமலையிலிருப்பவனே! வைகுந்த - வைகுந்தத்திருப்பவனே! மாயவனே ——! மாசு இலாத - குற்றமில்லாத, என் ——, மா - சிறந்த, மணியே - இரத்தினமே! வை - கூர்மையுள்ள, குந்தம் ஆய - வேலாகிய, விழி - கண்களையுடைய, மாதர் - மடவாரிடத்துண்டாகிய, வேட்கையைமாற்றி - ஆசையைமாற்றி, வைகும்-தங்கிய, தம்-தமது, மாயவினை - தீவினைகளை, நீக்கிய - போக்கிய, முத்தர் மாட்டு - உன் அடியார்பக்கத்தில், என்னை —, இருத்தி வை - நிலைபெறச்செய்வாய்; (எ-று.) இதுயமகம்.

குருந்தமுறித்தவனே! வேங்கடவனே! வைகுந்தனே! மாயவனே! மாணிக்கமே! மாதரிடத்தாசையைமாற்றி, உன் அடியார்பக்கத்தில் என்னை இருத்திவைப்பாயாக; என்பதாம். குருந்த முறித்தது:—கண்ணபிரானைக் கொல்லவேண்டிக் கஞ்சனால் விடுக்கப்பட்ட ஓரசுரன் யமுனையாற்றங்கரையிற் குருந்தமர வடிவமாய் நின்றபொழுது அங்குவந்து நீராடிய கோபியர்களின் வஸ்திரங்களைக் கண்ணபிரானெடுத்துக்கொண்டு முற்கூறிய குருந்திலேறி ஒளித்து நின்றனன்; அந்த வேளையில் பலராமன் அங்குவர அதனையறிந்த கண்ணபிரான் கைக்கொண்ட உடைகளைக் கீழேயெறிந்துவிட்டு அந்த மரத்தை முறித்துயமுனையிற் சாய்த்து அவ்வசுரனைக்கொன்றுவிட்டுத் தானும் நீந்தித்தன் தமையனுக்குத் தெரியாமலோடிப்போயினனென்பதாம். இதுபற்றியே "குருந்த மொசித்தஞான் றண்டா லதனைக், கரந்த வடிவெனக்குக் காட்டாய்." என்றார் பிறரும். வேட்கை - தொழிற்பெயர். முத்தர் - எல்லாப்பற்றும் விடுபட்டவர். மாடு - பக்கம்; ஒற்று இரட்டித்தது; [நன்-உயி-௩௩.] இருத்தி, இரு - பகுதி. மணி - உவமையாகுபெயர். (சஎ)

மணியாழி வண்ண னுகந்தாரைத் தன்வடி வாக்குமென்றே
துணியா ழியமறை சொல்லுந்தொண் டீரது தோன்றக்கண்டேம்
பணியாழின்மென்மொழி மாலாகிப் பள்ளிகொள் ளாமற்சங்கோ
டணியாழி நீக்கிநின் றாள்வேங்க டேசனை யாதரித்தே.

பொருளும், திணையும், பகுதியும் முற்கூறியவையே.

துறை—தலைவன் தலைவியைத் தானணைந் திலனென்
றலைவுறு பாங்கி நிலைதளர்ந் துரைத்தல்.

உரை:— தொண்டீர் - தொண்டர்களே! மணி - நீலமணியையும், ஆழி - கருங்கடலினையும், (ஒத்த), வண்ணன் - நிறத்தையுடையவனாகிய மாயோன், உகந்தாரை - தன்னைவிரும்பி வந்தடைந்தவரை, தன் வடிவு ஆக்கும் என்றே - தனது சாரூபபதவியைக் கொடுத்தமைப்பானென்பதாகவே, துணி - உறுதியாகிய, ஆழிய - ஆழ்ந்தபொருளுடைய, மறை - வேதங்கள், சொல்லும் - சொல்லுகின்றன; அது - அவ்விஷயத்தை, தோன்ற - விளங்க, கண்டேம் - பார்த்தோம்; யாழின் - வீணையிசைபோல, மெல் - மென்மையாகிய, பணிமொழி - நல்லசொல்லையுடைய நந்தலைவி, வேங்கடேசனை - திருவேங்கடநாதனை, ஆதரித்து - விரும்பி, மாலாகி - காமமயக்கங்கொண்டு, பள்ளிகொள்ளாமல் - படுக்கையிற் கிடக்காமல், (புரண்டுகொண்டு), சங்கோடு - கைவளையும், அணி - விரலில் அணிந்திருக்கிற, ஆழி - மோதிரமும், நீக்கி - போக்கிவிட்டு, நின்றாள் - வெறுமனே நின்றனள் காணும்; (எ - று.)

தொண்டர்களே! திருமால், தன்னை அடைந்தவரைத் தன்போலாக்குவானென்று மறைகள் சொல்லுவன; அது நேரிற்பார்த்தோம்; எம் தலைவிவேங்கடேசனை விரும்பி மாலாகிப் பள்ளிகொள்ளாமல் சங்கும் ஆழியும் நீக்கிநின்றாள்: என்பதாம். எனவே மாலாகியும் மற்றரூபம் பெற்றிலள்; அக்கடவுள் கருணைகூர்ந்துவந்து முயங்கினால் பள்ளிகொண்டு சங்காழிபெறுவாள்; அப்பொழுது ஸாரூபபதவி பூர்த்தியாய்விடும்; "எல்லாரதிர்ஷ்டமும் நெல்லாய்விளைந்தது. நான் பாவியதிர்ஷ்டம் பதராய் விளைந்தது" என்னும் பழமொழிபோல யாவர்விரும்பினாலும் தன் ஸாரூபந்தருகிற எம்பெருமான் இவள் விரும்பியபடி கொடாமை முன்செய்த தீவினையேயாம்; என விரித்து உரைகூறுக. மால் - விஷ்ணு. அன்றிப் பெருமான் மால் என்னும் பெயருடையவனாகிச் சயனிக்காமல் நின்ற கோலத்துடன் சங்குசக்கரம் ஏந்தாமலிருப்பதுபோல இவளும் மாலாகி (மால் - மயக்கம்) படுக்கை கொள்ளாமல் வளை மோதிரமிழந்தாளென்று சிலேடை யாக்கியுமுரைக்கலாம். இதற்கு சங்குசக்கர மேந்தாமை பிம்பத்தோடு பொருந்தாமல் புதிதாகக் கல்லாற்செய்து கையில் வைத்திருப்பது வெளிப்படை. ஆக்கும் - செய்யுமென்னுமுற்று; ஆண்பாலில்வந்தது. ஆழிய - குறிப்புப்பெயரெச்சம். பணி என்பதனை மொழியோடு கூட்டுக; இது அன்மொழித்தொகை; பண்மொழித்தொடர். வேங்கட+ஈசன் - வேங்கடேசன்; குணசந்தி. (௪௮)

ஆதரிக் கப்பட்ட வாணுதன் மங்கைய ரங்கைமலர்
மீதரிக் கப்பட்ட நின்னடி யேவெள் ளருவிசெம்பொன்
போதரிக் கப்பட்டஞ் சூழ்வேங் கடவெற்ப போரரக்கர்
தீதரிக் கப்பட்ட கானகத் தூடன்று சென்றதுவே.

உரை:— வெள் - வெள்ளிய, அருவி - அருவியானது, செம்பொன் - சிவந்த பொன்மணல்களையும், போது - மலர்களையும், அரிக்க - அரித்துக்கொண்டுபோய், பட்டம் நீர்நிலை ஓடைகளில், சூழ் - பிரவேசிக்கின்ற, வேங்கடவெற்ப - திருவேங்கடமலையிலெழுந்தருளிய இறைவனே! ஆதரிக்க - நீ அன்புசெய்ய, பட்டம் - பட்டமணிந்த, வாள்-ஒளிபொருந்திய, நுதல் - நெற்றியுடைய, மங்கையர் - மாதர்களின், அம்கை-அகங்கையாகிய, மலர் - தாமரைமலர்கள், மீ - மேலே, தரிக்கப்பட்ட - தாங்கப்பட்ட, நின் - உனது, அடியே - திருவடியோ, அன்று - அக்காலத்தில், போர் - போர்செய்கின்ற, அரக்கர் - இராக்கதருடைய, தீது - பொல்லாங்கை, அரிக்க - நீக்கவேண்டி, பட்ட - மரங்கள் முதலியன பட்டுக்கிடக்கின்ற, கானகத்து ஊடு - காட்டினுள்ளே, சென்றது - போகியது? (எ - று.)

திருவேங்கடமலைமேலிருப்பவனே! மங்கையர் கைமலர்களால் தாங்கப்பட்ட உன் திருவடியோ அரக்கர் வஞ்சனையைக் கெடுக்கவேண்டிக் காட்டில் முன்பு நடக்கலாயிற்று. என்பதாம்.

காட்டில் நடந்தது:—இராமாவதாரத்தில் தாய்சொற்படி பதினான்குவருஷம் காட்டிற்சென்று அங்குச் சீதாபிராட்டியாரை வஞ்சித்துக் கவர்ந்துசென்ற இராவணாதி அரக்கரை அழித்து மீண்டது வெளிப்படை. பட்டமங்கையர் - திருமகளார், பூமிதேவியார், நீளாதேவியார். போதரிக்க, அரிக்க - வினையெச்சத்திரிபு; அரித்தெனக்கொள்க. அடி - சாதியொருமையாதலால் சென்றது என்ற ஒருமைமுடிபேற்றது. வெள்ளருவி - பண்புத் தொகை. அன்று - காலத்தைக் காட்டுஞ் சுட்டடியாகப்பிறந்த இடைச்சொல். அங்கை - அகங்கை; [நன்-மெய்-கக;] இடையிலுள்ள உயிர்மெய்கெட்டது. கைமலர் - முன்பின்னாகத் தொக்க உவமத்தொகையுமாம். (௪௧)

தத்தை விடு தூது.

சென்ற வனத்தத்தை மைந்தரை வாழ்வித்துத் தீயமன்னர்
பொன்ற வனத்தத்தைச் செய்தபி ரான்புகழ் வேங்கடத்து
ணின்றவ னத்தத்தை யாயுதன் பாதத்தென் னேசமெல்லா
மொன்ற வனத்தத்தை காணுரை யீரற முண்டுமக்கே.

பொருளும் திணையும் பகுதியும் முற்கூறியவை

துறை—மாதர் பைங் கிளியைத் தூது விடுத்தல்.

உரை:—வனம் - அழகிய, தத்தைகாள் - கிளிகளே! வனத்து - காட்டில், சென்ற———, அத்தைமைந்தரை - தன் அத்தைபிள்ளைகளாகிய பாண்டவரை, வாழ்வித்து - வாழும்படிசெய்து, (அவரைப்பகைத்த,) தீய - கொடிய, மன்னர் - அரசர்கள்யாரும், பொன்ற - அழியும்படி, அனத்தத்தை - கெடுதியை, செய்த———, பிரான் - தலைவனும், புகழ் -

எல்லாரும் புகழ்கின்ற, வேங்கடத்துள் - திருவேங்கடமலையுள், நின்றவன் - நின்றதிருக்கோலமாய்விளங்குபவனுமாகிய, அத்தத்து - வகைகளில், ஐ ஆயுதன் - ஐந்துஆயுதங்கள் பொருந்தப்பெற்றமாயோனுடைய, பாதத்து - திருவடிகளில், என்———, நேசம் எல்லாம் - அன்பெல்லாம், ஒன்ற - பொருந்த, உரையீர் - சொல்லுங்கள்; உமக்கு - உங்களுக்கு, அறம் உண்டு - தருமமுண்டு; (எ-று.)

கிளிகளே! பாண்டவசகாயனும் வேங்கடத்துள் நின்றவனுமாகிய பஞ்சாயுதக்கடவுளின் திருவடிகளில் யான்வைத்திருக்கிற அன்பையெல்லாம்போய்ச்சொல்லுங்கள்; உங்களுக்குத்தருமமுண்டு; என்பதாம்.

அத்தை - வசுதேவனுடன்பிறந்த குந்தி. வனத்துச்சென்றது - துரியோதனனொடு சூதாடித்தோற்றுப்பாண்டவர் காட்டிற்சென்றது. வாழ்வித்தல் - அவர்க்கு அரசுதொடுப்பித்தல். அன்றிக் காட்டில் நடந்தசெய்தியாகக்கூறவேண்டுமெனில் அங்குநிகழ்ந்தவை பலவுள. எல்லாம் கண்ணனால் காத்தருளப்பெற்றமை வெளிப்படை ஆகலின் அவை இங்கு விரித்தெழுதுதல்மிகையாமெனக. தீயமன்னர் - துரியோதனுதியர். ஐந்து ஆயுதங்கள்:—சங்கு, சக்கரம், கதை, வாள், வில், இவைமுறையே - பாஞ்சசன்னியம், சுதரிசனம், கௌமோதகீ, நந்தகம், சாரங்கம் என்னும்பெயரின. அனத்தம் - அனர்த்தமென்னும்வடசொற்சிதைவு. தத்தை - பெயர்த்திரிசொல். உண்டு - குறிப்புவினைமுற்று. தூதுபோதற்குரியவை இன்னவென்பதனை அடியில்வரும்வெண்பாவினாலறிக; "இயம்புகின்ற காலத் தெகினமயில் கிள்ளை, பயம்பெறுமே கம்பூவை பாங்கி - நயந்தகுயில், பேதைநெஞ்சந் தென்றல் பிரமரமீ ரைந்துமே, தூதுரைத்து வாங்குந் தொடை." (௫௰)

உண்ட மருந்துகைக் கும்மன்னை மீர்மத ளோரைந்தம்புங்
கொண்ட மருந்துகைக் குங்குறு காமுனங் கொவ்வைச்செவ்வா
யண்ட மருந்துகைக் குந்திறந் தானப்பன் போற்பரியு
மெண்டமருந்துகைக் கும்பொடி காப்பிடு மின்றெனக்கே.

பொருள்—புறப்பொருள்.
திணை—பாடாண்டிணை.
பகுதி—கடவுளைமானிடமாதர்காதலித்தது.
துறை—தலைவி பாங்கியர்க் கறத்தோடு நிற்றல்.

உரை:—அன்னைமீர் - தோழியர்களே! உண்ட - யான்புசித்த, மருந்து - அமிர்தமும், கைக்கும் - கசக்கின்றது; மதன் - மன்மதனானவன், ஓர் - ஒப்பற்ற, ஐந்து அம்பும்கொண்டு - ஐந்துபாணங்களையுங்கையிற்கொண்டு, அமர் - உயுத்தத்தை, உந்துகைக்கு - செய்தற்கு, குறுகாமுனம் - நெருங்குவதற்கு முன்னமே, கொவ்வை - கோவைப்பழம் போன்ற, செவ்வாய் - சிவந்தவாயை, அண்டம் - இவ்வண்டமெல்லாம், அருந்துகைக்கு - விழுங்குவதற்கு, திறந்தான் - திறந்தவனுகிய, அப்பன் போல்-வேங்கடத்து அப்பன்போல, பரியும் - அன்புசெய்கின்ற, எண் - யாவருமதிக்கத்தக்க, தமரும் - அவன்தொண்டர்களும், துகைக்கும் - மிதித்துச்செல்கின்ற, பொடி - மண்பொடியை, (கொண்டுவந்து), இன்று - இன்றைத்தினமே, எனக்கு——, காப்பு இடும் - காவலாக என் நெற்றியிலிடுங்கள்; (எ - று.)

தோழியரே! உண்ட அமிருதமுங்கசக்கின்றது; மன்மதன் போர் செய்யக்குறுகுவான் அவன் குறுகாதமுன்னே இவ்வண்டத்தை விழுங்க வாயைத்திறந்த வேங்கடத்தப்பன்போலஉயிர்களிடத்தில் அன்புகொண்டுள்ள தொண்டருந் துகைத்தமண்பொடியை எனக்குக் காவலாக என்நெற்றியிலிடுங்கள்; என்பதாம். குறுகாமுனம் இடுமென்று இயைக்க. காமமயக்கம் மேலிட்டதனால் அமுதமானாலும் குமட்டுகிறதென்றாள். மன்மதன் அம்புஐந்தின்பெயரும் தொழிலும்முறையே "நினைக்கு மரவிந்தம் நீள்பசலை மாம்பூ, அனைத்துணவு நீக்கு மசோகு - வனத்தினுறு, முல்லை கிடைகாட்டு மாதே முழுநீலங், கொல்லுமத னம்பின் குணம்." என்றபாடலாலறிக. கைக்கும்மன்னே, ம் - விரித்தல்விகாரம். மத - உரிச்சொல்; வலிஎன்பதுபொருள்; மதன் - வலிமையுடையவன்; இது தனித்தமிழ்மொழி. கொவ்வை - அதன் பழத்துக்கு முதலாகுபெயர்; அப்பன்போலப்பரியுமன்பரெனவே அங்ஙனம் உயிர்களிடத்தில் அன்பில்லாமல் பொருளொன்றனையே கருதி மானமுதலியவற்றைவிட்டுப் பிறரைநகைசெய்து தாமும் அவமானப்பட்டு இழிதருவார் அன்பராகாரெனவும் அப்படி அன்பர்போலமேல் வேடமணிபவர் "வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க ளைந்து மகத்தேநகும்" என்றபடி ஐம்பூதமுமிகழப்பெற்று நரகமே புகுவாரெனவும் விளங்கிக்கிடந்தமை காண்க. (ருக)

எனக்குப் பணியப் பணியொரு காலிரு காலுநல்க
வுனக்குப் பணியிங் கிருவோம் பணியிலென் னோர்பணியு
நினக்குப் பணிவித்துக் கொண்டுன் பணிநீ பணித்திலையென்
றனக்குப் பணிவெற்பின் மீதோங்கி நின்ற தனிச்சுடரே.

உரை :—என்தனக்கு - எனக்காக, பணிவெற்பின்மீது - பாம்பு (ஆதிசேஷன்) வடிவமாகிய மலைமேல், ஓங்கி - உயர்ந்து, நின்ற - நின்ற திருக்கோலமாயெழுந்தருளியுள்ள, தனி - ஒப்பில்லாத, சுடரே - சோதிவடிவனே! எனக்கு ———, ஒருகால் - ஒருதரம், பணிய - உன்னை வணங்க, பணி - வேலை; (அப்பொழுதே) இருகாலும் - உன்னிரண்டு பாதங்களும், நல்க - எனக்குக்கொடுக்க, உனக்கு பணி - உனக்குவேலை; இங்கு - இவ்விடத்தில், இருவோம் பணியில் - நம்மிருவருடையவேலைகளில், என் - எனது, ஓர் பணியும் - ஒருவேலையைமட்டும், நினக்கு - உனக்கு, பணிவித்துக்கொண்டு - செய்வித்துக்கொண்டு, உன் பணி - உனது வேலையை, நீ ———, பணித்திலை - செய்தாயில்லை; [இதுஎன்னநியாயம்?] (எ - று.)

சேடலையில் விளங்குகிறசுடரே! எனக்குரிய வேலையாவது உன்னை ஒருதரம் பணியவேண்டுவதொன்றேயாம்; உனக்குரியவேலையாவது யான் பணிந்தவுடனே உன்னுடையபாதங்களை எனக்குக்கொடுக்கவேண்டியதொன்றேயாம்; நம்மிருவருடைய வேலைகளில் யான் செய்யவேண்டிய வேலையைமாத்திரம் நீ வாங்கிக்கொண்டு நீ செய்யும் வேலையைச் செய்யாதிருப்பது என்னநியாயம்? என்பதாம். சுடர் - உவமையாகுபெயர். ஆதிசேடனே மலைவடிவாயினமையால் - பணிவெற்பென்றார்; பணம் - படம்; அதனையுடையது - பணி. முதலடி வழியெதுகை. பணியென்னுமொருசொல்லே அடுத்தடுத்து வருதலால் இது சொற்பொருட் பின்வருநிலையணி. மீட்சியெனினுமொக்கும்; அம் மீட்சியுள், இது இருவகைமீட்சியாம். இதுவன்றி, ஒருவருக்கொருவர்

கொடுத்து வாங்கிக்கொள்ளுநெறியாற் கூறினமையில் "இவைகொண்டிவையெனக் கீந்தன ரென்று, நவையற மொழிவது நவில்பரி மாற்றம்" என்றபடி இது பரிவர்த்தனையென்னுமணியுமாம். ஆதிசேடன் மலையாகியது:—ஆதிசேடன் காசிபமுனிவரிடத்து வராகப்பெருமானுக்குரிய மந்திரோபதேசஞ் செய்யப்பெற்றுச் சித்தியடைந்து இந்த மலைவடிவாயினன் என்பதாம்; "காசிப னிடத்து மேனாட் கடுவிடப் பாந்தள் வேந்தன், ஆசிலிம் மறையைப் பெற்று ளன்பொடு முருச்செய் திந்த, மாசறு தலத்தி னீண்ட மலையுருப் பெற்றான்" என்ற புராணச்செய்யுளைக்காண்க. (௫௨)

தனித்தொண்டை மாநிலத் தேபுரி வோர்க்கரு டாளுடையாய்
தொனித்தொண்டைமாநெடுவாய்பிளந்தாய்துங்கவேங்கடவா [க்
முனித்தொண்டைமான்கையிற்சங்காழிநல்கியென்மூரற்செவ்வாய்
கனித்தொண்டை மான்கையிற் சங்காழி கோடல்கருமமன்றே.

பொருளும், திணையும், பகுதியும் அவை.

துறை—பூங்குழை துயர்கண்டு பாங்கி யிரங்குதல்.

உரை:—மா - சிறந்த, நிலத்து - இவ்வுலகத்தில், தனி - ஒப்பற்ற, தொண்டை - அடிமைத்தொழிலை, புரிவோர்க்கு - செய்கிற அடியவர்களுக்கு, அருள் - கொடுத்தருளுகின்ற, தாள் உடையாய் - திருவடிகளையுடையவனே! தொனி - கனைக்கின்ற, தொண்டை - கண்டத்தையுடைய, மா - குதிரையினது, நெடுவாய் - நீண்டவாயை, பிளந்தாய் - பிளந்தவனே! துங்கம் - சிறந்த, வேங்கடவா - திருவேங்கடமலையிலுள்ளவனே! முன்னி - ஒன்றனை நினைத்து, தொண்டைமான்கையில் - தொண்டைமான் சக்கிரவர்த்திகையில், சங்கு ஆழி - சங்கம் சக்கிரம் ஆகிய இரண்டனையும், நல்கி - கொடுத்து, என் - எனது, மூரல் - பற்களமைந்த, தொண்டைகனி செவ்வாய் - கொவ்வைப்பழம்போன்ற சிவந்தவாயையுடைய, மான்கையில் - தலைவிகையிலுள்ள, சங்கு ஆழி - வளையும் மோதிரமும், கோடல் - வாங்கிக்கொள்ளுதல், கருமம் அன்று - நல்லகாரியமல்லகாண்; (எ - று.)

தாளுடையவனே! குதிரைவாயைப் பிளந்தவனே! வேங்கடமலையிலுள்ளவனே! தொண்டைமான் சக்கிரவர்த்திகையில் சங்காழியைக் கொடுத்து என் தலைவிகையில் சங்காழியைக்கொள்ளுதல் நல்லகாரியமில்லைக்காண்; என்பதாம். கிருஷ்ணாவதாரத்தில் கம்ஸன் கிருஷ்ணனைக் கொல்ல எண்ணி கேசி என்னும் அசுரனைவிடுக்க அவன் குதிரை வடிவத்துடன் கண்ணபிரானைக் கொல்லவருதலும் கண்ணபிரான் அக்குதிரையின் வாயைப்பிளந்து கொன்றனன். இதனையே மாநெடுவாய் பிளந்தாயென்றார். தொண்டைமான் சக்கரவர்த்தி யென்பவன் திருவேங்கடத்தை நீங்க மனமில்லாதவனாய் அங்கே யிருந்தபொழுது பகையரசன் வந்து தொண்டைமான் அரசினைக் கைப்பற்றிக்கொண்டனன். இதனையறிந்த மாயோன் தன்கையிலுள்ள சங்கு சக்கரங்களை அரசனிடம் கொடுத்துப் பகையை அழிக்கச்செய்தனன். தாள் - முயற்சியுமாம். மான் - உவமையாகுபெயர். கோடல் - தொழிற்பெயர். (௫௩)

கருமாதவாவிருந் தாவன செய்தென் கருத்திருளைப்
பொருமாதவாவிருந் தாவனத் தாய்பொற் சவரியென்னு
மொருமாதவாவிருந் தாவனக் காவுயர் வேங்கடத்தெம்
பெருமாதவாவிருந் தாவன லேயும் பிறைக்கொழுந்தே.

பொருளும், திணையும், பகுதியும் அவை.

துறை—ஐயனை நோக்கிக் கையறவுரைத்தல்.

உரை :—கருமாதவா - கரியநிறம்பொருந்திய மாதவனே! இருந்து - அருகிருந்து, ஆவன செய்து - ஆகவேண்டியவற்றைச் செய்து, என் - எனது, கருத்து - கருத்திலுள்ள, இருளை - அஞ்ஞானமாகிய இருட்டை, பொரும் - அழிக்கின்ற, ஆதவா - சூரியனே! விருந்தாவனத்தாய் - விருந்தாவனத்தில் விளையாடினவனே! பொன் - அழகிய, சவரி என்னும் - சவரியென்னும் பெயருள்ள, ஒருமாது - ஒருதவப் பெண்ணானவள், அவா - விரும்பிய, விருந்தா - விருந்தானவனே! வனம் - அழகிய, கா - சோலை, உயர் - உயர்ந்த, வேங்கடத்து - திருவேங்கடத்துள்ள, எம்பெருமா - எங்கள் தலைவனே! பிறைக்கொழுந்து - இளையமூன்றாம்பிறை, தவா - கெடாத, இரும் - பெரிய, தாவு - தாவிப்பிடிக்கின்ற, அனல் - நெருப்பினை, ஏயும் - ஒப்பாயிருக்கின்றது.

மாதவனே! என் அஞ்ஞானமாகிய இருட்டையழிக்கின்ற சூரியனே! விருந்தாவனத்தில் விளையாடினவனே! சவரிக்கு விருந்தாய் வந்தோனே! வேங்கடத்து எம்பெருமானே! மூன்றாம்பிறை நெருப்பாய் விளங்குகின்றது காண்; என்பதாம். ஆவன - வினையாலணையும்பெயர். இருளைப்பொரும் ஆதவா - உவமையாகுபெயர். பிறைக் கொழுந்து - இருபெயரொட்டு. மாதவன் - இலக்குமி நாயகன். விருந்தாவனத்தின்கதை:—சலந்தராசுரன் மனைவி பிருந்தையென்பவளைத் திருமால் வஞ்சனையாற் சேர்ந்து கற்பழிக்கக் கண்ட அவள் வெறுத்துத் தீப்பாய்ந்த இடத்தில் முளைத்தமையால் துளசி - பிருந்தையென்ற பெயர் பெற்றது; இது மிகுத்தலின் விருந்தாவனமாயிற்று; கிருஷ்ணவதாரத்தில் இறைவன் மிகுந்தவிருப்போடு சஞ்சரித்த இடம். இடையர்கள் தம் மாடுகன்றுகளை யோட்டிக்கொண்டு அங்கேகுடியேறியிருந்தார்களாதலின் கண்ணனும் அவருடன் அங்குவசித்தமைபற்றி விருந்தாவனத்தாயென்றார். சவரிக்குவிருந்தானது :—யோகமுதிர்ச்சியுள்ள சவரியென்னும் மூப்புடையவள் மதங்கமலையில் ஸ்ரீராமலட்சுமணர்களுடைய வரவுபார்த்திருந்து அவர்கள்வந்தவுடன் காய்கனி கிழங்குகளைக் கொடுத்து உபசரித்து முத்திபெற்றனள் என்பதாம். (ருச)

பிறைமாலையாலொரு பேதைநைந் தாளந்தப் பேதைக்குநின்
னறைமாலை தாவென்று மானிடம் பாடிய நாவலர்கா
ணிறைமாலை யற்றுக் கவிமாலை யானினை யீர்திருவெள்
ளறைமாலை வேங்கடத் தேயுறை மாலை யரங்கனையே.

உரை:—மாலைபிறையால் - மாலைக்காலத்தில் தோன்றும் சந்திரனால், ஒரு பேதை - ஒரு பெண்ணானவள், நைந்தாள் - வருந்தினாள், அந்தப் பேதைக்கு - அந்தப் பெண்ணுக்கு, நின் - உனது, நறை - வாசனையுள்ள, மாலை - பூ மாலையை, தா என்று - தருவாயாகவென்று, மானிடம் - மக்களை, பாடிய - கவிபாடிய, நாவலர்காள் - புலவர்களே! நிறை -

நிறைந்த, மாலை - மயக்கத்தை, அற்று - நீக்கி, கவி மாலையால் - பாடல்களாலாகிய மாலையால், திருவெள்ளறை - திருவெள்ளறையென்னுந் திருப்பதியிலிருக்கிற, மாலை - திருமாலாகிய, வேங்கடத்தே ———, உறை- எழுந்தருளி நிற்கின்ற, மால் - பெரிய, ஐ - தலைமைபூண்ட, அரங்கனை - அரங்கநாதனை, நினையீர் - நினைத்துப் பாடுங்கள்; (எ - று.)

'மாலைக்காலத்தில் ஒரு மாது வருந்தினள் அந்த மாதுக்கு உன் பூமாலையைக்கொடு' என்று மனிதரைப் பாடுகின்ற நாவலர்களே! திருவெள்ளறையிலிருப்பவனும் வேங்கடத்தே யுறைபவனுமாகிய அரங்கநாதனைப் பாடுங்கள்; என்பதாம். மனிதரைப் பாடினால் இம்மைப்பயனேயன்றி மறுமைக் கொரு பயனுமில்லையாதலால் இருமைப்பயனுந்தரத்தக்க இறைவனைப் பாடுங்கள் என்பதாயிற்று. பேதை - பருவத்தைக் குறியாமல் அதனையுடைய பெண்ணைக் குறித்தது. மானிடம் - இழிப்பினால் உயர்திணை அஃறிணையாய் வந்த வழுவமைதி. நாவலர்காள் - ஈற்றயல் நீண்டு விளியுருபேற்றது. நினையீர் - உடம்பாட்டு ஏவற்பன்மை முற்று. திருவெள்ளறை - சோழநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்று. (௫௫)

அடைமொழி கொடாது கூறிய தலப் பெயர்கள்.

அரங்கங் குடந்தை குருகூர் குறுங்குடி யட்டபுய
கரங்கண்ண மங்கை நறையூர் கடன்மல்லை கச்சிகண்ண
புரங்கண்டி யூர்தஞ்சை மாலிருஞ் சோலைபுல் லாணிமெய்யந்
தரங்கம் பரம பதம்வேங்க டேசற்குத் தானங்களே.

உரை:—வேங்கடேசற்கு - திருவேங்கடத்திலிருக்கிற ஈசனுக்கு, தானங்கள் - உறைவிடங்களாவன:—1. அரங்கம் - திருவரங்கம், 2. குடந்தை - கும்பகோணம், 3. குருகூர் - திருக்குருகூர், 4. குறுங்குடி - திருக்குறுங்குடி, 5. அட்டபுயகரம் - திருவட்டபுயங்கம், 6. கண்ணமங்கை - திருக்கண்ணமங்கை, 7. நறையூர் - நாச்சியார் கோயில், 8. கடன்மல்லை - மகாபலிபுரம், 9. கச்சி - காஞ்சீபுரம், 10. கண்ணபுரம் - திருக்கண்ணபுரம், 11. கண்டியூர் ———, 12. தஞ்சை - தஞ்சாவூர், 13. மாலிருஞ்சோலை - அழகர் மலை, 14. புல்லாணி - தருப்பசயனம், 15. மெய்யம் - திருமெய்யம், 16. தரங்கம் - பாற்கடல், 17. பரமபதம் - வைகுந்தம்; என்பனவாம். (எ - று.)

குடந்தை - குடமூக்கு என்ற சொல்லின் மரூஉ மொழி. இவற்றுள் 1, 2, 6, 7, 10, 11, 12, சோழநாட்டிலுள்ளன. தஞ்சை - மரூஉ.

3, 4. 13, 14, 15, பாண்டி நாட்டிலுள்ளன. 5, 8, 9, தொண்டை நாட்டிலுள்ளன. இங்ஙனம் அடைமொழி கொடாது கூறிய ஆசிரியரின் திறமை யாவரும் வியக்கற் பாலதேயாம். (௫௬)

தானவ னாகை மருப்பொசித் தானுக்குந் தானுகந்த
தானவ னாகை முடியினின் றானுக்குத் தாள்வணங்காத்
தானவ னாகை மிடந்தானுக் காளென்று தன்னையெண்ணாத்
தானவ னாகை நினைந்திருப் பாற்கென்றுந் தானவனே.

உரை:—தானம் - மதத்தையுடைய, அல் - கரிய நிறமுள்ள, நாகம் - குவலயாபீடமென்னும் யானையினது, மருப்பு - தந்தத்தை, ஒசித்தானுக்கு - ஒடித்தவனும், தான் உகந்த - தான் விரும்பிய, தானம் - மடுவாகிய

இடத்திலுள்ள, வல் - வலிமை பொருந்திய, நாகம் - காளியனென்னும் பாம்பினது, முடியில்-தலையில், நின்றானுக்கு - நின்றுகூத்தாடினவனும், தாள் - தன் பாதங்களை, வணங்கா - பணியாத, தானவன் - இரணியகசிபனென்னும் அசுரனது, ஆகம் - மார்பினை, இடந்தானுக்கு - பிளந்தவனுமாகிய எம்பெருமானுக்கு, ஆள் என்று - யான் அடிமையென்றெண்ணி, தன்னை ———, எண்ணு - ஒருபொருளென்றெண்ணுமல், தான் - தான், அவன் - அந்தப் பெருமானது, ஆகம் - திவ்விய சுந்தரவடிவத்தை, நினைந்து - தியானித்து, இருப்பாற்கு - இருப்பவனுக்கு, என்றும் - எக்காலத்திலும், தான் - அந்தக்கடவுள், அவனே - வேருக இருக்காமல் அவனேயாகி நின்று நினைத்ததைக் கைகூடச்செய்வன்; (எ - று.)

யானையின் தந்தத்தை முறித்தவனும் காளியன் தலையில் நடித்தவனும் இரணியகசிபனைக் கொன்றவனுமாகிய எம்பெருமானுக்கு அடிமையென வெண்ணித் தன்னை யொரு பொருளாகக் கருதாமல் அக்கடவுள் வடிவத்தைத் தியானித்திருப்பவனுக்கு அந்த இறைவன் தானே அவனுகி நின்று எல்லாக் காரியத்தையும் நிறைவேற்றுவிப்பான் என்பதாம். குவலயாபீடம் - கண்ணனைக் கொல்லும் பொருட்டுக் கம்ஸனால் விடப்பட்ட யானை. காளியன்:—இவன் ஒரு பாம்பின் வடிவினன். யமுனையின் மடுவில் தங்கி அவ்விடத்தில் யார் வந்தாலும் இம்சித்துக் கொண்டிருந்தபொழுது கண்ணபிரான் அங்குச்சென்று அவன் தலையில் கூத்தாடித் துன்பஞ்செய்து அவன் மனைவியர் வணங்கி வேண்டுதலால் அவனைத்தப்பவிட அந்தக் காளியன் அவ்விடத்திலிருந்தும் புறப்பட்டுக் கடலிடத்துள்ள ஒரு தீவிற் சென்றுனென்பதாம். ஒசித்தான், நின்றுன், இடந்தான், இருப்பான் என்பன வினைப்பெயர்கள். வணங்கா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். எண்ணு - இது அப்படிப்பட்ட வினையெச்சம். என்றும், உம் - முற்றும்மை. இப்பாடல் - யமகம்.

தானவ ராகந் தடிவார் வடமலைத் தண்ணந் துழாய்
ஞான வராகர் தருமண்டம் யாவையும் நண்ணியவர்
கானவ ராக விரறோறு மத்திக் கனியின்வைகும்
வானவ ராக விருப்பா ரவற்றுண் மசகங்களே.

உரை:—தானவர் - அசுரர்களுடைய, ஆகம் - சரீரங்களை, தடிவார் - அழித்தவராகிய, வட மலை - திருவேங்கடமலையி லெழுந்தருளிய, தண்ணம் - குளிர்ச்சியுடைய, துழாய் - துளசிமாலை யணிந்த, ஞானம் - ஞான சொரூபமான, வராகர்-சுவேதவராக மூர்த்தியானவர், தரும் - தந்தருளிய, அண்டம் யாவையும் - அண்டங்களெல்லாம், நண்ணி - பொருந்தி, அவர் - அவருடைய, கால் - திருவடிகளில், நவம் - புதிய, ராகம் - செம்மை நிறம் பொருந்திய, விரல் தோறும் - விரல்கள் தோறும், அத்திக்கனியின் - அத்திப் பழங்கள் ஒட்டிக்கொள்வன போல, வைகும்- ஒட்டிக்கொண்டிருக்கும்; வானவர் ஆக - தேவர்களாக, இருப்பார்-இருப்பவர்கள், அவற்றுள் - அவ்வத்திப் பழங்களுள், மசகங்கள் - கொசுகுகள் (போலிருப்பார்கள்;) (எ - று.)

அசுரரைக் கொன்றவராகிய வேங்கடமலையின்சுவேத வராகமூர்த்தியானவர் படைத்தருளிய அண்டங்களெல்லாம் அத்தி மரத்தில் பழங்கள் ஒட்டியிருப்பனபோல அவர் கால் விரல்களில் ஒட்டிக்கொள்வனவாம்; அப்பொழுது ஒவ்வொரு அண்டத்திலுமுள்ள தேவரெல்லாரும்

அவ்வத்திப் பழங்களுள் கொசுருகள் போலிருப்பார்களென்பதாம். இதனால் இறைவனது விராட்சுவரூபத்தின் பெருமையை உணர்த்தியவாறாயிற்று. ஏழுவகையான பிறப்புக்களுள் சிறந்தவானவரை மசகங்களாகக் கூறினமையால் மற்றையோர் தன்மை சொல்லாமலே யமையும். தடிவார் - முற்றெச்சம். தண்ணம், அம் - சாரியையுமாம். கனியின், இன் - ஐந்தனுருபு; ஒப்புப்பொருளது. இருப்பார் - வினைப்பெயர். எம்பெருமான் வராகாவதாரமெடுத்துப் பூமிதேவியை மணந்துகொண்டு திருவேங்கடமலையி லெழுந்தருளியிருந்து அந்தப் பூமிதேவிக்கு மந்திர சித்தி முதலிய ஞானங்களுரைத்தமையின் ஞானவராக ரெனப்பட்டனர். (௫௮)

மசகந் தரமென்ன லாய்நிலை யாவுடல் வாழுயிரை
யசகந் தரவல்ல தோவண்ட மீரண்ட முண்டுமிழ்வா
ரிசகந் தரவண்ணர் வேங்கட வாண ரிலங்கையர்கோன்
றெசகந் தரமறுத் தார்திருப் பேர்சொல்லுந் தீங்கறவே.

பொருளும், திணையும், பகுதியும் அவை
துறை—வெறிவிலக்கியவழி பாங்கி செவிலிக் கறத்தோடு நிற்றல்.

உரை:—அன்னைமீர் - தாய்மார்களே! மசகம் - கொசுகிற்கு, தரம் என்னலாய் - சமானமென்று சொல்லுதலாகி, நிலையா - நிலையில்லாத, உடல் - சரீரத்தில், வாழ் - வாழ்கின்ற, உயிரை————, அசம் - ஆட்டினது, கம் - தலையானது, தர - கொடுப்பதற்கு, வல்லதோ - வல்லமையுடையதாகுமோ? (ஆகமாட்டாது;) அண்டம் - அண்டகளெல்லாவற்றையும், உண்டு - புசித்து, உமிழ் - வெளிப்படுத்துகின்ற, வாரிசம் - செந்தாமரைக்கொப்பான வாயையும், கந்தரம் - மேகம்போன்ற, வண்ணர் - நிறத்தையுமுடையவரும், வேங்கடவாணர் - திருவேங்கடமலையில் வாழ்பவரும், இலங்கையர்கோன் - இலங்காதிபனாகிய இராவணனுடைய, தெசகந்தரம் - பத்துத்தலைகளையும், அறுத்தார் - அறுத்தவருமாகிய எம்பெருமானுடைய, திருப்பேர் - திருநாமங்களை, தீங்கு - இவளுக்குண்டாகிய காமமயக்கமெல்லாம், அற - நீங்கும்படியாக, சொல்லும் - சொல்லுங்கள்; (எ-று.)

துறையின்பொருளாவது:—"நகில் முகஞ்செய்தன முள்ளெயி றிலங்கின, தலைமுடி சான்ற தண்டழையுடையை, மூப்புடை முதுபதி தாக்கணங் குடைய, காப்பும் பூண்டிசிற் கடையும்போகல்" என்று தலைவியைச் சிறைகாவல்செய்யஅதனால் தலைவிக்கு வேறுபாடுண்டாயிற்று. அப்படிவேறுபாடுண்டாகவே அதனையறிந்த தாய் என்மகளுக்கு இவ்வேறுபாடு எதனாலுண்டாயிற்றென்று அறிவோரைவினவினாள்; அவரும் இது தெய்வத்தினாலாயிற்றென்றார். இன்னும் மணஞ்செய்யாக்கன்னியைப் பிறிதொன்றாகக்கூறுத லியல்பன்றாகலான். அவர்கூறலும் உடனே தெய்வத்துக்கு வழிபாடுசெய்தனர்; அங்குத் தெய்வம் பூசாரிமேல்வந்து யாதாயினுங் கூறுமோவென்று தலைவியஞ்சினாள்; அதுகண்டதோழி அத்தெய்வத்துக்குப்பலிகொடுக்கஇங்குஇட்ட ஆட்டினைவெட்டுதலால்பயனில்லை, நம் தலைவி வேங்கடவாணர் தலையளிசெய்யப்பெற்றாள்; அவர்பெயரைச்சொல்லவே அவர்பிரிந்ததனாலுண்டாகிய இவ்வேறுபாடுநீங்கி உயிருய்வள்காணென்றுகூறுதல்.

வல்லதோ, ஓ - எதிர்மறை. வாரிசம் - ஊர்க்குவமையாகுபெயர். கந்தரம் - நீரைத்தாங்குவதென்று மேகத்திற்கும், தலையைத்தாங்குவதென்று கழுத்திற்கும்பெயராய்வந்தது ; கம் - தலை, நீர்; இவற்றிற்குப் பெயர். "கம்மென்பதலையாகாயம் கனக்கால் நீர்விதிவெளுப்பு" என்றார் நிகண்டிலும். வேங்க - வாணர், வாழ்+நர் = வாணர்; "நிலைமொழியீற்று ழகரத்தின்முன்வருமொழிமுதல் நகராம்வந்து புணர்ந்தால் அந்தழகாரம்கெட்டு வந்தநகாரம்ணகாரமாகும்" என்ற வீரசோழியம் சந்திப்படலம் (18) சூத்திரவுரையிற்காண்க. தெசகந்தரம் - வடசொற்றொடர் இயல்பாயிற்று ; [நன் - மெய் - ௩௬.] சொல்லும், உம் - புதியன புகுதலால் முன்னிலைக்குவந்தது. (௫௯)

தீங்கட மாலத்தி முன்னின்று காலிப்பின் சென்றகொண்டல்
வேங்கட மால்கழ லேவிரும் பார்விலை மாதர்முலை
யாங்கட மால்செய மாலா யவரெச்சி லாகநச்சித்
தாங்கட மாலழி வாரிருந் தாலுஞ் சவப்பண்டமே.

உரை :—தீங்கு - (முதலையால்வந்த) தீமையை, அட - போக்க வேண்டி, மால் - பெரிய, அத்தி - யானையினது, முன் நின்று - முன்னே நின்று, காலி - பசுக்கூட்டத்தின், பின் - பின்னே, சென்ற - போன, கொண்டல் - மேகம்போன்ற நிறத்தையுடைய, வேங்கடம் - திருவேங்கடமலையில் எழுந்தருளிய, மால் - திருமாலினுடைய, கழல் - திருவடிகளை, விரும்பார் - விரும்பாதவர்களாய், விலை மாதர் - வேசியருடைய, கடம் ஆம் முலை - கும்பமாகிய கொங்கைகள், மால் செய - மயக்கத்தைச் செய்வதனால், மாலாய் - ஆசைகொண்டு, அவர் - அந்தவேசியருடைய, எச்சில் - எச்சிலாகிய, ஆகம் - சரீரத்தை, தாங்கள் ———, நச்சி - விரும்பி, தம்மால் - தங்களாலேயே, அழிவார் - அழிந்துபோவார்கள் ; இருந்தாலும் - அழியாமலிருந்தாலும், (அவர்கள் சரீரம்), சவம் பண்டமே - பிரேதமாகியபொருளேயாகும்; (எ-று.)

யானையைக்காத்துப் பசுக்களைமேய்த்த திருவேங்கடநாதன் பாதங்களை விரும்பாமல் விலைமாதர் இன்பத்தைவிரும்பி உலகிலுள்ளசிலர் தாம் தம்மாலேயழிவார். அவர் இருந்தாலும் பிரேதமேயாம்; என்பதாம். விலைமாதர்உடம்பு பலருமனுபவித்தலால் எச்சிலாகுமென்றார். கண்ணபிரான் ஆயர்பாடியில்சென்று மாடுமேய்த்தது வெளிப்படை. இதுபற்றியே "காலிக்குப் பின்னேயும் காணலாம்" என்றார் புகழேந்தியாரும். கொண்டல் - நீரைக்கொள்ளுதல்என்னும் பொருளது; மேகத்துக்குத் தொழிலாகுபெயராயிற்று. அழிவார்என்னும் முற்றிற்கு சிலர் என்னும் எழுவாய்வருவித்து உரைக்கப்பட்டது. முன்னின்று பின் சென்ற என்றது முரண். (௬௦)

பண்டை யிருக்கு மறியாப் பரம பதத்தடியா
ரண்டை யிருக்கும் படிவைக்கு மப்பனை யண்டத்துக்குந்
தண்டை யிருக்கும் மலர்ந்தசெவ் வாயனைத் தாள்வணங்கா
மண்டை யிருக்கும் விடுமோ சனன மரணமுமே.

உரை :—பண்டை - பழமையாகிய, இருக்கும் - வேதங்களாலும், அறியா - அறியப்படாத, பரமபதத்து - ஸ்ரீவைகுண்டத்தில், அடியார் அண்டை - அடியவர்களுக்குப்பக்கத்தில், இருக்கும்படி ———, வைக்கும் - (என்னை) வைத்தருளுகின்ற, அப்பனை - திருவேங்கடத்தில் எல்லா

உயிர்களுக்கும் தந்தையாகவிளங்குபவனும், அண்டத்துக்கும் - அண்டங்களுக்கும், தண் - குளிர்ந்த, தயிருக்கும்———, மலர்ந்த - திறந்த, செவ்வாயனை - சிவந்தவாயையுடையவனுமாகிய எம்பெருமானை, தாள் - பாதங்களில், வணங்கா - வணங்காத, மண்டையிருக்கும் - தலையையுடைய உங்களுக்கும், சனனம் மரணமும் - பிறப்பு மிறப்புமாகிய இவைகள், விடுமோ - விட்டொழியுமோ ? [ஒழியாது.] (எ-று.)

என்னைப்பரமபதத்தில் அடியார்கூட்டத்தோடுவைத்து அருள்கின்ற தந்தையாகிய செவ்வாயனுடையதிருவடிகளை வணங்காததலையுடைய உங்களுக்கு ஜனனமரணம்நீங்காதென்பதாம். வேதம் அறுதியாதலால் பண்டைஇருக்குஎன்றார். மகாப்பிரளயகாலத்தில்அண்டங்களை அழியாதபடி தன் வயிற்றில்வைத்தலால் அண்டத்துக்குத்திறந்தவாயன்என்றார். தயிர் - தையிர் என்றாகியதுபோலி. விடுமோ, ஓ - எதிர்மறை. (௬௬)

மரணங் கடக்குஞ் சரநீங்க வாழ்வித்து வல்லரக்கர்
முரணங் கடக்குஞ் சரவேங் கடவகண் மூடியந்தக்
கரணங் கடக்குஞ் சரமத்து நீதரு கைக்கெனக்குன்
சரணங்க டக்குஞ் சரண்வே றிலைதந்து தாங்கிக்கொள்ளே.

உரை:—கடம் - மதத்தையுடைய, குஞ்சரம் - யானையானது, மரணம் - மரணத்தினின்றும், நீங்க - ஒழிய, வாழ்வித்து - உயிர்வாழச்செய்து, வல் - வலிய, அரக்கர் - இராக்கதருடைய, முரண் - வலிமையை, அங்கு - இலங்கையாகிய அவ்விடத்தில், அடக்கும் - அடக்குகின்ற, சரம் - அம்புகளையுடைய, வேங்கடவ - திருவேங்கடநாதனே ! கண் மூடி - கண்கள் இருண்டு, அந்தக்கரணம் - மனம் புத்தி சித்தம் அகங்காரம் ஆகிய அந்தக்கரணங்கள் நான்கும், கடக்கும் - ஒடுங்குகின்ற, சரமத்து - மரணகாலத்தில், நீ ———, தருகைக்கு - கொடுத்தற்கு, எனக்கு ———, உன் - உன்னுடைய, சரணங்கள் - திருவடிகள், தக்கும் - தகுதியாகும் ; சரண் - அடைக்கலம்புகுமிடம், வேறு இலை - வேறேயில்லையாதலால், தந்து - அத்திருவடிகளை எனக்குக்கொடுத்து, தாங்கிக்கொள் - என்னைக்காத்துக் கொள்; (எ-று.)

யானையைக்காத்து அரக்கரைக்கொன்ற திருவேங்கடநாதனே ! யான் இறக்கும்பொழுது உன்னுடைய திருவடியை எனக்குக்கொடுப்பது தகுதியாகும். வேறு புகலிடமில்லையாகையால் கொடுத்து என்னைக் காத்துக்கொள்என்பதாம். வாழ்வித்து, வி - பிறவினைவிகுதி. அந்தக்கரணம் - வடசொல். தருகை - தொழிற்பெயர். "தகும்" என்பது "தக்கும்" எனவிரித்தல் விகாரம்பெற்றது. (௬௭)

தாங்கட லாழி வளைதண்டு வாள்வில்லிற் றானவரை
யீங்கட வீசிக் குறித்தடித் துத்துணித் தெய்துவெல்லும்
பூங்கடல் வண்ண னிலைகிடை வந்தது போக்கிருப்பு
வேங்கடம் வேலை யயோத்திவெங் கானகம் விண்ணுலகே.

உரை :—தாங்கு - கையிலேந்திய, அடல் - வலிமையுள்ள, ஆழி - சக்கரம், வளை - சங்கம், தண்டு - கதை, வாள் - கத்தி, வில்லில் - வில் ஆகிய இவற்றால், தானவரை - அசுரரை, ஈங்கு - இவ்வுலகத்தில், அட - கொல்ல, வீசி - எறிந்தும், குறித்து - ஊதியும், அடித்து - புடைத்தும், துணித்து - துண்டித்தும், எய்து - அம்புகளையெய்தும், வெல்லும் - வெற்

றிகொள்கின்ற, பூ - அழகிய, கடல்வண்ணன் - கடல்போன்ற நிற முடையமாயோன், நிலை - நின்றதும், கிடை - கிடந்ததும், வந்தது - அவதரித்ததும், போக்கு - சென்றதும், இருப்பு - இருந்ததும், (முறையே), வேங்கடம் - திருவேங்கடத்திலும், வேலை - திருப்பாற்கடலிலும், அயோத்தி - அயோத்தியிலும். வெம் - கொடிய, கானகம் - காட்டிலும், விண்ணுலகு - பரமபதத்திலுமாம்; (எ - று.)

தானவரைக்கொல்ல ஆழியைவீசி, வளையைக்குறித்து, தண்டாலடித்து, வாளால் துணித்து, வில்லால் எய்து வென்ற கடல்வண்ணன் நின்றது - வேங்கடம்; கிடந்தது - பாற்கடல்; அவதரித்தது - அயோத்தி; சென்றது - காடு; இருந்தது - பரமபதமாகும்; என்பதாம். இப்பாடலில் முன்னிரண்டடியும் பின்னிரண்டடியும் நிரனிறையணிகோளாகும். ஆழி வளை தண்டு வாள்வில் - உம்மைத்தொகை. போக்கு, இருப்பு - தொழிற்பெயர்கள். (௬௩)

உலகந் தரவுந்தி பூத்திலை யேற்சுட ரோரிரண்டு
மிலகந் தரமும் புவியுமெங் கேயய னீசனெங்கே
பலகந் தரமு முணவுமெங் கேபல் லுயிர்களெங்கே
திலகந் தரணிக் கெனநின்ற வேங்கடச் சீதரனே.

உரை:—தரணிக்கு - உலகத்திற்கு, திலகம் என - நெற்றித்திலகம்போல, நின்ற - விளங்கிநின்ற, வேங்கடம் - திருவேங்கட மலையிலுள்ள, சீதரனே - ஸ்ரீதரனென்னும் பெயருடைய பெருமானே! நீ, உலகம் - உலகங்களை, தர - படைக்கவேண்டி, உந்தி - நின் திருவுந்தியில், (கமலம்,) பூத்திலையேல் - மலரச்செய்திலையானால், ஓர் - ஒப்பற்ற, இரண்டு சுடரும் - சூரியசந்திரராகிய இரண்டு சுடர்களும், இலகு - விளங்குகின்ற, அந்தரமும் - ஆகாயமும், புவியும் - பூமியும், எங்கே - யாங்குஉண்டாகுமோ? அயன் - பிரமனும், ஈசன் - உருத்திரனும், எங்கே - எங்கு உண்டாவார்கள்? பல - பலவாகிய, கந்தரமும் - மேகங்களும், உணவும் - அவற்றால் விளையும் உணவுப்பொருள்களும், எங்கே - எங்குண்டாவன? பல் உயிர்கள் - பலஉயிர்களும், எங்கே - எங்குஉண்டாவன? [யாவுமில்லையாம்.]

வேங்கடத்தின்கண் விளங்குஞ் சீதரனே! நீதிருவுந்தி பூத்திலையென்னில் சூரியசந்திராதிகளும் ஆகாய முதலிய பூதங்களும் பிரமருத்திராதிகளும், மேகமுதலியன யாவும்இல்லை யென்பதாம். உந்தியிற் பிரமன்தோன்றி அவன் உலகம்படைத்தலில் அவன் தோன்றாவிடில் யாவுந்தோன்றாவாதலின் பூவாவிடினில்லை யென்றார். ஆகாயமும் பூமியுமென்றமையால் இடையிலுள்ள காற்று, தீ, நீர் முதலியனவுங் கொள்க. எங்கு என்னும் இடைச்சொற்களின்மேலுள்ள ஏகாரமெல்லாம் எதிர்மறைப்பொருள் குறிப்பன. உலகம் - தனித்தமிழ்மொழி.

சீவார் கழலை யிரண்டையுஞ் செப்பென்று தீங்குழலி
ணுவார் கழலைப் பயில்செங்கை யார்நலம் பேணுமைவ
ராவார் கழலை யிரண்டா மவத்தையி னன்றெனக்குன்
பூவார் கழலை யருளப்ப னேயண்ட பூரணனே.

உரை:—அப்பனே - திருவேங்கடத்திலிருக்கிற தந்தையே! அண்ட பூரணனே - அண்டங்களிலெல்லாம் நிறைந்தவனே! தீம் குழலின் - இனிய புல்லாங்குழல்போல, நாவார் - நாவிற்சொல்லுடையவரும்,

கழலை - கழற்கொடியின் கொட்டையை, பயில் - எடுத்து ஆடுகின்ற, செங்கையார் - சிவந்தகையுடையவருமாகிய மாதர்களின், சி———, வார் - வடிகின்ற, கழலை இரண்டையும் - இரண்டு கழலைக்கட்டியாகிய கொங்கைகளையும், செப்பு என்று - செப்புக்கிண்ணங்களென்றுகொண்டு, நலம் - அவர் இன்பத்தை, பேணும் - விரும்புகின்ற, ஐவர் ஆவார் - பஞ்சேந்திரியங்கள், கழல் - நீங்குகின்ற, ஐ இரண்டு ஆம் - பத்தாவதாகிய, அவத்தையின் அன்று - மரணாவஸ்தையினப்பொழுது, எனக்கு - உன் தொண்டனாகிய எனக்கு, உன் - உன்னுடைய, பூ ஆர் - மலர்போன்ற, கழலை - திருவடிகளை, அருள் - தந்தருள்வாயாக; (எ - று.)

அப்பனே! அண்டபூரணனே! மாதர் நலத்தை விரும்பிய பஞ்சேந்திரியங்களின் தொழில்களெல்லாம் நீங்குகின்ற மரணாவஸ்தையில் உன் மலரடிகளை எனக்கு அருளுவாயாக வென்பதாம். கழலை - சிரங்குக் கட்டி; நன்னூலில் கீழ்வயிற்றுக்கழலையென்ற உதாரணத்தையும் நோக்குக. இதுபற்றியே "பிணிசெய்கின்ற கரலை யென்பில் பிசித பிண்ட முசிதமா, யணிசெய் கொங்கை யமுதகும்ப மெனவி ரும்பி யலைவரே" என்றார் பரணியிலும். ஐயிரண்ட வஸ்தையாவன :—1. காண்டல், 2. பெறவேண்டுமென்னும் உள்ள நிகழ்ச்சி, 3. இடைவிடாது நினைத்தல், 4. வாடுதல், 5. வருத்தமிகுதியைப் பிறர்க்குரைத்தல், 6. நாணத்தின் எல்லையைக்கடத்தல், 7. நோக்குவனவெல்லாம் அவையே போலுதல், 8. பித்தாதல், 9. மோகித்தல், 10. சாக்காடு என்பன. "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு, மொண்டொடி கண்ணே யுள" என்றபடி சுவையொளியூறோசை நாற்றமென்ற ஐம்புலனு மொரேகாலத்தில் மகிழ்ச்சியடைவது மாதர்களிடத்திலேயாதலால் பேணுமைவரென்றார். ஐவராவார், ஆவார் - முதல்வேற்றுமையின் சொல்லுருபு. பூவார், ஆர் - உவமவுருபிடைச்சொல். (௩௫)

பூரண னாரணன் பொன்னுல காளி புராரி கொடி
வாரண னாரணன் வாழ்த்தும் பிரான் வட வேங்கடத்துக்
காரண னாரணங் காறு விறைவி கணவன் மண்ணேழ்
பாரண னாரண னென்பார்க்கு நீங்கும் பழுதவமே.

உரை :—வட வேங்கடத்து - வடதிசைக்கண்ணுள்ள வேங்கடமலையில், காரணன் - மூலகாரணனாய் விளங்கியருளுகின்ற இறைவனானவன், பூரணன் - எங்கும் நிறைந்தவனென்றும், பொன்னுலகாளி - இந்திரன், ஆர் அணன் - இவனுக்குப்பொருந்திய அண்ணனென்றும், புராரி-திரிபுரதகனனான சிவபெருமானு மிவனேயென்றும், கொடிவாரணன் - கோழிக்கொடியையுடைய சாத்தனு மியனேயென்றும், ஆரணன் - பிரமதேவனால், வாழ்த்தும் - துதிக்கப்பட்ட, பிரான் - பெரியோனென்றும், ஆரணங்கு - தெய்வப்பெண்ணாகிய, ஆறு - கெடாத, இறைவி கணவன் - திருமகளார் நாயகனென்றும், எழ் மண் பாரணன் - எழுலகுமுண்டவனென்றும், நாரணன் என்பார்க்கு - நாராயணனென்றும் சொல்லுவோர்க்கு, அவம் - அவர்செய்துள்ள தீவினைகளெல்லாம், பழுது - பழுதுபட்டு, நீங்கும் - நீங்கிவிடும்; (எ - று.)

வேங்கடத்திலிருக்கிற காரணபூதனான இறைவனைப் பூரணனென்றும் உபேந்திரனென்றும் புராரியென்றும் வாரணனென்றும் பிரானென்றும் திருமகளார்கணவனென்றும் பாரணனென்றும் நாரண

ன்என்றும் சொல்லுவார்க்கு அவர்கள் செய்துள்ள தீவினைகளெல்லாம் பழுதுபட்டு நீங்கிவிடுமென்பதாம். இதனால் எல்லாவடிவமும் நாரா யணனேயென்பது கூறப்பட்டது. அந்தரியாமியாதலால் பூர்ண னென்றார். காசிபன் மனைவி அதிதிவயிற்றில் இந்திரனுக்குத் தம்பி யர்கவாமனனெனும்பெயருட னவதரித்தமையால் பொன்னுலகாளி ஆர் அண்ணனென்றதாம் (இதுவே உபேந்திராவதாரம்.) ''கரியமேனிமிசை வெளிய நீறுசிறி தேயிடும்,பெரிய கோலத் தடங்கண்ணன்'' ''உடையா ர்ந்த வாடையன் கண்டிகையன்'' ''முனியே நான்முகனே முக்கணப் பா'' 'பூத்தண்டுழாய் முடியாய் புனைகொன்றையஞ் செஞ்சடையாய்' என்று ஆழ்வார் அருளிச்செயல்கொண்டு புராரியென்றார். புர+அரி-புராரி; புரங்களை நாசஞ்செய்தவன்; முற்கூறியன்றிச் சிவபெருமான் கையில் அம்பாகிவந்து அப்புரங்களையழித்தலிற் புராரியாகுனென்றலு மாம்; இதுபற்றியே ''குழனிற வண்ணநின் கூறு கொண்ட, தழனிற வண்ண னண்ணார் நகரம், விழநனி மலைசிலை வளைவு செய்தங், கழனிற வம்பது வானவனே'' என்றார் திருமங்கையாழ்வாரும். இறைவனும் சிவபிரானுங்கூடிச் சாத்தனையுயிர்த்தமை தோன்றக் கொடிவாரண னென்றார்; கொடிவாரணன் - குமாரக்கடவுளுமாம். ஏழுலகும் அவன்வயிற்றடங்கினமைதோன்ற மண்ணேழ்பாரணனென்றார். ஈற் றில் தானொருவனே மகாப்பிரளயத்திற் சயனித்திருப்பானென்பது தோன்ற நாராயணனென்றார். புரம் -மூன்றுபுரங்கள்:—தாரகாசுரன் மக்கள்மூவரும் தவத்தால்வரம்பெற்று உலோகங்களாலாகிய மூன்று கோட்டைகளைப்பெற்று எல்லாரையும் வருத்துவதையறிந்த சிவபிரான் பொருது அழித்தனனென்பதாம். உலகம் எழு - அதலம், விதலம், சுத லம், தராதலம், ரசாதலம் மகாதலம், பாதாளம். புராரி - தீர்க்கசந்தி. நாராயணனென்ற வடசொல் நாரணனெனத்திரிந்தது. (சுகூ)

பழுத்தெட்டி போன்ற நடுச்செல்வர் பின்சென்று பல்செருக்காற்
கொழுத்தெட் டினையள வெண்ணமற் றீர்குவ டேறிமந்தி
கழுத்தெட்டி யண்டர் பதிநோக்கும் வேங்கடக் காவலனை
யெழுத்தெட்டி னாலெண்ணி யேத்தீர் பரகதி யேறுதற்கே.

உரை :— பழுத்த - கனிகள் பழுத்திருக்கின்ற, எட்டி போன்ற- எட்டி மரத்தையொத்த, நடு - மத்தியிலுண்டாகிய, செல்வர் - தனவா ன்களின், பின்சென்று - பின்னேபோய், பல் செருக்கால் - பலகளிப் பினாலே, கொழுத்து - கொழுப்பேறி, எள் (அளவு) - எள்ளளவேனும், தினை அளவு - தினையளவேனும், எண்ணம் - நினைப்பு, அற்றீர் - இல் லாதவர்களே! மந்தி - மந்திகள், குவடு ஏறி - மலைச்சிகரத்திலேறி, அண்டர்பதி - தேவருலகத்தை, கழுத்து எட்டி——, நோக்கும் - பார் க்கின்ற, வேங்கடம் காவலனை - திருவேங்கடநாதனை, எழுத்து எட்டி னால் - அஷ்டாட்சரத்தால், எண்ணி - தியானித்து, (நீங்கள்,) பரகதி ஏறுதற்கு - பரமபதம் அடையவேண்டி, ஏத்தீர் - துதியுங்கள் ; (எ-று.)

செல்வர் பின்னேசென்று களிக்கும் மாந்தர்களே! நீங்கள் பரகதி யடையும்பொருட்டுத் திருவேங்கடநாதனைத்தியானியுங்கள் என்பதாம். எட்டி பழுத்தாலும் பிறர்க்குப் பயன்படாததுபோல நடுச்செல்வர் உங்க ளுக்கு ஒன்றுந்தாரார் என்றும் ''ஆகா தெனினும் அகத்துநெய் யுண் டாகிற், போகா தெறும்பு புறஞ்சுற்றும்'' அவ்வண்ணம் நீங்கள் அவர்க

லைச்சுற்றிக் களிப்பினால் எம்பிரானை யெண்ணினீரில்லை யென்றும் கூறி னார். "எட்டி பழுத்தாலென்ன ஈயாதவன் வாழ்ந்தாலென்ன" என் னும் பழமொழியும் நோக்குக. பழுத்த, அ - தொக்கது. எந்நீர் - உடம்பாடு ஏவற்பன்மைமுற்று. ஏறுதற்கு - குவ்விகுதிபெற்ற செயவெ ன்வாய்பாட்டு வினையெச்சம். மந்தி குவடு ஏறியவுடன் தேவருலகு தனக்குச் சமீபத்திலிருக்கப்பார்த்து அதில் ஏறுவதற்கு நோக்குதல் போல நீங்கள் வேங்கடக்காவலனைக் கருதியமாத்திரத்தில் உயர்ந்த பர மபதநிலையைப் பின்புபார்த்து அதிலேறுவதன் கருத்துடையராவீ ரென்று தொகைமொழியாற்கொள்க. (௧௭)

ஏறு கடாவுவ ரன்னங் கடாவுவ ரீரிருகோட்
டூறு கடாமழை யோங்கல் கடாவுவ ரோடருவி
யாறு கடாத வமுதெனப் பாய வரிகமுகந்
தாறுக டாவும் வடவேங் கடவரைத் தாழ்ந்தவரே.

உரை :— ஓடு அருவி ஆறு-ஓடுகின்ற அருவியாற்றின் நீர், கடாத- கைப்பில்லாத, அமுது என - அமிர்தம்போல, பாய - பாய்ந்துசெல்ல, அரி - குரங்குகள், கமுகம் - பாக்கு மரங்களின், தாறுகள் - குலைகள் மேல், தாவும் - தாவிக் குதிக்கின்ற, வடவேங்கடவரை - வடதிசைக் கண்ணுள்ள திருவேங்கடத் திறைவரை, தாழ்ந்தவர் - வணங்கினவர் கள், ஏறு - இடபவாகனத்தை, கடாவுவர் - செலுத்துவார்கள்; அன் னம் - அன்னவாகனத்தை, கடாவுவர் - செலுத்துவார்கள்; ஈர் இரு கோட்டு - நான்கு தந்தங்களையுடைய, கடாம் - மதநீர், மழை - மழை போல, ஊறு - பெருகுகின்ற, ஓங்கல் - மலைபோன்ற ஐராவதமென் னும் யானையை, கடாவுவர் - செலுத்துவார்கள்; (எ - று.)

திருவேங்கடமுடையானை வணங்கினவர்கள், பிரம ருத்திர இந்தி ராதி உயர்ந்த பதங்களில் எதனை விரும்பினாலும் விரும்பியதை விரும்பி யபடி அடைவார்களென்பதாம். ஏறு - விலங்கின் ஆண்பாற்பெயர்; இங் குச் சிவபெருமான் செலுத்தும் இடபத்துக்காயிற்று. கடாத - எதிர் மறைப் பெயரெச்சம்; கடு - பகுதி: கடு - கசப்பு. ஓங்கல் - உவமையா குபெயர். அருவி நீர்பாய அரிக்குலம் மரங்கள்தோறுந் தாவுதல்போல எம்பிரான் கருணைவெள்ளம்பெருக அதனைப்பெற்ற உயிர்கள் தம் இச் சையுள்ள ஒவ்வொரு பதங்களிலும் தாவிச்செல்வார்களென்று தொகை மொழிக்கருத்துக் கொள்க. அன்னம் - பிரமதேவரின் வாகனம். ஐரா வதம் - இந்திரன் வாகனமாகிய யானை. (௧௮)

தாழ்ந்த வருக்கந் தருவொக்கு மோபல தாரகையுஞ்
சூழ்ந்த வருக்கன் சுடரொக்கு மோதொல் லரக்கரென்று
வாழ்ந்த வருக்கங் களைந்தான் வடமலை மாலடிக்கீழ்
வீழ்ந்த வருக்கன் பருக்கொப்ப ரோவண்டர் மெய்த்தவரே.

உரை :— தாழ்ந்த - இழிந்த, அருக்கம் - எருக்கஞ் செடியானது, தரு - கற்பக விருக்ஷத்தை, ஒக்குமோ - நிகராகுமோ? (ஆகாது.) பல- பலவாகிய, தாரகையும் - நட்சத்திரங்களும், சூழ்ந்த - சூழ்ந்துவரப்பெ ற்ற, அருக்கன் - சூரியனது, சுடர் - பிரகாசத்திற்கு, ஒக்குமோ - நிக ராகுமோ? (ஆகவாம்; அப்படிப்போல) தொல் - பழமையாகிய, அரக் கரென்று - இராட்சதரென்று, வாழ்ந்த - வாழ்ந்துகொண்டிருந்த, வரு

க்கம் - கூட்டத்தை, களைந்தான் - அழித்தவனாகிய, வடமலை - திருவேங்கடமலையிலுள்ள, மால் - மாயோனுடைய, அடி கீழ்-திருவடிகளிலே, வீழ்ந்தவருக்கு - வணங்கிய தொண்டர்கள்பால், அன்பருக்கு - அன்புடையோராகி யிருப்பவருக்கு, அண்டர் - தேவரும், மெய் - உண்மையான, தவர் - தவத்தினரும், ஒப்பரோ - நிகராவாரோ? [ஆகார்.]

எருக்கு - கற்பகத்துக்கு ஒப்பாகுமா? நட்சத்திரங்கள் சூரியனொளிக்கு நிகராகுமா? (அப்படிப்போல) வடமலை மாயோனது அடியரின் அடியருக்குத் தேவரும் முனிவரும் ஒப்பாவரோ ஆகாரென்பதாம். எல்லாக் கிரகங்களும் தன்னைச் சூழ்ந்துவரப்பெற்றதனாலும், தன்னிலையில் நின்று தான் சுற்றுதலாலும் சூழ்ந்தவருக்கனென்றார். தொல்லரக்கர் - பிரமன் உலகத்தைப்படைக்குங்காலத்திலே சிருஷ்டித்த இராக்கதப் பகுதியர். ஓகாரங்கள் - எதிர்மறைப்பொருளன. இது எடுத்துக்காட்டுவமையணி. (௬௬)

மெய்த்தவம் போருஞ் வெஞ்சொலி ராமன்வில் வாங்கிவளைத்
துய்த்தவம் போருக நாலுஞ்செய் தோருயர் வேங்கடத்து
வைத்தவம் போருகப் பூவார்கழலை மறைமனுநூல்
பொய்த்தவம் போருக வார்காமம் வேட்டுப் புரளுவரே.

உரை:— வெம் - கொடிய, சொல் - சொற்களையுடைய, இராமன் - பரசுராமனது, மெய் - உண்மையான, தவம்-தவத்தின் பயன்களெல்லாம், போர் - யுத்தத்தில், உக - கெடும்படியாக, வில் - அந்தப் பரசுராமனது வில்லை, வாங்கி ——, வளைத்து - வளைத்து நாண்பூட்டி, உய்த்த - செலுத்தின, அம்போர்-அம்பினையுடையவரும், உகம்நாலும்-நான்கு யுகங்களையும், செய்தோர்-ஆக்கினவருமாகிய இறைவர், உயர்-உயர்ந்த, வேங்கடத்து - திருவேங்கடமலையில், வைத்த-வைத்தருளின, அம்போருகம் - தாமரையினது, பூ ஆர் - மலர்போன்ற,கழலை - திருவடிகளை, மறை - வேதங்களையும், மனுநூல் - மனுதரும சாஸ்திரத்தையும், பொய்த்த - பொய்யென்றுகூறிய, வம்போர் - வம்பர்கள். உகவார் - விரும்பாராகி, காமம் - சிற்றின்பத்தை, வேட்டு - விரும்பி, புரளுவர் - புரண்டு விழுவர்; (எ - று.)

பரசுராமனைவென்ற இறைவனார் திருவேங்கடத்தில் நின்றருளிய திருவடிகளை (ஞானிகள் தரிசித்து நன்மைபெறுவாரது கண்டிருந்தும்) வேத விரோதிகள் சிலர் விரும்பாராய்ச் சிற்றின்பத்தி லழிகின்றனர். என்னே! என்று இரங்கிக்கூறியதாம். இராமாவதாரத்தில் மிதிலையில் சீதாபிராட்டியாரை மணமுடித்து மீண்டுவரும்போது எதிர்த்த பரசுராமனை ஓரம்பினால்வென்று அவன் தவங்களைத்தாம் அடைந்தது வெளிப்படை. பரசுராமன் :— ஜமதக்கினி மகன்; தந்தை கட்டளைப்படி தாயைக்கொன்று மீண்டு பிழைக்கும்படிசெய்துகொண்டனன். தன் தந்தையைக் கார்த்தவீரியனென்பான் கொன்றதுகாரணமாக அவனை வதைத்ததுமன்றி இருபத்தொரு தலைமுறை அரசர்கள் பரம்பரையை அழித்து உலகமெல்லாம் தன்வசப்படுத்திக்கொண்டு ஒரு மகாயாகஞ்செய்ய அந்த யாகத்தில் வந்து யாசித்த காசிபமுனிக்குஇவ்வுலகத்தைத் தத்தஞ்செய்துவிட்டு மேற்குத் தொடர்ச்சி மலைக்கு மேல்பாலுள்ள காட்டினைத்திருத்தி கேரள ராச்சியத்தை ஸ்தாபித்தனன். பின்பு தனக்கு மனைவி முதலிய யாவுமில்லாமையால் தன் சகோதரி மகனுக்குப்

பட்டங்கொடுத்து இமயமலையில் தவஞ்செய்யப்போயினன். இவன் இந்தியாவை யாண்டகாலத்தில் பூமியில் பற்பல நதிகளமைத்து ஆங்காங்குள்ள மேடு பள்ளங்களுக்குத்தக்கபடி மார்க்கமுண்டாக்கிக்காடுகெடுத்து நாடாக்கி நல்லவழிகளுக் கொண்டுவந்தனன். இவன் அரசர்களைக்கொன்றதன் நிமித்தம் இவன்பெயரையே நாட்டாமல் பிற்காலத்தில் நதிகளுக்கு வேறுவேறு புராணங்கட்டிவிட்டனர். விரிப்பிற் பெருகுமாதலின் இம்மட்டோடு நிறுத்தலாயிற்று. (௭௦)

*புரண்டுதிக் கும்முடற் கேயிதஞ் செய்பொரு ளாக்கையினு*
*லிரண்டுதிக் குந்தடு மாறுநெஞ் சேயினி யெய்துவம்வா*
*திரண்டுதிக் கும்மரன் வேளய னார்முதற் றேவரெல்லாஞ்*
*சரண்டுதிக் கும்படி மேனின்ற வேங்கடத் தாமத்தையே.*

உரை:—புரண்டு - கிடந்தபுரண்டு, உதிக்கும் - பெருக்கின்ற, உடற்கே - சரீரத்துக்காகவே, இதம் செய் - நன்மைசெய்கின்ற, பொருள் - செல்வத்தை, ஆக்கையின் - உண்டாக்கிக்கொள்வதற்காக, நால் இரண்டு திக்கும் - எட்டுத்திசைகளிலும், தடுமாறும் - திரிந்துஉழலுகின்ற, நெஞ்சே - மனமே! திரண்டு - கூட்டமாகி, உதிக்கும் - தோன்றுகின்ற, அரன் - உருத்திரமூர்த்தியும், வேள் - மன்மதனும், அயனார் - பிரமதேவரும், முதல் - இவர்முதலாகிய, தேவரெல்லாம் ——, சரண - தன்பாதங்களை, துதிக்கும்படி - தோத்திரஞ்செய்யும்படியாக, வேங்கடம் மேல் நின்ற - திருவேங்கடமலைமேல் நின்றதிருக்கோலமா யெழுந்தருளிய, தாமத்தை - சுடர்போன்றவரை, இனி - இப்பொழுது, எய்துவம் - அடைவோம்; வா - வருவாயாக; (எ-று.)

*சரீரத்திற்குநன்மைசெய்கின்றபொருளைத்தேடியுழலுகின்றநெஞ்சே! எல்லாததேவரும் வணங்குகின்ற திருவேங்கடத்துள்ள சோதிவடிவுடையவரையடைவோம் வருவாயாகவென்பதாம் பொருளைச்சேகரித்தல் மனைவிமக்கள்முதலாயினோர் பொருட்டன்றித் தன்னுடலுக்கேயாமென்பதுதோன்ற உடற்கேயிதஞ்செய்பொருளென்றார். சேகரித்தலும அருமையென்பதனால் நாலிரண்டுதிக்குந்தடுமாறும்என்றார். உதிக்கும்முடல், மகரம் - விரித்தல்விகாரம். திரண்டுதிக்கும்மரன் - என்பது மது. துதிக்கும்படி - படியீற்றுவினையெச்சம். தாமம் - உவமையாகுபெயர்.*

*தாமந் தளைவெண்ணெ யுண்டவந் நாளிடைத் தாயர்பிணி*
*தாமத் தளையுவந் தார்வேங்க டாதிபர் தாமரைப்பூந்*
*தாமத்த ளைமணி யோடணி மார்பினர் தண்ணந்துழாய்த்*
*தாமத் தளைவதென் றோமட வீரென் றடமுலையே.*

பொருளும் திணையும் பகுதியும் அவை.
துறை—தலைவன் பிரிதலுந் தனியுறை தலைவி
சிலைநுதற் பாங்கியர்க்கு நிலைதளர்ந் துரைத்தல்.

உரை:—மடவீர் - தோழியர்களே! தாம் - தாவுகின்ற, மத்து - மத்தினால், அளை - கடையப்பட்ட, வெண்ணெய் - வெண்ணெயை, உண்ட - புசித்த, அந்நாள - அக்காலத்தில், இடை - இடைக்குலத்திலுள்ள, தாயர் - அசோதையார், பிணி - பிடித்துக்கட்டிய, தாமம் தளை - கயிற்றின் கட்டினை, உவந்தார் - விரும்பினவரும், மணியோடு - கவுத்துவமணி

யுடனே தாமரைப்பூந்தாமத்தளை - தாமரைப்பூவை இடமாகவுடைய வளை, (இலக்குமிதேவியாரை). அணி - அணிந்த, மார்பினர் - மார்பை யுடையவருமாகிய, வேங்கடாதிபர் - திருவேங்கடநாதருடைய, தண் - குளிர்ந்த, அம் - அழகிய, துழாய் - துளசியாலாகிய, தாமத்து - மாலையில், என்———, தடம் - அகன்ற, முலை - கொங்கைகள், அளைவது - பொருந்துவது, என்றோ - எக்காலத்திலோ? (எ-று.)

தோழியர்களே! வெண்ணெய்திருடிக் கட்டுண்டவரும் மணியையும் திருமகளாரையும் மார்பிலுடையவருமாகிய திருவேங்கடநாதர் துழாய்மாலைமார்பில் என்உறுப்புக்கள்தோய அணைவதெந்தக்காலமோ? சொல்வீர்என்பதாம். தாவும் - தாமென்றாயிற்று; [நன் - வினை - உஉ.] வேங்கடாதிபர் - தீர்க்கசந்தி. பூந்தாமத்தள், தாமம் - இடம். இது இருபத்துமூன்றாவதன் மெய்ப்பாடாகியகலங்கிமொழிதலின்பாற்படுத்த ஒருவாறமையுமென்றாலும் கந்தருவத்தின்வேறுபட்டதனாலும் அகப்புறமுமின்றிப் பாடாண்டிணைப்பாற்பட்டமையாலும் அமையுமென்க. திருட்டுத்தொழிலுடையவர்க்குக் களவுப்புணர்ச்சியும் பொருந்துமென்பது தோன்ற வெண்ணெய்திருடியதைக்கூறினார். வேறுமாதரை விரும்பினால் அபகீர்த்திவருமோவெனில் முன் திருட்டுத்தொழிலில் பிறரால் கட்டுண்டு மானமிழந்தவர்க்கு இதுவும் தகுமென்பது தோன்ற இடைத்தாயர் பிணித்தமை கூறினார். இத்தகையதொழில் காமுகர்க்கேயாமென்பார்க்கு இவரும் அத்தன்மையரேயென்பதை விளக்கவேண்டிப் பூந்தாமத்தள்மார்பினரென்றார். இப்பாடல் - யமகம். (எஉ)

தடவி கடத்தலை வேழமுன் னின்றன சாடுதைத்துப்
புடவி கடத்தலை யீரே ழளந்தன பூந்திருவோ
டடவி கடத்தலை வேட்டன வேங்கடத் தப்பன்புள்ளைக்
கடவி கடத்தலை நெய்யுண்ட மாதவன் கான்மலரே.

உரை:—வேங்கடத்து - திருவேங்கடமலையில் நின்றருளிய, அப்பன் - எல்லார்க்கும்தந்தையாவானும், புள்ளை - கருடனை, கடவி - வாகனமாக நடத்துகின்றவனும், கடம்தலை - குடத்தில், நெய் - வெண்ணெயை, உண்ட - புசித்த, மாதவன் - இலக்குமிநாயகனுமாகிய இறைவனுடைய, கால்மலர் - திருவடித்தாமரைகள், தடம் - பெரிய, விகடம் தலை - மாறுபட்ட தலையையுடைய, வேழம் - யானையின், முன் - முன்னே, நின்றன - நின்றருளின; சாடு - சகடாசுரனை, உதைத்து———, தத்து - தாவுகின்ற, அலை - அலைகளையுடையகடலாற்சூழப்பட்ட, ஈரேழ்புடவிகள் - பதினான்குலோகங்களையும், அளந்தன - அளந்தருளின; பூ - அழகிய, திருவோடு - சீதாபிராட்டியுடனே, அடவி - காட்டை, கடத்தலை - தாண்டிச்செல்வதை, வேட்டன - விரும்பின; (எ-று.)

அப்பனும் கருடவாகனனும் ஆகிய மாதவனுடைய திருவடிகள் யானையைக்காக்க அதன்முன் னின்றன; சகடாசுரனைக்கொன்று பதினான்குலோகங்களையும் அளந்தன; தேவியாரொடு காட்டிற் சென்றனவென்பதாம். இது திருவடிப்புகழ்ச்சி. மற்றை விலங்குகள்போலாகாது கைபொருந்திய தலையையுடைமையின் விகடத்தலையென்றார். சகடாசுரன் கம்சனால் கண்ணனைக்கொல்லும்பொருட்டு அனுப்பப்பட்டவன்; இவன் சிறந்த ஒருதொட்டில்வடிவமாகி நந்தகோபன்மனையில்போய்க் கிடப்ப அதனை அறியாத அசோதையார் கண்ணனை அதன்மீது படுக்கவைத்த

னன்; அப்பொழுது கண்ணபிரான் காலால் உதைத்து அந்தச்சகடத்தை முறித்து அவ்வசுரனைக் கொன்றனன். மாவலியிடத்து மூவடிமண் இரந்து உலகத்தையளந்தது வெளிப்படை. சாடு - தனித்தமிழ்மொழி. கடவி, இ - பெயர்விகுதி. தாண்மலர் - மலர்த்தாளெனமாற்றி முன்பின்னாகத் தொக்க உவமத்தொகையென்னலுமாம். தந்தலை - வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. (எங)

கானக முண்டதிற் போமென்னி னீங்கிக் கடும்பிணிகாள்
தேனக முண்டகத் தாள்வேங்க டேசனைச் சென்றிரக்கும்
போனக முண்டவெண் ணீற்றோ னயனொடும் பூமியொடும்
வானக முண்ட பெருமானை யின்றென் மனமுண்டதே.

உரை :—தேன் - தேனை, அகம் - உள்ளேயுடைய, முண்டகம்தாள் - தாமரைமலர்போன்ற திருவடிகளையுடைய, வேங்கடேசனை - திருவேங்கடநாதனை, சென்று - போய், இரக்கும் - யாசிக்கின்ற, போனகம் - இரத்தப்பலிபொருந்திய. முண்டம் - கபாலத்தைக்கையிலுடைய, வெண்ணீற்றோன் - வெள்ளியதிருநீற்றையுடையவைரவக்கடவுளையும், அயனொடும் - பிரமனொடும், பூமியொடும் - மண்ணுலகத்தோடும், வானகம் - விண்ணுலகத்தையும், உண்ட - புசித்த, பெருமானை - இறைவனை, இன்று - இப்பொழுது, என் - என்னுடைய, மனம் - மனமானது, உண்டது - உட்கொண்டது; (ஆதலால்,) கடும்பிணிகாள் - கொடியநோய்களே! (நீங்கள்,) என்னில்நீங்கி - என்னைவிட்டுவிலகி, கானகம்உண்டு - காடுஉண்டு, அதில் - அந்தக்காட்டிலே, போம் - போய்விடுங்கள்; (எ-று.)

பிணிகளே! திருவேங்கடநாதனாகிய பெருமானை என்மனம் அடையப்பெற்றிருக்கிறது. ஆதலால் உங்களுக்குக் காடுண்டு; நீங்கள் என்னை விட்டுவிலகி அந்தக்காட்டிற்செல்லுங்கள் என்பதாம். இரத்தத்தைப்பலியாகவேற்றவைரவக்கடவுள்முதலாகிய எல்லாத்தேவர்களையும் எல்லா உலகங்களையும் உண்டபெருமான் என்றது மாயோன் எல்லாவடிவங்களும் தானேயாய்விளங்குகின்றானெனவும் எல்லாவுயிர்களையும் காக்கின்றானெனவும்கூறியதாம். என்னில், இல் - ஐந்தனுருபு நீக்கப்பொருளது. உண்டு - குறிப்புவினைமுற்று. வேங்கடேசன் - குணசந்தி. பெருமான் - உயர்திணை ஆண்பால் பெண்பால் இரண்டிற்கும் வருவதால் இருபாற்பொதுப்பெயர். (எச)

மனந்தலை வாக்குற வெண்ணி வணங்கி வழுத்துந்தொண்ட
ரினந்தலைப் பெய்தன னீதன்றி யேயிமை யோருமெங்க
டனந்தலை வாவெனும் வேங்கட வாண தடங்கடலு
ளனந்தலை நாகணை யாயறி யேனன்பு ஞானமுமே.

உரை :—இமையோரும் - தேவர்களும், எங்கள் - எங்களுடைய, தனம் - செல்வமே, தலைவா - இறைவனே, எனும் - என்றுதுதிக்கின்ற, வேங்கடவாண - திருவேங்கடமலையில் வாழ்கின்றவனே! தடம் - பெரிய, கடலுள் - திருப்பாற்கடலில், நனந்தலை - நடுவில், நாக அணையாய் - சேடசயனத்தையுடையவனே! (யான்), மனம்——, தலை - சிரம், வாக்கு - வாய், உற - (இவற்றால்) முறையே பொருந்த, எண்ணி - நினைத்து, வணங்கி - பணிந்து, வழுத்தும் - துதிக்கின்ற, தொண்டர் - அடியார்களினது, இனம் - கூட்டத்திலே, தலைப்பெய்தனன் - சேர்ந்

திருக்கின்றேன் ; ஈதன்றி - இதுவல்லாமல், அன்பும் - பக்தியும், ஞானமும் - அறிவும், அறியேன் - அறிந்திலேன் ; (எ - று.)

தேவர் துதிக்கும் வேங்கடவாணனே ! பாற்கடலில் சேடசயனத்தையுடையவனே ! யான் உன் அடியாரோடு சேர்ந்திருக்கின்றேனேயல்லாமல் உன்னிடத்தில் அன்பும் உன்னை அறியும் ஞானமும் நான் அறியேன் (என்னை நீ யெங்ஙனம் அடிமைக்கொள்வாய்) என்பதாம். இதன் முதலடி நிரல்நிறையணி ; மனத்தாலெண்ணி, தலையால் வணங்கி, வாயால் துதிக்கின்ற தொண்டர்எனக்கூட்டுக. இமையார் - கண் இமையாதவர் ; தேவர் எனப்படுவார் ; இமைக்குங்காலம் அவர்களுக்கு மரணத்தை அறிவிக்கும் என்பர் 'எல்லைமூ வைந்து நாள்க ளுளவென இமைக்குங்கண்ணும்' என்றார்சிந்தாமணியிலும். இமையார்-இதன் விகுதி ஆகாரவுயிர் ஒவாய்ற்று. [நன் - பொது - 2.] தடங்கடல் - உரிச்சொற்றொடர். நனந்தலை - இங்கு வேறுபொருள்கூறுதல் பொருந்தாது. நாக அணை, அகரம் - தொக்கது. (௭௫)

ஞானக்கண் டாகன வொக்கும் பவந்துடை நஞ்சிருக்குந்
தானக்கண் டாகனற் சோதியென் றேத்துவன் றாலமுடன்
வானக்கண் டாகன வண்ணுவென் றோதொலி வந்தடையா
வீனக்கண் டாகனற் கீந்தான் பரகதியென்னப்பனே.

உரை :—வல் தாலம் உடன் - வலிய பூமியோடு, வானம் கண் - ஆகாயத்தினிடத்திலும், தா - தாவுகின்ற, கனம் - மேகம் போன்ற, வண்ணு என்று - நிறத்தையுடையோனே என்று, ஓது -சொல்லுகின்ற, ஒலி - ஓசையானது, வந்து அடையா - வந்து அடையப்பெறாத, (காதையுடையவனும்), 'நஞ்சு - விஷமானது, இருக்கும் - தங்கப்பெற்ற, தானம் - இடத்தையுடைய, கண்டா - கண்டத்தையுடையவனே, கனல் - அக்கினிபோன்ற, சோதி - பிரகாசத்தையுடையோனே, ஞானம் கண் - ஞானமாகிய நேத்திரத்தை, தா - கொடு, கனவு ஒக்கும் - சொற்பனம்போன்ற, பவம் - பிறவியை, துடை - போக்கு,' என்று - என்பதாக, ஏத்து - துதிக்கின்ற (பொல்லாதவனுமாகிய), ஈனம் - இகழ்ச்சியுள்ள, கண்டாகனற்கு - கண்டாகர்ணன் என்னும் அசுரனுக்கு, என் அப்பன்-திருவேங்கடத்திலுள்ள என்னுடைய தந்தையாகியமாயோன், பரகதி - மேலான இடத்தை, ஈந்தான் - கொடுத்தருளினான் ; (எ - று.)

விஷ்ணுஎன்ற சப்தம் காதில் அடையப் பெறாதவனும், சிவபெருமானைநோக்கி 'விஷகண்டனே சோதியே எனக்கு அருளிக்கொடு, பிறவியைநீக்கு' என்று துதிக்கின்றவனுமாகிய கண்டாகர்ணன் என்னும் அசுரனுக்கு என்தந்தையாகிய மாயோனே பரகதிகொடுத்தருளினான் என்பதாம். நஞ்சு - திருப்பாற்கடல் கடையும்பொழுது வாசுகி என்னும் பாம்பினால் கக்கப்பெற்றது. அதன் கொடுமைக்கு அஞ்சிய தேவர்கள் வேண்டிக்கொண்டதனால் சிவபெருமான் அதனை எடுத்து உண்ண அவருடையகண்டத்தில் தங்கிவிட்டது; அதனால் நஞ்சிருக்குங்கண்டன் என்றார். கண்டாகர்ணன் என்னும் அசுரன் ஒருவன் விஷ்ணு என்னும் ஓசை காதில்கேட்கப் பொறாதவனாகி காதில் இரண்டுமணிகளைக் கட்டி அடித்துக்கொண்டு சிவபிரானிடஞ்சென்று முக்திவேண்டுமென்றுகேட்டதும் சிவபிரான் சிறிது ஆலோசித்து ஒருதெய்வத்தைவணங்கி மற்றொரு தெய்வத்தை இகழ்ந்துகூறுகிற கொடியமகாபாதகராகி மதவெறி

கொண்டவர்களுக்கும் அறிவுறுத்துமாறு திருவுளங்கொண்டு அவனை நோக்கி நீ என்னை ஒருபொழுதேனுஞ் சிந்தித்தாயில்லை; எப்பொழுதும் விஷ்ணுவையே தியானித்துக்கொண்டிருந்தமையால் நீ அவரிடமேசெல்லென்று கூற அப்படியே கண்ணபிரானிடஞ்சென்று நிகழ்ந்தமைகூறி வேண்டிக்கொள்ள யாவன் எந்ததெய்வத்தை இகழ்ந்தானோ அவன் அந்தத்தெய்வத்தை வணங்கினாலன்றி அவனைத்தொடர்ந்த தீவினை நீங்காதென்று தெளியக்கூறி அவனுக்கும் அவன்வேண்டுகோளின்படி அவன் தம்பிக்கும் வைகுந்தபதவிகொடுத்தருளினானென்பதாம். வல்+தாலம் - வன்றாலம்; முன்னின்றமெய்திரிந்தது; தாலம், அம்-சாரியை; தாலு - நாக்கு. "தாலமேழுடைய கோவே" என்றார் நைடதநூலாரும். (௭௬)

என்னப்ப னாகத்துப்பொன்னூலன் வேங்கடத்தெந்தைதுயி
மன்னப்ப னாகத்துக் கஞ்சலென் றான்பன் மணிசிதறி [பின்
மின்னப்ப ணாகத்துப் பாய்ந்தான் கதையன்றி வெவ்வினைக
டுன்னப்பனுகத்துப்பொய்ந்நூல்புகாவென் றுனைச்செவிக்கே.

உரை:—என் - எனது, அப்பன் - இறைவனானும், ஆகத்து - மார்பில், பொன் - அழகிய, நூலன் - பூணூலையுடையவனும், வேங்கடத்து - திருவேங்கடமலையிலிருக்கிற, எந்தை - என்தந்தையானும், துயில் - யோகநித்திரை, மன் - பொருந்திய, அப்பன் - பாற்கடலையுடையவனும், நாகத்துக்கு - கஜேந்திரனாகிய யானைக்கு, அஞ்சல் என்றான் - அஞ்சாதேயென்று வந்தவனும், பல் மணி - பலவாகிய இரத்தினங்களும், சிதறி - சிந்தி, மின்ன - பிரகாசிக்க, பணாகத்து - பாம்பாகிய காளியன்மீது, பாய்ந்தான் - குதித்து நடித்தவனுமாகிய இறைவனது, கதை அன்றி - கதை ஒன்றேயல்லாமல், வெவ்வினைகள் - கொடியதீவினைகள், துன்ன - நெருங்கும்படியாக, பல் நா-பலர்தம்நாக்குகளால், கத்து - கத்துதலைப்பொருந்திய,பொய்நூல்-கட்டுக் கதைகளாகிய சமயசாத்திரங்கள், என்———, துளை - துவாரம்பொருந்திய, செவிக்கு-காதுகளில், புகா - புகமாட்டா; (எ - று.)

திருமால் கதைகள் என்செவிகளிற் புகுவனவன்றிப் பிறர் தாம்கத்திய பொய்நூல்கள் என்செவிகளிற் புகமாட்டா; என்பதாம். எனவே இக்கடவுள் கதை ஒன்றுமே இருமைப்பயனுந்தருமென்பதாயிற்று. இதுபற்றியே "திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே" என்றார் சிலப்பதிகாரத்திலும். என்றான், பாய்ந்தான் என்பனவினைப்பெயர்கள். நா - அதனைஉடையார் மேலேற்றும்பொழுது சினையாகுபெயர். செவிக்கு - உருபுமயக்கம். அப்பு-நீர்;எனவேபாற்கடலாம். (௭௭)

## நாரை விடு தூது.

செவித்தலை வன்னியிற் சூடுண்ட வேயிசை தீப்பதும்யான்
றவித்தலை வன்மய லுந்தமர் காப்புந் தமிழ்க்கலியன்
கவித்தலை வன்றிரு வேங்கடத் தான்முன் கழறுமின்பொன்
குவித்தலை வந்துந்து கோனேரி வாழுங் குருகினமே.

பொருளும் திணையும் பகுதியும் அவை
துறை—போதணி குழலி தூது விடுத்தல்.

உரை :—பொன் - பொன்மணலை, குவித்து ———, அலை - அலைகள், வந்து உந்து - கொண்டுவந்து ஒதுக்குகின்ற, கோனேரி - சுவாமிபுஷ்கரிணிதீர்த்தத்தில், வாழும் - வாழ்ந்திருக்கின்ற, குருகு இனமே - கூட்டமாகியநாரைகளே ! வன்னியில் - நெருப்பினால், சூடு உண்ட - சுட்டுத்துளை செய்யப்பட்ட, வேய் - புல்லாங்குழலினது, இசை - ஓசையானது, செவித்தலை - என்காதுகளிடத்திற்புகுந்து, தீப்பதும் - சுட்டுத்தீக்கிறதும், யான் - நான், தவித்து - துன்பப்பட்டு, அலை - வருந்தும்படிசெய்கிற, வல் மயலும் - கொடியகாமமயக்கமும், தமர் - என் உறவினர், காப்பும் - என்னைச்சிறைகாவல்செய்திருக்கிறதும், (ஆகிய எல்லாவற்றையும்,) கலியன் - திருமங்கையாழ்வார்பாடிய, தமிழ்க்கவி தலைவன் - தமிழ்ப் பாடல்களுக்குப் பாட்டுடைத்தலைவனாகிய, திருவேங்கடத்தான் முன் - திருவேங்கடநாதன்முன், கழறுமின் - தெரியப்படுத்துங்கள் ; (எ - று.)

குருகினங்களே ! குழலோசை யென்னைவருத்துவதும் யான் கொண்டகாமமயக்கமும் உறவினர் என்னைவீட்டினிடத்திற்செறித்ததும் திருவேங்கடத்தான்சந்நிதியில் சென்று தெரிவியுங்கள் என்பதாம். வன்னி - வடசொற்சிதைவு. சூடுண்ட, உண் - செயப்பாட்டு வினைவிகுதி. தமிழ்என்பதைக் கவியொடுகூட்டுக. கழறுமின் - ஏவற்பன்மைமுற்று. புணர்ந்தவர்க்கின்பந்தருவதன்றிப் பிரிந்தவர்க்குத்துன்பந்தருதலில் புல்லாங்குழலினிசைக்குத் தீயில்வெதுப்புதலுமென்றார். “ உண்டியிற்குறைதலுடம்புநனிசுருங்கல், கண்துயில் மறுத்தல் கனவொடு மயங்கல், காதல் கைமிகல் கட்டுரை யின்மை ” முதலிய வுடைமையால் தவித்தலை வன்மயலென்றார். தமர்காப்பு - “ நகில் முகஞ்செய்தன முள்ளெயிறிலங்கின, தலைமுடிசான்றதண்டழையுடையை, மூப்புடை முதுபதி தாக்கணங்குடைய,காப்புமிகுண்டிசிறகடையும்போகல், ” என்றாற்போலவருவது காப்பது. கள்ளர்மரபிற் பிறந்த திருமங்கையார் கொள்ளையடித்துவாழுநாளில் எம்பெருமானிடத்திலுள்ளபொருளை வலிந்து கவர்ந்தபொழுது கலியனோஎன்றதனால் கலியனெனும் பெயர் பெற்றனரென்பதாம். பொன்னை அலைகொண்டுவந்து கரையிலொதுக்குதல் போல நீங்கள் என்னை இறைவனிடத்திற் சேர்ப்பிக்கவேண்டுமென்பது தொகைமொழியின் கருத்து. (எஅ)

குருகூ ரரங்க மறைத்தமிழ் மாலை குலாவுந்தெய்வ
முருகூ ரரங்கர் வடவேங் கடவர்முன் னாளிலங்கை
வருகூ ரரங்கந் துணித்தார் சரணங்கள் வல்வினைகட்
கிருகூ ரரங்கள்கண் டீருயிர் காள்சென் றிரவுமினே.

உரை :—உயிர்காள் - உயிர்களே ! குருகூரர் - திருக்குருகூரில் அவதரித்தநம்மாழ்வாரியற்றிய, அங்கம் - அங்கம்பொருந்திய, தமிழ் மறை மாலை - தமிழ்வேதமாயமைந்தபாமாலை, குலாவும் - விளங்கிய, தெய்வம் முருகு ஊர் - தெய்வமணம்வீசப்பெற்ற, அரங்கர் - திருவரங்கத்திலுள்ளவரும், முன்னாள் - முற்காலத்தில், இலங்கைவரு - இலங்கையிற்குடிபுகுந்த, கூரர் - கொடியோராகிய இராக்கதருடைய, அங்கம் - சரீரங்களை, துணித்தார் - துண்டித்தவருமாகிய, வடவேங்கடவர் - வடக்கின்கணுள்ள திருவேங்கடநாதருடைய, சரணங்கள் - இரண்டுபாதங்களும், வல்வினைகட்கு - கொடியஇருவினைகளுக்கும், இரு கூர் அரங்கள் - இரண்டுகூர்மைபொருந்திய அரங்களாகும் ; ஆதலால், சென்று - நீங்களிப்பொழுதேபோய், இரவுமின் - இரந்து கேட்டுக்கொள்ளுங்கள்.

உயிர்களே! அரங்கத்திருப்பவரும் இலங்கையரக்கரைஅழித்தவருமாகிய வடவேங்கடவருடையபாதங்கள் தீவினையாகிய இரும்புகளை அராவுகின்ற இரண்டுஅரமாகுமாதலாற்சென்று இரந்து கருணையைப்பெற்றுக்கொள்ளுங்கள்; என்பதாம். அங்கமென்றதனால் வடமொழிவேதம் ஆறங்கங்களைப்பெற்றுள்ளதுபோல நம்மாழ்வார்பாடலும் திருமங்கையார்பாடிய ஆறுபிரபந்தங்களையும் ஆறங்கமாகப்பெற்றுள்ளதென்க. தெய்வத்தமிழ்மாலையாதலால்தெய்வமலர்மணம் வீசுமென்றார். குலாவும் என்பதனை தெய்வமணத்துக்குஅடையாக்குக. கூரர் - கத்தியின் நுனிபோன்றகொடியவர். வல்வினையை இரும்பென்றமையால் இது ஏகதேசவுருவகவணி. கண்டீர் - முன்னிலையசை. (௭௯)

இரணிய நாட்ட னிரணிய னீரைந் தலையன்கஞ்சன்
முரணிய கோட்டி னகத்திற் சரத்தின்முன் றாளிற்றுஞ்சத்
தரணியிற் குத்தி யிடந்தெய் துதைத்தவன் சர்ப்பவெற்ப
னரணிய கேழ லரிரா கவன்கண்ண னாகிவந்தே.

உரை:—கேழல் - வராகமாகியும், அரி - நரசிங்கமாகியும், ராகவன் - இராமனாகியும், கண்ணனாகி - கண்ணபிரானாகியும், வந்து - அவதரித்து, இரணியநாட்டன் - இரணியாக்கனையும், இரணியன் - இரணியகசிபனையும், ஈரைந்தலையன் - பத்துத்தலைகளையுடைய இராவணனையும், கஞ்சன் - கம்ஸனையும், முரணிய - வலிமையுள்ள, கோட்டில் - தந்தத்தினாலும், நகத்தில் - நகத்தாலும், சரத்தில் - அம்புகளாலும், முன்தாளில் - முழங்காலினாலும், தரணியில் - பூமியில், துஞ்ச - இறக்கும்படி, குத்தி——, இடந்து - பறித்து, எய்து - பிரயோகித்து, உதைத்தவன் - உதைத்தவனாகிய, சர்ப்பவெற்பன் - சேடமலையிலிருக்கிற மாயோன், அரணிய - காத்தருள்வானாக; (எ - று.)

வராகமாகி இரணியாக்கனைத்தந்தத்தால்குத்தி, நரசிங்கமாகி இரணியகசிபனை நகத்தால்பிளந்து, இராகவனாகி இராவணனை அம்பாலெய்து, கண்ணபிரானாகிக் கஞ்சனை முழங்காலாலிடித்துதைத்தவனாகிய சேடமலையான் நம்மைக்காத்தருள்வானாக; என்பதாம். இப்பாடல் முறைநிரனிறையணி. உதைத்தவன் - முற்றெச்சம். குத்தி - குற்றியென்பதன் மரூஉ; குறு - பகுதி. அரணிய - வியங்கோள்முற்று. (௮௰)

வந்தித் திருக்கு மறைபோற்று வேங்கட வாணமல
ருந்தித் திருக்குங் குமமணி மார்பவுள் வஞ்சனையும்
புந்தித் திருக்கும் வெகுளியுங் காமமும் பொய்யும்விட்டுச்
சிந்தித் திருக்கும தெக்காலம் யானுன் றிருவடியே.

உரை:—இருக்கு - இருக்குமுதலாகிய, மறை - வேதங்களெல்லாம், வந்தித்து - வணங்கி, போற்று - துதிக்கின்ற, வேங்கடவாழ்ந - திருவேங்கடத்தில்வாழ்பவனே! மலர்உந்தி - தாமரைமலராகியதிருவுந்தியையுடைய, திரு - இலக்குமிதேவியாரின், குங்குமம் - குங்குமச்சந்தனம், அணி - அணியப்பெற்ற, மார்ப - மார்பையுடையவனே! உள்வஞ்சனையும் - என்மனத்தின்கணுள்ள வஞ்சனையும், புந்தி - புத்தியிலுள்ள, திருக்கும் - மாறுபாடும், வெகுளியும் - கோபமும், காமமும் - விரகமும், பொய்யும் ——, விட்டு - நீக்கிவிட்டு, யான் ———, உன் திரு அடி - உன் சிறந்தபாதங்களை, சிந்தித்து - தியானித்துக்கொண்டு, இருக்கும் அது - இருக்கின்றதானது, எ காலம் - எந்தக்காலமோ? (எ - று.)

வேங்கடவாண! மார்ப! என்வஞ்சனையுந்திருக்கும் சினமும் காமமும் பொய்யும்விட்டு நான் உன்பாதங்களைச் சிந்தித்திருப்பது எந்தக் காலம்? அருள்வாயாக என்பதாம். எப்பொழுதும் அவலக்கவலையாலழிவதனால் இவற்றையொழித்து எக்காலஞ்சிந்திப்பேனென்றிரங்கினார். எக்காலமென்றதனால் சரீரநிலையாமையும் நிலைத்திருப்பினும் மனமுதலிய மாறுபட்டிருத்தலும் அவற்றைத்திருப்பினும்மும்மலங்கள் துன்புறுத்தலும்ஆகியஇவைகளெல்லாம் நல்நெறிவருமருமைநோக்கி இரங்கியவாறாயிற்று. உந்தியைமார்பினோடு கூட்டுக. அன்றி மலர் என்பதனை - மகிழமெலரன்றுகொண்டுமகிழமலர்போலும் உந்தியென்றுதிருவுக்குக்கூட்டினுமமையும். குங்குமச்சந்தனம் - குங்குமப்பூவிட்டசந்தனம். (௬௧)

திருவடி வைக்கப் புடவிபற் றாதண்டஞ் சென்னிமுட்டுங்
கருவடி வைக்கலந் தாற்றாவெண் டிக்குங் கடன்மண்கொள்வான்
பொருவடி வைக்கன லாழிப்பி ரான்புன லாழிகட்டப்
பெருவடி வைக்கண்ட வப்பனெவ் வாறடி பேர்ப்பதுவே.

உரை:— பொரு - போர்செய்கின்ற, வடி - தீட்டிய, வை - கூர்மையாகிய, கனல் - நெருப்பைக் கக்குகின்ற, ஆழி - சக்கரத்தையுடைய, பிரான் - இறைவனும், புனல் ஆழி - கடல்நீரை, கட்ட - அணைகட்ட வேண்டி, பெருவடிவை - மிகுதியாகவடிதலை, கண்ட - செய்த, அப்பன் - திருவேங்கடத்திலுள்ளவனுமாகிய தந்தை, (தனது), திருவடி - சீர்பாதத்தில் ஒன்றனை, வைக்க - வைத்து அளப்பதற்கு, புடவி - பூமியானது, பற்றாது - போதாது; சென்னி - தலையானது, அண்டம் - இவ்வண்டத்தின்மேல் முகட்டினை, முட்டும் - மோதிக்கொண்டிருக்கிறது; எண் திக்கும் - எட்டுத்திசைகளும், (அவனது), கருவடிவை - கரிய சரீரத்தை, கலந்து - கலப்பதற்கு, ஆற்றா - இடம்போதாவாயின; (இப்படிப்பட்ட பெரியோன்), கடல் - கடல்சூழ்ந்த, மண் - உலகத்தை, கொள்வான் - தானம்பெற்றபடி அளந்துகொள்வதற்கு, அடிபேர்ப்பது - மற்றோரடியையெடுத்து வைப்பது, எஆறு - எப்படியோ? (எ - று.)

ஆழிப்பிரானும் கடல்நீரை வற்றச்செய்தவனுமான திருவேங்கடத்து அப்பன் மகாபலியிடத்து மூன்றடிமண் யாசகம் வாங்கி ஓரடி யளப்பதற்கே உலகம்போதவில்லை; தலை மேலண்டத்தில் முட்டுகின்றது; உடம்பு பருப்பதற்குத் திக்குக்களில் இடம்போதவில்லை; இப்படிப்பட்டவன் மற்றோரடியெடுத்துவைப்பது எப்படி? யென்பதாம். காண்டல்- செய்தல். கலந்து - என்பதனைக் கலக்க எனத்திரிக்க. (௬௨)

பேரானைக்கோட்டினைப் பேர்த்தானை வேங்கடம்பேணுந்துழாய்த்
தாரானைப் போதனைத் தந்தானை யெந்தையைச் சாடிறப்பாய்ந்
தூரானை மேய்த்துப்புள் ளூர்ந்தானைப் பஞ்சவர்க் குய்த்துநின்ற
தேரானை நான்மறை தேர்ந்தானைத் தேருநந் தீதறுமே.

உரை:— பேர் - பெரிய, ஆனை - குவலயாபீடமென்னும் யானையினுடைய, கோட்டினை - தந்தத்தை, பேர்த்தானை - முறித்தவனும், வேங்கடம் - திருவேங்கடமலையை, பேணும் - விரும்பியுறைகின்ற, துழாய்த்தாரானை - துளசிமாலையுடையவனும், போதனை - பிரமதேவரை, தந்தானை - பெற்றவனும், எந்தையை - எங்களிறைவனும், சாடு - சகடாசுரனை, இற - அழியும்படியாக, பாய்ந்து - தாவி உதைத்து, ஊர்

அவ்வூரிலுள்ள, ஆன்ஐ - பசுக்கூட்டத்தை, மேய்த்த ——, புள் - கருடனை, ஊர்ந்தானை - வாகனமாகக்கொண்டு செலுத்தினவனும், பஞ்சவர்க்கு - பாண்டவர்க்கு, உய்த்தாநின்ற - செலுத்திநின்ற, தேரானை - தேரினையுடையவனுமாகிய, நான்மறை - நான்குவேதங்களாலும், தேர்ந்தானை - ஆய்ந்துள்ள எம்பெருமானை, தேரும் - தெரிந்துகொள்ளுங்கள்; நும் - உங்களுடைய, தீது - தீவினை, அறும் - கெடும்; (எ - று.)

யானைக்கோட்டினைப் பேர்த்தல் முதலாகக்கூறப்பட்ட இவையெல்லாச்சிறப்பு நிறையப்பெற்ற இறைவனை யறிந்து வணங்குங்கள் உங்கள் தீவினைநீங்குமென்பதாம். அவர்கள் அறியாதிருப்பினும் இருக்கலாமென்று அறிவிக்கவேண்டி இறைவன் ஆடல்களையும் அடைந்த கீர்த்திகளையும் சேர்த்துக் கதைமுகத்தாற் கூறினர். புள் - பறவை; இங்குக் கருடனுக்காயிற்று. கருடன் வினதைமகன்; இவன் திக்குவிஜயஞ் செய்யுநாளில் எம்பெருமானிடத்திலும் போர்செய்து வெற்றிகொள்ளக் கண்ட இறைவன் உனக்கு யாது வரம் வேண்டுமென்னக் கருடன் நகைத்து உனக்கு வேண்டிய வரம் யான் கொடுப்பேன் தவறேன் கேள் என்றலும் மாயோன் நீ எனக்கு வாகனமாயிருக்க வரந்தரவேண்டுமென்ன அப்படியே யமர்ந்தனனென்பதாம். மற்றைக் கதைகள் வெளிப்படை. இப்பாடல் முரண்தொடை. ஒரு சொல்லை உடன்பாடும் எதிர் மறையும்போலக்காட்டிப் பொருள்வேறுபடுத்துச் செய்யுள்செய்வது ஏகதேசம் சிற்சில புலவர்களுக்கேயன்றி எல்லாப் புலவர்களுக்கும் இப்படிப்பாடுதலமையாது. (அ௬)

அறுகூடு கங்கை தரித்தா னயனழைத் தாலுமிச்சை
யறுகூடு மாலடி யாரடிக் கேயப்பன் வேங்கடவன்
மறுகூடு மாதரெறிபூ ணெறிக்கு மதிலரங்கன்
மறுகூடு நம்மை மருவாமல் வாழ்விப்பன் மாமனமே.

உரை :— மா - சிறந்த, மனமே - என்நெஞ்சமே! அறுகூடு - சிரத்திற்சூடியருளிய அறுகம்புல்லினுள்ளே, கங்கைதரித்தான் - கங்காசலத்தையடக்கிய ருத்திரமூர்த்தியும், அயன் - பிரமதேவனும், அழைத்தாலும் - உன்னை விரும்பி யழைத்தாலும், இச்சை அறு - அவர்கள் வார்த்தைகளில் விருப்பம்வைக்காமல் நீக்கு; மால் - மாயோனுடைய, அடியார் அடிக்கே - தொண்டர்களின் திருவடிகளிலே, கூடு - இச்சைகொண்டு அங்குச்சேர்வாயாக; ஊடும் மாதர் - கணவரொடு கோவித்தமாதர்கள், மறுகு - தெருக்களிலே, எறி-சன்னலின்வழியே விட்டெறிகின்ற, பூண் - ஆபரணங்கள், எறிக்கும் - பிரகாசிக்கின்ற, மதில் - மதிலாற் சூழப்பட்ட, அரங்கன்-திருவரங்கத்திலுள்ளவனும், அப்பன் - தந்தையுமாகிய, வேங்கடவன் - திருவேங்கடத்திறைவனானவன், நம்மை ——, மறு கூடு - வேறுசரீரத்தில், மருவாமல்- பொருந்தாமல், வாழ்விப்பன்- முத்தியிற்பொருந்தி வாழும்படிசெய்வன்; (எ - று.)

மனமே! சிவபிரானும் பிரமனும் உன்னை விரும்பியழைத்தாலும்போகாதே; மாயோனடியாரடிகளை யடைந்திரு; அரங்கனும் அப்பனுமாகிய வேங்கடவன் நம்மை மறுபிறப்பிற் புகுதவிடாமல் பரமபதத்திலிருந்து வாழச்செய்வனென்பதாம். அடிக்கு - வேற்றுமை மயக்கம். மதிலரங்கம் - மதிலின் சிறப்பு நோக்கிக்கூறியது. இவ்வாறே "மதிலரங்கத்தேயுலகை" என்றார் பிறரும். வாழ்விப்பன், வி - பிறவினைவிகுதி.

ஊடுதல் - தலைவனோடு தலைவி பிணங்குதல். இங்ஙனம் மாதர்கள் ஊடி நகைகளைக் கழற்றி யெறிவதாகப் பற்பல நூல்களில் கற்பித்திருப்பது வெளிப்படை. இத்துறை இரண்டடிப்பாகமடக்கு. (௬௪)

மாமனங் காந்தவல் வாய்ப்புள்ளை யேவ மடித்துப்பித்த
ஞமனங் காந்தவன் றோடவெய் தோனறும் பூங்கொடிக்குத்
தாமனங் காந்தன் றிருவேங் கடத்தெந்தை தாள்களிலென்
றீமனங் காந்தங் கவரூசி போலென்று சேர்வதுவே.

உரை :— மாமன - அம்மானாகிய கம்ஸன், அங்காந்த - திறந்த, வல் - வலிய, வாய் - வாயையுடைய, புள்ளை - பறவைவடிவமாகிய பகாசுரனை, ஏவ - கொல்லும்படி ஏவிடுக்க, மடித்து - அவனைக்கொன்று, பித்தன் - காம மயக்கமுடைய இராவணன், நா - தன் நாக்குக்களும், மனம் - மனமும், காந்த - வறண்டு கொதித்து, அன்று - இலங்கையில் போர்செய்த அக்காலத்தில், ஓட - தோற்று ஓடிப்போக, எய்தோன் - அம்புவிட்டபெருமானும், நறும் - வாசனைபொருந்திய, பூங்கொடிக்கு - தாமரை மலரிலிருக்கிற இலக்குமிதேவியார்க்கு, தா - வலிமை, மன் - மிக்க, அம் - அழகிய, காந்தன் - கணவனுமாகிய, திருவேங்கடத்து——, எந்தை - எங்கள் இறைவனுடைய, தாள்களில் - பாதங்களில், என் - எனது, தீ - கொடிய, மனம் - நெஞ்சமானது, காந்தம் - காந்தக்கல்லால், கவர் - இழுக்கப்படுகின்ற, ஊசிபோல் - இரும்பு ஊசியைப்போல, சேர்வது - அடைவது, என்று - எந்தக்காலத்திலோ? (எ - று.)

எய்தவனும் காந்தனுமாகிய எம்மிறைவன் தாள்களில் என்மனமானது 'காந்தமிழுக்குமிரும்புபோலச்' சேர்வது எந்தக்காலத்திலோ வென்பதாம். பித்தனைச்சிவபிரானென்றுகூறி வாணாசுரன்யுத்தத்தில் அவ்விறைவனோடும்படி அம்பெய்தானென்று பொருள்கூறுவாருமுளர். புள் - கொக்குவடிவமாகிய அசுரன்; இவன் கஞ்சனது ஏவலால் கண்ணபிரானைக்கொல்லக் கருதிவந்து கண்ணனையெடுத்துவிழுங்க நெஞ்சிற் சுடுதலும் விழுங்கமாட்டாமல் வெளியிலுமிழ அவ்வசுரனை உடனே கொன்றனனென்பதாம். அங்காந்தபுள்ளெனக்கூட்டுக. காந்துதல் - வறளுதல், கொதித்தலெனப்படுதலால் - நா வறளமனங்கொதிக்கவென்க. கொடி - உவமையாகுபெயர். (௬௫)

சேரு மறுக்கமு நோயு மரணமுந் தீவினையின்
வேரு மறுக்க விரும்பிநிற் பீர்வட வேங்கடத்தே
வாரு மறுக்க வறியா னெவரையும் வாழவருள்
கூரு மறுக்க மலையணி மார்பன்கைக் கோதண்டனே.

உரை :—சேரும் - வந்து சேர்கின்ற, மறுக்கமும் - கலக்கமும், நோயும் - வியாதியும், மரணமும் - சாக்காடும், தீவினையின் - பாவத்தினது, வேரும் - மூலமும், அறுக்க - போக்குவதற்கு, விரும்பிநிற்பீர் - விரும்பிநிற்கின்றவர்களே! (நீங்கள்), வட வேங்கடத்தே - வடதிசையிலுள்ள திருவேங்கடமலையிடத்திலே, வாரும் - வாருங்கள்;—மறு - மறுவையும், கமலை - திருமகளாரையும், அணி - தாங்கியிருக்கின்ற, மார்பன் - மார்பையுடையவனாகிய, கைகோதண்டன் - கையில் வில்லையுடைய பெருமான், மறுக்க அறியான் - நீங்கள் கேட்பதற்கு மறுத்துக்கூற அறியாதவன்; எவரையும் - எல்லாரையும், வாழ - வாழும்படி, அருள்கூரும் - மிகுந்த கருணைசெய்வான்; (எ - று.)

கலக்க முதலியவற்றைப் போக்குவதற்கு விரும்பியிருக்கின்றவர் களே! வேங்கடத்தே வாருங்கள்; மார்பணுகிய கோதண்டன் மறுத்துக் கூற அறியான்; எவரையும் வாழும்படி அருள்செய்வான்; என்பதாம். கோதண்டம்-வில்லினுக்கு ஒரு பெயராதலின் இங்குச்சார்ங்கமென்னும் வில்லுக்காயிற்று; அன்றிஇராமபிரான் கைவில்லுக்குக் கோதண்டமென்ற பெயருளதாதலின் அது வெனினுமமையும். மறுக்கம்-தொழிற்பெயர். கூறும் - செய்யுமென்னுமுற்றுப் படர்க்கை ஆண்பாலில் வந்தது. (அ௬)

கோதண்டத் தானத்தன் வாள்கதை நேமியன் கோலவட [ய்ய
வேதண்டத் தானத்த னின்னிசை யான்மண்ணும் விண்ணுமு
மூதண்டத் தானத் தவதரித் தானெனின் முத்திவினைத்
தீதண்டத் தானத் தனுவெடுத் தானெனிற் றீநரகே.

உரை:—கோதண்டத்தான் - வில்லையுடையவனும், நத்தன் - சங்கத்தையுடையவனும், வாள் கதை நேமியன் - கத்தி தண்டம் சக்கரமாகிய இவற்றையுடையவனும், கோலம் - அழகிய, வடவேதண்டத்து-வடதிசையிலுள்ள வேங்கடமலையிடத்தில், ஆன்-பசு மேய்க்கின்ற, அத்தன்-தலைவனுமாகிய, இன் இசையான் - இனியபுல்லாங்குழலை ஊதுகின்ற பெருமானானவன், மண்ணும் - பூமியும், விண்ணும் - தேவருலகும், உய்ய - பிழைக்கவேண்டி, மூதண்டம் தானத்து - பழய அண்டத்தினிடத்தில், அவதரித்தான் எனில் - அவதாரஞ்செய்தருளினனென்று சொன்னால், (அப்படிச்சொல்பவருக்கு,) முத்தியே - பரமபதம் அவசியம் கிடைக்கும்; அங்ஙனம் சொல்லாமல், வினை தீது - தீவினையின் குற்றமானது, அண்ட - வந்து சேர்தலால், தான் - அந்தக்கடவுள், அ - அந்த, தனு-மனுஷ்யசரீரத்தை, எடுத்தான் எனில்- எடுத்தானென்று சொன்னால், தீநரகே - அப்படிச் சொல்லுபவருக்குக் கொடியநரகமே கிடைக்கும்; (எ - று.)

பஞ்சாயுதமுடைய திருவேங்கடநாதன் எல்லாம் பிழைக்கவேண்டி பழைய அண்டத்தில் அவதரித்தானென்பார்க்கு முத்தியும் அப்படியன்றிப் பிறர் சாபத்தால் மனிதஜன்மமெடுத்தானென்பார்க்கு நரகுமாகும்; என்பதாம். 'ஆனத்தன் இன்னிசையான்' என்பதற்கு ஆனத்தநாட்டுக் கிறைவனாகிய இரேவதனால் புகழப்படுகின்ற இனிய கீர்த்தியையுடையவனென்றுமாம். நரகேயென்னும் ஏகாரத்தை முத்திக்குங் கூட்டுக; இது தேற்றம். சாபவரலாறு:—சலந்தரன் மனைவி பிருந்தையைத் திருமால் கற்பழித்ததனால் அவள் அதனையறிந்து நீ மனைவியை யிழந்து வருந்துகவென்று சபித்துத் தீப்பாய்ந்தனள். அந்தச்சாபத்தால் மாயோன் இராமாவதாரமெடுத்துச் சீதாபிராட்டியாரைக்கையிழந்து மீண்டு பெற்றனனென்பதாம். மண், விண் - இடவாகுபெயர்.

நரக மடங்கலுஞ் சென்றெய்த்த பாவிக்கு நாரியர்மேல்
விரக மடங்கமெய்ஞ் ஞானம் வெளிசெய வீடுபெற
வுரக மடங்க நடித்தபொற் றாளின்றெ னுச்சிவைப்பாய்
வரக மடங்கய லானாய் வடமலை மாதவனே.

உரை:—வரம் - சிறந்த, கமடம் - ஆமையும், கயல் - மீனும், ஆனாய் - ஆகி அவதரித்தவனே! வடமலை - திருவேங்கடமலையிலுள்ள, மாத

வனே - இலக்குமி நாயகனே! நரசம் - நரகங்கள், அடங்கலும் - முழுவதும், சென்று - புகுந்து, எய்த்த - இளைத்த, பாவிக்கு - பாவியாகிய எனக்கு, நாரியர்மேல் - மாதர்களிடத்தில், விரகம் - உண்டாகின்ற காமம், அடங்க - ஒடுங்கவும், மெய் ஞானம் - உண்மையறிவு, வெளிசெய - வெளிப்படவும், (அவற்றால் யான்), வீடுபெற - மோட்சமடையவும், உரகம் - காளியனென்னும் பாம்பு, மடங்க - முறிய, நடித்த - அதன் தலையில் கூத்தாடிய, பொன்தாள் - பொலிவுபெற்ற உன் திருவடிகளை, இன்று - இப்பொழுது, என் - எனது, உச்சி - தலையில், வைப்பாய் - வைத்தருளுவாய்; (எ - று.)

கூர்மமுமீனமுமானவனே! வடமலை மாதவனே! பாவியேனுக்குக் காமநீங்கவும் ஞானந்தோன்றி முத்திபெறவும் உன்பாதங்களை என் தலையில் வைப்பாய்; என்பதாம். பாவிக்கு - தன்மையைப் படர்க்கையாகக் கூறிய இடவழுவமைதி. உரகம் - மார்பினால் நகருவது; பாம்பு. மச்சாவதாரம் :— சோமகனென்னும் அசுரனொருவன் வேதங்களைக் கைப்பற்றிக்கொண்டு கடலிற் புகுந்துவிட அப்பொழுது முனிவர் வேண்டுகோளால் மாயோன் மீன்வடிவங்கொண்டு கடலிற்புகுந்து அவ்வசுரனைக்கொன்று வேதங்களை மீட்டளித்தனனென்பதாம். கூர்மாவதாரம் :— திருமால் தேவாசுரரை ஒரு சேரக்கொண்டு பாற்கடல் கடைந்தபொழுது அதில் மத்தாக நாட்டப்பட்ட மந்தரமலையானது ஆழத்திற் புதைதலும் மாயோன் ஆமைவடிவமெடுத்து அதன் கீழ்ற்சென்று அந்த மலையைத் தன் முதுகில் தாங்கினனென்பதாம். (௮௮)

மாதிரங் காதன் மனைவாழ்க்கை யென்றெண்ணி வான்பொருட்
மாதிரங் காதம் பலவளை வீரின்னு மைந்தனென்றோர் [கு
மாதிரங் காத படிவணங் கீரரி மாவொடுகைம்
மாதிரங் காதமர் செய்கின்ற சேட மலையனையே.

உரை :— காதல் - விருப்பத்தையுடைய, மனைவாழ்க்கை - இல்வாழ்க்கையானது, மா திரம் என்று - சிறந்த நிச்சயப்பொருளென்று, எண்ணி - கருதி, வான்பொருட்கு - பெரிய செல்வப்பொருளைக் கருதி, மாதிரம் - திக்குக்களில், பலகாதம் - பற்பலகாததூரம், வளைவீர் - சுற்றித்திரிகின்றவர்களே! இன்னும் - இனிமேலாகிலும், ஓர் மாது - ஒரு தாயானவள், மைந்தன் என்று - இவன் என் புத்திரனென்று, இரங்காதபடி - அன்புபாராட்டாதபடி, அரிமாவொடு - சிங்கத்துடனே, கைமா - யானையானது, திரங்காது - சோர்வடையாமல், அமர்செய்கின்ற - போர்செய்கின்ற, சேடமலையனை - சேஷகிரியீசனை, வணங்கீர் - வணங்குங்கள்; (எ - று.) இப்பாடல் யமகம்.

இல்வாழ்க்கையை நிச்சயமென்றுகொண்டு பொருள்தேடிச் சுழலுகின்றவர்களே! இன்னும் நீங்கள் பிறவியிற் புகாமல் சேடகிரியிலிருக்கிற இறைவனை வணங்குங்கள்; என்பதாம். மா + திரம் - உரிச்சொற்றொடரியல்பு. வாழ்க்கை - தொழிற்பெயர். இரங்காதபடி - படியீற்று வினையெச்சம். வளைவீர் - விளி. வணங்கீர் - ஏவற்பன்மை முற்று. சிங்கத்தோடு யானையெதிர்க்கும் மலையெனவே சிங்கம் மிக்க வலியுடையதாயிருந்தும் அதனை யானையெதிர்த்துத் தோற்கச்செய்யுமாறுபோல உங்கள் தீவினைகள்தாம் எவ்வளவு வலியுடையனவாயினும் சேடமலை அவற்றை எதிர்த்தழிக்கும் ஆற்றலுடைய புண்ணியமலையென்பதாம்.

மலையி னரக்க ருடன்றெழுந் தாரென்று மாமறைநூற்
கலையின ரக்க ருடனிந்தி ராதியர் காட்டச்செய்யுங்
கொலையின ரக்க ருடனேறும் வேங்கடக் குன்றரென்று
லுலையி னரக்கரு டந்தில ரேனுமெ னுள்ளவர்க்கே.

உரை:—அருள்தந்திலரேனும் - திருவேங்கடமுடையார் எனக்கு அருள்கொடாவிட்டாலும், மலையின் - மலைபோல, அரக்கர் - இராக்கதர், உடன்று - கோபித்து, எழுந்தார் என்று - போருக்குஎழுந்து வருகின்றார்களென்று, மா - சிறந்த, மறைநூல்கலையினர் - வேதசாஸ்திரங்களையுடைய பிரமதேவரும், அக்கர்உடன் - அக்குமாலையணிந்த உருத்திரமூர்த்தியோடு, இந்திராதியர் - இந்திரன் முதலாகிய தேவர்களும், காட்ட - சென்றுகாட்ட, (உடனே அவ்விராக்கதரை), செய்யும் கொலையினர் - கொலைசெய்தருளினவராகிய, அ - அந்த, கருடன் ஏறும் - கருடனைவாகனமாகக்கொண்டு ஏறிநடத்துகின்ற, வேங்கடம் குன்றர் என்றால் - திருவேங்கடமலையிலிருக்கின்றவரென்று சொன்னால், அவர்க்கு - அந்த இறைவரிடத்தில், என் - எனது, உள் - மனமானது, உலையின் - கொல்லன் உலைவாயிலிட்ட, அரக்கு - அரக்கேயாகும்; (எ - று.)

திருவேங்கடமுடையார் எனக்கு அருள் செய்யாவிடினும் பிரமாதியர்க்கு அரக்கர் செய்யுந் துன்பத்தை நீக்கிய வேங்கட மலையினரென்றால் அவரிடத்தில் என் நெஞ்சு உலையிலிட்ட அரக்குப்போல உருகுகின்றது; என்பதாம். ஐயிருதலையிராவணனுசராதியர் செய்யும் புன்மைக்காற்றலமென்று பிரமாதியர் முறையிட எம்பெருமான் இராமாவதாரமெடுத்து இராவணாதியரைக்கொன்றது முதலாயின இங்குக்கருதத்தக்கவை. அக்குமணி - சங்குமணி. இந்திராதியர் - தீர்க்கசந்தி. அக்கருடன், அ - பலரறிசுட்டு. உடன்று, உடல் - பகுதி. ஏனும் - எனினும் என்றது மரீஇ வழங்குவது. (௬௦)

உள்ளமஞ் சாய்வலி யாய்வலி யார்க்கு முபாயம்வல்லாய்
கள்ளமஞ் சாயுதங் கைவரு மாயினுங் கங்குலினில்
வெள்ளமஞ் சார்பொழில் வேங்கடக் குன்றினில் வீழருவிப்
பள்ளமஞ் சாரல் வழிவரில் வாடுமிப் பாவையுமே.

பொருள்—அகப்பொருள்.
திணை—குறிஞ்சித்திணை.
கிளவி—வரைவுகடாதல்.
துறை—தலைவனை, ஏதங்கூறி இரவுவரல் விலக்கல்.

உரை:—வலியாய் - வலிமையுடையவனே! (நீ) வலியார்க்கும் - வலிமையுடையவர்களுக்கும், உபாயம் - தந்திரஞ்செய்ய, வல்லாய் - வல்லமையுடையை; (இப்படிப்பட்ட உனக்கு), கள்ளம் - கள்ளத்தொழிலும், அஞ்சு ஆயுதம் - ஐந்து ஆயுதங்களின் பயிற்சியும், கைவருமாயினும் - நன்றாகவருமேயானாலும், வெள்ளம் - கருணைவெள்ளம் பொருந்திய, மஞ்சு - மேகம்போன்றவன், ஆர் - இருக்கின்ற, பொழில் - சோலைசூழ்ந்த, வேங்கடம் குன்றினில் - திருவேங்கடமலையிலிருந்து, வீழ் - விழுகின்ற, அருவி - அருவிகள்புகப்பெற்ற, பள்ளம் - மடுக்களுள்ள, அம் - அழகிய,

சாரல்வழி - மலைப்பக்கத்தின் வழியில், கங்குலினில் - இராத்திரியில், அஞ்சாய் - பயப்படாமல், வரில் - வந்தால், இ - இந்த, பாவையும் - கொல்லிப் பாவைபோல்வாளாகிய பெண்ணும், வாடும் - துன்பமடைவாள்; (எ - று.) இரவுவரல்விலக்கியது வழுவமைதி.

வலியோனே! வல்லோனே! உனக்கு எல்லாம் கைவருமானாலும் கருணைக்கொண்டலாகிய இறைவனது திருவேங்கடமலைச்சாரலில் இரவில் அஞ்சாமல் இவள்பொருட்டு நீ வந்தால் இவள் வருந்துவாளென்பதாம். அஞ்சாய் - முற்றெச்சம். கள்ளம் - தொழிற்பெயர். வல்லாய் - முன்னிலைமுற்று. வரில் - செயின் என்னும் வாய்பாட்டுவினையெச்சம் பிறவினைகொண்டது. மஞ்சு, பாவை-உவமையாகுபெயர்கள். இரவில்வருதலால் - கள்ளமென்றாள். வழியில் யானை கரடி புலி முதலாயின திரிவன நின்னை ஊறுசெய்யவந்தால் அவற்றைக்கொல்ல மாயோன் போல ஐந்தாயுதம் கைக்கொண்டாலுமென்றாள். வெள்ளம் மஞ்சு - நீரைப் பொழிகின்ற மேகமென்றால், மாயோனையே கிளவித்தலைவனாகக்கூறியதாகும்; அங்ஙனம் கூறவே இது புறத்திணையாகும்; இங்குக்கூறிய உரை பயன்படாதொழியும். ஆதலால் இப்பொழுது கூறியதே உரையாகக் கொள்க. கைகோள் - களவு. கூற்று - தோழிகூற்று. இடம் - முன்னிலை. மெய்ப்பாடு - அழுகை. பயன் - இரவுக்குறி விலக்குதல். குறிப்பு - இதன்முகத்தால் வரைவுதோன்றக்கூறியதாம். எச்சம் - ஆதலின்வரைவாயென்ற சொல்எஞ்சி நின்றது. (௬௧)

பாவை யிரங்கு மசோதைக்கு முத்துப் பதுமச்செல்விக்
கேவை யிரண்டன்ன கண்மணி நீல மிருசரணப்
பூவை யிரந்தவர்க் கின்ப வளம்புல் லசுரர்க்கென்று
மாவை யிரந்திரு வேங்கடத் தோங்கு மரகதமே.

உரை:—திருவேங்கடத்து - திருவேங்கட மலையில், ஓங்கும் - உயர்ந்திருக்கின்ற, மரகதம் - மரகதமணிபோலு நிறத்தையுடைய திருமாலானவர், பாவை - கொல்லிப்பாவையும், இரங்கும் - அழகினை நோக்கி வாடுகின்ற, அசோதைக்கு - அசோதையன்னையார்க்கு, முத்து - முத்தமிடுதற்குரிய குழந்தைவடிவாவார்; பதுமம் செல்விக்கு - தாமரை மலரிலிருக்கிற திருமகளாருக்கு, இரண்டு ———, வை - கூரிய, ஏ அன்ன - அம்புபோன்ற, கண் - கண்களிலுள்ள, மணி நீலம் - நீல மணிகளாவார்; இரு சரணம் பூவை - தம் இரண்டு திருவடித்தாமரைகளை, இரந்தவர்க்கு - யாசித்தவர்களுக்கு, இன்ப வளம் - வளப்பம் பொருந்திய பேரின்பமேயாவார்; புல் - தாழ்மையுள்ள, அசுரர்க்கு ———, என்றும் - எக்காலத்திலும், மா - பெரிய, வைரம் - பகைமையுடையராவர்; (எ-று.)

திருவேங்கடமலையிலிருக்கும் மரகதமணி வடிவுடைய திருமாலானவர் அசோதையார்க்கு முத்தமிடுதற்காவார்; திருமகளார்க்குக் கண்ணின் நீலமணிகளாவார்; தம் பாதத்தை ஆசிரயித்தவர்க்குப் பேரின்பமாவார்; அசுரர்க்குப் பகைமையாவாரென்பதாம். மரகதம் - பச்சை. மலையில் தோன்றிய ஒரு பச்சைமணி அசோதைக்கு முத்தும், திருமகட்கு நீலமும், அடைந்தார்க்கு இனிய பவளமும், அசுரர்க்கு வைரமுமாமீதென்ன வியப்பென்க. இதில் இரத்தினத்தின் பெயர்கள் ஒலித்தலையுணர்க. அசோதை - நந்தகோபன் மனைவி. வைரம் - போலி.

கடவுளை இரத்தினங்களின் பெயர் பலவாலும் அப்பொருள் ஒலிக்கவும் உரைத்தமையால் இது பலபடப்புனைவணி. (௬௭.)

மரகதத் தைக்கடைந் தொப்பித்த தொத்தன வாழ்த்தினர்தந்
நரகதத் தைத்தள்ளி வைகுந்த நல்கின நப்பின்னையாம்
விரகதத் தைக்கு விடையேழ் தழுவின வேங்கடவன்
குரகதத் தைப்பிளந் தான்றோள்க ளாகிய குன்றங்களே.

உரை:—குரகதத்தை - குதிரையை, பிளந்தான் - பிளந்தவனாகிய, வேங்கடவன் - திருவேங்கடநாதனுடைய, தோள்களாகிய ———, குன்றங்கள் - மலைகள், மரகதத்தை - பச்சை ரத்தினத்தை, கடைந்து - கடைதல்செய்து, ஒப்பித்தது - அலங்கரித்ததை, ஒத்தன - ஒப்பாயிருந்தன; வாழ்த்தினர்தம் - துதித்தவர்களுடைய, நரகம் தத்தை - நரகமாகிய ஆபத்தை, தள்ளி - போக்கி, வைகுந்தம் - வைகுண்ட பதவியை, நல்கின - கொடுத்தன; நப்பின்னை ஆம் - சிறந்தபின்னைப் பிராட்டியாராகிய, விரகம் - காமவிரகத்தையுடைய, தத்தைக்கு - கிளிபோல்பவர் நிமித்தமாக, ஏழ் விடை - ஏழு காளைகளை, தழுவின - பிடித்துக்கட்டின.

வேங்கடத்தான் தோள்கள் ஒத்தன, நல்கின, தழுவின என்பதாம். குரகதம் - குளம்பினால் நடப்பது. ஆகியகுன்றம் - இடைச்சொற்றொடர். நரகதத்து, விரகதத்தை - எதுகை நோக்கி யிரட்டியாது நின்றன. வைகுந்தம் - வைகுண்ட மென்னும் வடமொழித்திரிபு. நப்பின்னை, ந - சிறப்புப் பொருளுணர்த்திய இடைச்சொல்; நக்கீரர், நப்பாலத்தனார், நப்பூதனார், நச்செள்ளையார், நக்காஞ்சி என்பன போலக் கொள்க. விடை - முதனிலைத் தொழிற்பெயர்: தனித்தமிழ்மொழி; விடைத்தல்- துள்ளுதல்; தொழிலாகுபெயராய்க்காளைக்குவந்தது.

நப்பின்னையார் கதை:—அயோத்திக்கரசனாகிய நக்கினசித்து என்பவன் தன் மகள்மிக்க அழகினளாகிய சத்தியவதி யென்பவளுக்கு திருமணப்பருவம் வருதலும் அரசன் தன் மந்தையிலுள்ள ஏழு காளைகளைப் பிடித்துக் கட்டுபவற்கு என் மகளைத் தருவேனென இதனை அறிந்த கண்ணபிரான் அங்குச்சென்று அக்காளைகள் அசுரவடிவின வென்பதை யறிந்து தான் தனித்தனி ஏழுவடிவங்கொண்டு அவற்றைப் பிடித்துக் கட்டிவிட்டு அவளை மணஞ் செய்துகொண்டான்; அவளையே நப்பின்னையென்று வழங்குவர். (௬௮.)

குன்றாக ளத்தனை யுங்கட றூரக் குவித் திலங்கை
சென்றா களத்தனை வோரையு மாய்த்துத் திருச்சரத்தா
லன்று களத்தனை யட்டானை யப்பனை யாய்மகடோ
டுன்று களத்தனை யேத்தவல் லார்க்கில்லை துன்பங்களே.

உரை:—அத்தனைகுன்றுகளையும் - அவ்வளவு மலைகளையும், கடல் - சமுத்திரத்தில், தூர - தூர்ந்துபோம்படி, குவித்து - அடுக்கிக்கரைசெய்து, இலங்கைசென்று - இலங்காபுரியிற்புகுந்து, அன்று - அந்நாளில், அனைவோரையும் - இராக்கதரெல்லாரையும், களத்து - யுத்தகளத்தில், திருசரத்தால் - சிறந்தஅம்பினால், மாய்த்து - அழித்து, கள்ளத்தனை - கள்ளத்தனமுடைய இராவணனை, அட்டானை - அழித்தவனும், ஆய்மகள் - இடைப்பெண்களுடைய, தோள் - கைகள், துன்று - பொருந்திய, களத்

தனை - கண்டத்தையுடையவனுமாகிய, அப்பனை - திருவேங்கடத்தெந்தையை, ஏத்த - துதிக்க, வல்லார்க்கு - அறிந்தவர்களுக்கு, துன்பங்கள் - பிறவித்துன்பங்கள், இல்லை - உண்டாவதில்லை ; (எ-று.)

இலங்கையில் இராவணாதியரைக்கொன்றவனும் கண்டத்தனுமாகிய அப்பனைத் துதிப்பவர்க்குப்பிறவித்துன்பங்களில்லையென்பதாம். குன்றுகளத்தனையும் என்பதன் உம்மை பிரித்துக்கூட்டப்பட்டது. கள்ளத்தன் - தொகுத்தல்விகாரம். ஆய்மகள் - முல்லைநிலத்தலைவி. கண்ணபிரான் ஆயர்மகளிரையணைந்தவனாதலின் அதனையேயிங்குக்கூறினர்.

துன்பங் களையுஞ் சனனங் களையுந் தொலைவறுபே
ரின்பங் களையுங் கதிகளை யுந்தரு மெங்களப்பன்
றன்பங் களையும் படிமூ வரைவைத்துத் தாரணியும்
பின்பங் களையு மிழுதுமுண் டானடிப் பேர்பலவே.

உரை :—தன்பங்கு - தன்னிடத்தில், அளையும்படி - பொருந்தியிருக்கும்படி, மூவரை - சிவபிரானையும் பிரமனையும் இலக்குமியையும், வைத்து - வைத்துக்கொண்டு, தாரணியும் - பூமியும், பின்பு - பிற்பட்டு, அங்கு - அவ்விடத்தில், அளையும் - தயிரும், இழுதும் - வெண்ணெயும், உண்டான் - உண்டவனாகிய, எங்கள் அப்பன் - திருவேங்கடத்திலிருக்கும் எங்கள் தந்தையாவானுடைய, அடி - பழமையாகிய, பேர்பல - பலவாகிய திருப்பெயர்கள், (தம்மை உச்சரிப்பவர்களுக்கு,) துன்பம் - வருகிறதீவினைகளை, களையும் - போக்கும் ; சனனம் - பிறவியை, களையும் - போக்கும் ; தொலைவு அறு - நீங்காத, பேரின்பங்களையும் - பெரியஇன்பங்களையும், கதிகளையும் - மற்றும்விரும்பிய நற்கதிகளையும், தரும் - கொடுக்கும்; (எ-று.)

உண்டவனாகிய அப்பனுடைய திருநாமங்கள் துன்பத்தையும் பிறப்பையும் போக்கும் ; பேரின்பத்தையும் நற்கதியையும்தரும் ; என்பதாம். சிவபிரானை வலப்பாலுடைமையாலும் பிரமதேவனைத் திருவுந்தியிலுடைமையாலும் திருமகளாரை மார்பிலுடைமையாலும் பங்களையும்படி மூவரைவைத்தென்றார். இதுபற்றி முன் (கஎ) ஆம்பாடலில் ''சுடர் நயனத், தொழும்பாலனையொரு கூறுடையான்'' என்றார் இவ்வாசிரிரும். அன்றி ''சைய வலம்புரியு நேமியுங் கார்வண்ணத், தைய மலர்மகணின் னாகத்தாள் - செய்ய, மறையானின் னுந்தியான் மாமதின்மூன் றெய்த, இறையானின் னாகத் திறை'' என்று பொய்கையாரருளிய பாடலாலுமறிக. (௩௫)

பலகுவளைக்குட் சிலகஞ்சம் போலும் படிவவப்ப
னலகு வளைக்குமு னுண்டானின் மாட்டு நணுகிலனே
வுலகு வளைக்குங் கடலேநின் கண்முத் துகுத்திரங்கி
யிலகு வளைக்குலஞ் சிந்தித்துஞ் சாயின் றிராமுற்றுமே.

பொருள்—புறப்பொருள்.
திணை—பாடாண்டிணை.
பகுதி—கடவுளை மானிடமாதர் காதலித்தது.
துறை—காம மிக்க கழிபடர் கிளவி.
(தலைவிக்குங் கடலுக்குஞ் சிலேடை.)

உரை:—உலகு - இவ்வுலகத்தை, வளைக்கும் - சூழ்ந்திருக்கிற, கடலே - சமுத்திரமே! நின்கண் - உன்னிடத்திலுள்ள, முத்து - முத்துக்களை, உகுத்து - கரையில்ஒதுக்கி, இரங்கி - பேரொலிசெய்து, இலகு - விளங்குகின்ற, வளைக்குலம் - சங்கின்கூட்டங்களை, சிந்தி - அலையிலெடுத்தெறிந்து, இன்று - இன்றைத்தினம், இராமுற்றும் - இராத்திரிமுழுவதும், துஞ்சாய் - ஓய்கின்றனையில்லை; பல - பலவாகிய, குவளைக்குள் - நீலோற்பலங்களுக்குள், சில - சிலவாகிய, கஞ்சம்போலும் - தாமரைமலர்போல்கின்ற, படிவம் - வடிவத்தையுடைய, அப்பன் - திருவேங்கடத்திலிருப்பவனும், நல் - நல்ல, கு - பூமியை, அளைக்குமுன் - வெண்ணெயுண்பதன்முன், உண்டான் - உண்டவனுமாகிய மாயோன், நின்மாட்டும் - உன்னிடத்திலும், நணுகிலனே - அடைந்திலனோ? (எ-று.)

கடலே! கண்முத்துதிர்த்து வளைசிந்தி இரங்கி இராவுமுற்றும் துஞ்சாயில்லை; வேங்கடத்தப்பனாகிய மண்ணுண்டபெருமான் உன்னிடத்திலும் வந்தானில்லையோ? என்பதாம். உலகமுண்டானென்றதனால் தலைவன்பெருமையும் நின்மாட்டும்என்ற உம்மையால் தன்னை நீத்ததனறியெனப்பொருள்படுதலால், தானும் அக்கடல்போலக் கண்முத்துதிர்த்திரங்கி வளைசிந்திவிட்டு இராமுழுதுந்தூங்காதிருக்கிற தன்சிறுமையும் கூறினாளாம். தலைவியைக்கூறுமிடத்து கண்முத்து - கண்ணீர். இரங்குதல் - புலம்புதல். வளை - கையிலணிந்திருக்கிறவளை. குவளை - மாயோன் சரீரத்திற்கும், தாமரை - முகம், கண், கை, கால் முதலிய சிலஉறுப்புக்களுக்கும் உவமை. நணுகிலனே, ஓ - வினா. (௯௬)

முற்றிலைப்பந்தைக் கழங்கைக்கொண் டோடினை முன்னும்பின்னு
மற்றிலை தீமை யவைபொறுத் தோந்தொல்லை யாலினிளங்
கற்றிலை மேற்றுயில் வேங்கட வாவின்றுன் கான்மலராற்
சிற்றிலைத் தீர்த்ததற் குப்பெரு வீட்டினைச் செய்தருளே.

பொருளும், திணையும் அவை.
பகுதி—இழையணி மங்கைய ரீறில் காமங்
குழவி மருங்கிற் கூறிய பகுதி.
துறை—கண்ணனை ஆயர் சிறுமியர் கழறுதல்.

உரை:—தொல்லை - பண்டைநாளில், ஆலின் - ஆலமரத்தினது, இளம் கற்று இலைமேல் - மிக்க இளமையாகிய இலைமேல், துயில் - யோகநித்திரை செய்தருளிய, வேங்கடவா - திருவேங்கடநாதனே! முன்னும் - இதற்குமுன்னேயும், முற்றிலை - சிறிய முறத்தினையும், பந்தை - பந்தினையும், கழங்கை - கழற்கொடிக்கொட்டையையும், கொண்டு - நீ கையிலெடுத்துக்கொண்டு, ஓடினை - ஓடிப்போயினை; பின்னும் - மறுபடியும், தீமை - உன்கெட்டசெய்கைகளை, அற்றிலை - நீக்கினையில்லை; அவை - அப்படி நீ செய்தனவெல்லாம், பொறுத்தோம் - நாங்கள் பொறுத்திருந்தோம்; இன்று - இன்றைக்கு, உன் - உன்னுடைய, கால்மலரால் - திருவடித்தாமரைகளால், சிற்றிலை - (யாங்கள் தெருவில் மணலாற்கட்டிய) சிறிய வீட்டினை - தீர்த்ததற்கு - (அழித்துவிட்டனை; அப்படி) அழித்ததற்கு, பெருவீட்டினை - (பிரதியாகப்) பெரிய வீட்டினை, செய்தருள் - கட்டித்தந்தருள்வாய்காண்; (எ - று.)

ஆலிலைமேல் நித்திரைசெய்தருளிய திருவேங்கடமுடையவனே! முன் எங்கள் முறத்தையும் பந்தையும் கழற்காயுங் கொண்டோடிப்போயினை; இன்னும் பொல்லாங்குவிட்டிலை; இப்பொழுது எங்கள் சிற்றிலைக் காலாலழித்தனை; அதற்கு ஈடாக நீ பெரியவீடு கட்டிக்கொடுத் தருளென்பதாம். முற்றில் - முச்சிலென்று இக்காலத்தில் வழங்குகிறது. இது - மணலைக்கொழித்து விளையாடுதற்கு உடன் வைத்துக் கொள்வது. முற்றில் முதலாயினவற்றைக் கொண்டோடியதுமன்றிப் பூமாலை, மரப்பாவை, முதலியவற்றையும் இன்றுபறித்தமையால் பின்னுந் தீமையற்றிலையென்றார். உன்மீது காமமிக்கிருத்தலினால் அவை பொறுத்தோமென்றார். நீயும் எங்கள் பால்விருப்பையுடையையோவென்ற கருத்தால் இப்பொழுது காலாலெம்சிற்றில்லையழித்தனை யென்றார். மீண்டும் எங்கள் கூட்டத்திற்புகுந்து இதனைக் கட்டித்தருதற்கு வருவாயேயானால் எங்கள்பால் நீ வைத்திருக்கிற காமமும் உண்மையேயென்ற கருத்தால் பெருவீட்டினைச் செய்தருளென்றார். முற்றிலை முதலியவற்றில் எண்ணும்மை தொக்கதுசெய்யுள் விகாரம். கன்று - மென்றொடர்: வன்றொடராயிற்று; இளமையைக்குறித்தது. கால்மலர் - மலர்க்காலென்று கூறி முன்பின்னாகத் தொக்கஉவமத்தொகையெனினுமாகும். சிற்றில் - பண்புத்தொகை. "சுடர்த்தொடீ கேளாய் தெருவில் நா மாடும், மணற்சிற்றில் காலிற் சிதையா வடைச்சிய, கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி, நோதக்க செய்யுஞ் சிறு பட்டி - மேலோர் நாள்" என்றகலிப்பாட்டின் கருத்தினையும் "வரிப்பந்து கொண்டொளித்தாய் வாள்வேந்தன் மைந்த, வரிக்கண்ணியஞ்சியலற" என்றபுறப்பொருட் செய்யுட்கருத்தினையுந் தழுவியிருத்தல்காண்க. இனிப் பகுதியுள் "மருங்கு என்றதனால் மக்கட்குழவியாகிய ஒரு மருங்கே கொள்க; தெய்வக்குழவியின்மையின்" என்று கூறி மக்கட்குப் பிள்ளைத் தமிழ் விதி கூறினாரெனின் தெய்வக்குழவி யுண்டென்று இக்காலத்தில் பிள்ளைத் தமிழ் செய்கின்றமையாலும் இங்குக் கூறியதுறையானது இறைவன் கண்ணபிரானாக அவதரித்த இடத்தில் அந்தக்கண்ணபிரானை நோக்கி ஆயரின் சிறு பெண்கள் கூறியதாகக் கூறியிருப்பதனாலும் அமையு மென்க. (௬௭)

அரும்பா தகன்பொய்யன் காமுகன் கள்வ னருள்சிறிது
மரும்பாத கன்னெஞ்ச னாறாச் சினத்த னவாவினின்றுந்
திரும்பாத கன்மத்த னேனற்குச் சேடச் சிலம்பமர்ந்த
திரும்பாத கஞ்சந் தரிலது காணுன் றிருவருளே.

உரை:—அரும் - நரகில்நின்று மீளுதற்கரிய, பாதகன் - பாவச்செய்கையுடையவனும், பொய்யன் - பொய்கூறுபவனும், காமுகன் - காமியும், கள்வன் - திருடனும், அருள் - கருணையானது, சிறிதும் - சிறிதேனும், அரும்பாத - வெளிப்படாத, கல் நெஞ்சன் - கற்போன்ற மனத்தையுடைவனும், ஆறா - தணியாத, சினத்தன் - கோபத்தையுடையவனும், அவாவில் நின்றும் - ஆசையிலிருந்தும், திரும்பாத - மீளாத, கன்மத்தன் ஆனேற்கு - செய்கையுடையவனுமாகிய எனக்கு, சேடச்சிலம்பு - ஆதிசேடன் வடிவாகிய மலையில், அமர்ந்து - பொருந்தி, அதிரும் - ஒலிக்கின்ற, பாதகஞ்சம் - தாமரை போன்ற திருவடியை, தரில் - தந்தால், அது - அப்படித்தருவதானது, உன் - உனது, திருவருள்காண் - பெரிய கருணை காண்; (எ - று.)

பெரும்பாவியாகிய எனக்கு அனந்த மலையிலதிரும் உன் திருவடியைத்தந்தால் அதுதான் உன் திருவருள் என்பதாம். காண் - முன்னிலையசையுமாம். அரும்பாதகம் - ஐம்பெரும்பாதகம்; அவை:—"பஞ்ச பாதகம், கொலை, களவு, கள்ளுண்டல், எஞ்சலில் குருநிந்தை, பொய்யுமென்ப" என்பதாம். பொய்யாவது செய்த ஒன்றனைச் செய்திலேனென்றல். காமுகன் - மாதர்பால் விரகங்கொண்டு மயங்கித்திரிபவன். கள்வன் - பிறர்க்குரியதைத்திருடுபவன். அருள் சிறிதுமில்லாத நெஞ்சு - பிறவுயிர்கள் வருந்துவதைக்கண்டு இரங்காத நெஞ்சு. ஏனைய - வெளிப்படை. (௧௮)

திருமந் திரமில்லைச் சங்காழி யில்லைத் திருமணில்லைத்
தருமந் திரமொன்றுஞ் செய்தறி யீர்செம்பொற் றானவனை
மருமந் திரங்கப் பிளந்தான் வடமலை வாரஞ்செல்லீர்
கருமந் திரண்டதை யெத்தாற் களையக் கருதுகிரே.

உரை:—திருமந்திரம் - சிறந்த அஷ்டாட்சரத்தை, இல்லை - உச்சரிப்பதாயில்லை; சங்கு - தோளிற்குறியாகிய சங்கமும், ஆழி - சக்கரமும், இல்லை———; திருமண் இல்லை - திருமண்காப்பில்லை; திரம் - நிலையுள்ள, தருமம் ஒன்றும் - யாதொருதர்மமும், செய்து அறியீர் - செய்து பார்த்தீரில்லை; செம்பொன் தானவனை - சிவந்தபொன்னின் மறுபெயருடையவனாகிய அசுரனை, (இரணியகசிபனை). மருமம் - மார்பு, இரங்க - வருந்தும்படி, பிளந்தான் - பிளந்தமாயோனது, வடமலை வாரம் - திருவேங்கடமலை அடிவாரத்திலும், செல்லீர் - சென்றறியீர்; கருமம் திரண்டதை - தீவினையின் மிகுதியை, எத்தால் - எந்தவழியில், களைய - போக்குவதற்கு, கருதுகிர் - நினைக்கின்றீர்? (எ - று.)

திருமந்திர முதலியனவற்றுள்ள யாதேனுமுளதெனில் பிறப்பறுக்கலாம் அதுவுமில்லை; தருமமுஞ்செய்தீரில்லை; பிளந்தவனது வடமலைப் பக்கத்தும் சென்றறியீர்; உங்கள் தீவினையை யெவ்வண்ணம் போக்குவீர்? என்பதாம். மந்திரம், தருமம், திரம், மருமம், கருமம் - இவை வடசொற்கள். செம்மை - பொன்னுக்கடைமொழி. தருமமாவன:—"மெய்மை பொறையுடைமை மேன்மை தவமடக்கம், செம்மையொன்றின்மை துறவுடைமை - நன்மை, திறம்பா விரதந் தரித்தலோ டின்ன, வறம்பத்து மான்ற குணம்" என்பதனாலறிக. எத்தால், த் - விரித்தல் விகாரம். கருதுகிர் - நிகழ்கால வினைமுற்று. (௧௯)

கருமலை யும்மருந் துங்கண் ணுமாவியுங் காப்புமவன்
றருமலை யுந்திய பேரின்ப வெள்ளமுந் தாய்தந்தையும்
வருமலை யுந்திருப் பாலா ழியுந்திரு வைகுந்தமுந்
திருமலை யும்முடை யானெனக் கீந்த திருவடியே.

உரை:— வரும் - நிலைபெற்ற, மலையும் - திருக்கடன்மல்லையும், திரு பால் ஆழியும் - திருப்பாற்கடலும், திருவைகுந்தமும் - பரமபதமும், திருமலையும் - திருவேங்கடமலையும், உடையான் - உடையவனாகிய இறைவன், எனக்கு———. ஈந்த - கொடுத்த. திருவடி - சீர்பாதங்கள், கரு - பிறப்பை, மலையும் - கெடுக்கின்ற, மருந்தும்———, கண்ணும் - என் கண்களும், ஆவியும் - என்னுயிரும், காப்பும் - என்னைக் காத்தலும், அவன் தரும் - அவன் கொடுத்தருளுகின்ற, அலை உந்திய -

அலைவீசுகின்ற, பேர் இன்பம் வெள்ளமும் - பேரானந்தப்பெருக்கும், தாய் - அன்னையும், தந்தையும் ஏ - பிதாவுமாகும்; (எ - று.)

கடல்மல்லை முதலாகிய இடங்களையுடைய திருவேங்கடநாதன் எனக்கருளிய திருவடிகள் மருந்தும், கண்ணும், உயிரும், காவலும், பேரின்ப வெள்ளமும், தாய்தந்தையுமாகும்; என்பதாம். மலையும் மருந்தும்———, மகரம்விரித்தல் விகாரம், தாய்தந்தை - பொதுப் பெயராதலின் பலர்பால் விகுதிபெறுமல் நின்றது. கடல்மல்லை - மகாபலிபுரம். மலையும்முடையான் - இதுவும் மகரம் விரித்தல் விகாரம். ஏகாரம் -பிரித்துக்கூட்டப்பட்டது. இறைவன் திருவடியை மருந்தென்றதனால் இது ஏகதேசவுருவகவணி. (க00)

மட்டளை தண்டலை சூழ்வட வேங்கட வாணனுக்குத்
தொட்டளை யுண்ட பிரானுக்கன் பாம்பட்டர் தூயபொற்று
ளுட்டளை யுண்ட மணவாள தாச னுகந்துரைத்த
கட்டளை சேர்திரு வந்தாதி நூறு கலித்துறையே.

உரை:—பட்டர் - பட்டரென்னும் ஆசிரியருடைய, தூய - பரிசுத்தமாகிய. பொன் தாள் - பொலிவுபெற்ற திருவடிகள், உள் தளையுண்ட - மனத்தினுள்ளே பிணிக்கப்பெற்ற, மணவாளதாசன்———, உகந்து - மகிழ்ந்து, உரைத்த - பாடிய, திருஅந்தாதி - சிறந்த அந்தாதியாகிய, நூறு - நூறென்னும் எண்ணினையுடைய, கட்டளைசேர்கலித்துறை - கட்டளைக்கலித்துறைகள், மட்டு - தேனானது, அளை - வழியப்பெற்ற, தண்டலை - சோலைகள், சூழ் - சூழ்ந்த, வடவேங்கடவாணனுக்கு - வடக்கின் கண்உள்ள திருவேங்கடத்தில்வாழ்பவனாகிய. அளை - தயிரை, தொட்டு உண்ட - எடுத்து அருந்திய, பிரானுக்கு - இறைவனுக்கு, அன்புஆம் - அன்புபொருந்தியதாகும்; (எ - று.)

பட்டரென்னும் ஆசிரியருடைய திருவடிகளை வணங்குகிற மணவாளதாசன் உரைத்த இந்த அந்தாதி நூறுதுறைகளும் வேங்கடவாணனுக்குமிகுந்த பிரியமுடையனவாகுமென்பதாம். பட்டர் - கூரத்தாழ்வார் மைந்தர்; இதனை "வானிட்டகீர்த்தி வளர்கூரத்தாழ்வான்" என்ற பாடலில் "நானிட்டனென்றருள்பட்டர்" என்றதனாலும் அறிக; (திருவரங்கக்கலம்பகம் காப்புச்செய்யுள் 4) இதனால் இவர்கள்காலம் சற்றேறக்குறைய எண்ணூறு வருஷத்துக்கு முன்னராகிறதென்பர்சிலர்: வெகுசமீபகாலத்திலுள்ள ஆழ்வாராதியர்கள் கலியுகஆரம்பத்திலும் துவாபரயுகத்திலுமிருந்ததாக ஒவ்வொரு ஆழ்வாருக்கும் வருஷம், மாதம், தேதி. நாழிகை, லக்கினம், வீடு, இடம், தாய், தந்தை, சுற்றத்தார். முதலியவும் கற்பித்தெழுதியதனை வலியுறுத்தவோர் இவ்வாசிரியரையும் அவ்வாழ்வார்கூட்டத்திற்படுத்தாது இம்மட்டோடு விட்டனரேயென்று யாவருமகிழ்வார்களாக. இப்பாடல் நூலாசிரியர் செய்ததென்பர்; இங்ஙனம் ஆசிரியர் தாமே பாயிரம் கூறுதல் பண்டை வழக்கு. ஆழ்வாராதியர் தாமேதம்மைப்பிறர்போற்கூறலும் சைவசமயாசாரியர்சிலர் தம்பதிகத்தீற்றில் தாமேதம்மைப் பிறர்போற்கூறுதலும்நோக்குக.

திருவேங்கடத்தந்தாதி மூலமும் உரையும்

முற்றுப்பெற்றன.